பக்கங்கள் : பதினெட்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆனி 22 புதன்கிழமை (06.07.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :222

### ஜனாதிபதித் தேர்தல் அடுத்த ஆண்டில்தான்

# புலிகளின் ஆதரவும் இருப்பதால் அரசு கவிழ வாய்ப்பே இல்லை!

## உறுதியாகக் கூறுகின்றார் ஜனாதிபதி

கொழும்பு,ஜூலை6

✦ ஜனாதிபதித் தேர்தல் அடுத்த ஆண்டு இறுதியில்தான். எனவே, அதற்காக இப் போதைக்கு நேரத்தை விரயமாக்காதீர்கள்.

✦ அரசு கவிழும் என்ற பேச்சுக்கே இடமில்லை. அரசைக்கொண்டு நடத்துவதற்குத் தேவையான முழுமையான ஆதரவை வழங்குவதற்கு விடுதலைப் புலிகளும் உறுதியளித்துள்ளனர். எனவே, அரசு கவிழவே கவிழாது.

- இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

இவ்வருடத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடக்கவே நடக்காது, அதற்காக நேரத்தை விரயமாக்காதீர்கள், அரசைக்கொண்டு நடத்துவதற்குப் போதியளவு பலமிருக்கிறது. அபிவிருத்தித் திட்டங்களுக்கு முன்னுரிமையளித்து மக்களின் மனதில் இடம்பிடியுங்கள், எவ்வாறாயினும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்கு இப்போதே தயாராகுங்கள்.

- இவ்வாறு ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்தார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

ஆளுங்கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது.

(18ஆம் பக்கம் பார்க்க)

## பாணந்துறையில் தமிழ் இளைஞர்கள் இருவர் நேற்றுக் கைது

கொழும்பு,ஜூலை6

பாணந்துறை, பண்டாரகம என்ற இடத்தில் நேற்று திடீர்த் தேடுதல் நடத்திய விசேட குற்றத்தடுப்புப் புலனாய்வுத்துறைப் பொலீஸார் இரு தமிழ் இளைஞர்களைக் கைது செய்தனர்.

அவர்களிடம் இருந்து துப்பாக்கிகள் சிலவும் எடுக்கப்பட்டன என்று தெரிவிக்கப் பட்டது.

கைது செய்யப்பட்ட இளைஞர்கள் இருவரும், இராணுவ புலனாய்வுத்துறை முக்கி

(18ஆம் பக்கம் பார்க்க)




வன்னியில் பிரத்தியேக இடம் ஒன்றில் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் கரும்புலிகள் நினைவாக கப்டன் மில்லரின் திருவுருவப்படத்துக்கு சுடரேற்றி மாலை அணிவிப்பதையும், பொதுச்சுடரேற்றி அகவணக்கம் செலுத்துவதையும் படங்களில் காணலாம்.

## கரும்புலி மில்லரின் நினைவிடத்தில் பெருந்திரளானோர் கூடி அஞ்சலி!

வடமராட்சி,ஜூலை6

தமிழீழ விடுதலை வேள்வியில் உயிராயுதமாகித் தம் இன்னுயிர்களை ஆகுதியாக்கிய கரும்புலிகளின் தினத்தின் பிரதான நிகழ்வு முதலாவது கரும்புலி மில்லர் தன்னை ஆகுதியாக்கிய நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நேற்று இரவு உணர்வு பூர்வமாகவும், எழுச்சிபூர்வமாகவும் நடைபெற்றது.

நேற்றுமாலை 6.45 மணியளவில் நெல்லியடிச் சந்தியிலிருந்து, கரணவாய் பொன்னம்பல வித்தியாலய மாணவர் குழுவின் மங்கள இன்னிசை வாத்தியம் மற்றும் மூன்று பாடசாலைகளின் மாணவ, மாணவிகளின் பாண்ட் வாத்தியம் என்பன ஒன்றன்பின்னாக ஒலிகக, தொடர்ந்து, நாதஸ்வர மேளம் ஒலிக்க முத்துச் சப்பரம் போல வடிவமைக்கப்பட்ட கரும்புலி கப்டன் மில்லர், பொதுக்கரும்புலி உருவம், கடற்கரும்புலி மேஜர் அங்கயற்கன்னி ஆகியோரின் உருவப்படங்கள் வைக்கப்பட்டு பொதுமக்களால் சுமந்துவரப்பட்டன.

கரும்புலிகள் 247 பேரினதும் உருவப் படங்கள் வாகனம் ஒன்றில் மலர் படுக்கை போல வைக்கப்பட்டு, பெருந்திரளான மக்கள்

(18ஆம் பக்கம் பார்க்க)

## பொலன்னறுவையில் ஒருவர் சுட்டுக்கொலை

கொழும்பு,ஜூலை6

பொலன்னறுவை முஸ்லிம் கொலனியில சிகை அலங்கரிப்பு நிலைய உரிமையாளர் ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

மகாலிங்கம் அருள்நாதன் அல்லது நாஸர் (வயது-29) என்ற நபரே கொல்லப்பட்டவர் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

இவர் வவுனியாவைச் சேர்ந்தவர் என்றும் - கடந்த மூன்று வருடங்களாக பொலன்

(18ஆம் பக்கம் பார்க்க)

## உதவியாகக் கிடைத்த உபகரணங்களை மீனவர்கள் விற்பதாக முறைப்பாடு

### தடுத்து நிறுத்தக் கோருகிறார் அரச அதிபர்

யாழ்ப்பாணம்,ஜூலை6

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் மறுவாழ்வுக்காகத் தொண்டு நிறுவனங்கள் வழங்கும் மீன்பிடி வள்ளங்கள் மற்றும் உபகரணங்களைச் சிலர் விற்பனை செய்வதாகத் தகவல் கிடைத்துள்ளது. இதை உடன் நிறுத்துமாறு யாழ். அரச அதிபர் கே.கணேஷ் அன்பான வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள வேண்டுகோளில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களை அவர்களது பாதிப்பின் அடிப்படையில் மீன்பிடிச் சங்கங்களின் மூலம் தெரிவுசெய்கின்றோம். பின்னர் தெரிவுசெய்யப்படுபவர்களுக்குப் படகுகள், வள்ளங்கள் மற்றும் மீன்பிடி, உபகரணங்களைத் தொண்டு நிறுவனங்கள் மூலம் வழங்கிவருகின்றோம். ஆனால், சிலர் இத்தகைய உதவிப் பொருள்களைப்

(18ஆம் பக்கம் பார்க்க)

## சிவராம் கொலைச் சந்தேகநபர் அடையாளம் காணப்படவில்லை

கொழும்பு,ஜூலை6

பிரபல பத்திரிகையாளர் மாமனிதர் சிவராம் படுகொலை தொடர்பாக நேற்று கடுவெல நீதிமன்றில் இடம்பெற்ற அடையாள அணிவகுப்பில் சந்தேகநபர் அடையாளம் காட்டப் படவில்லை. வழக்கின் 6 சாட்சிகளில் ஒருவரும் சந்தேகநபரை அடையாளம் காணவில்லை.

அடையாள அணிவகுப்பு கடுவெல நீதிவான் சம்பா ஜானகி ராஜரட்ண முன்னிலையில் நேற்றுக்காலை நடைபெற்றது. வழக்கின் முக்கிய சந்தேக நபரான ஆறுமுகம் ஸ்ரீஸ்கந்தராஜா அல்லது பீற்றர் என்பவருக்கு எதிராகப் போதுமானளவு சாட்சியங்கள் இல்லையென்பதால் அவரை விடுதலை செய்யுமாறு சந்தேகநபர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ஏ.எல்.எம்.அமீன் நீதிமன்றில் கோரிக்கை விடுத்தார். அதனை நிராகரித்த நீதிவான், சந்தேக நபரை எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

சந்தேகநபருடன் கைதுசெய்யப்பட்ட சமயம் கைப்பற்றப்பட்ட வாகனத்தை விடுவிக்குமாறு சட்டத்தரணி நீதிவானிடம் கோரிக்கை

(18ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



நெல்லியடியில் நேற்றுமாலை நடைபெற்ற கரும்புலிகள் தின நிகழ்வுகளில் பான்ட் வாத்திய அணிவகுப்பையும் மாவீரர் பெற்றோர் அழைத்துச் செல்லப்படுவதையும் மில்லரின் சிலைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவனேசன் மலர்மாலை அணிவிப்பதையும் அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பருதி பொதுச்சுடர் ஏற்றுவதையும் மில்லரின் தாயார் வ.கமலாதேவி ஈகச் சுடர் ஏற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:சி.சுந்தரலிங்கம்)

# அடுத்த ஜனாதிபதித் தேர்தலை இந்த ஆண்டே நடத்தவேண்டும்

## தேர்தல் ஆணையாளரிடம் ரணில் கோரிக்கை

கொழும்பு,ஜ"லை6

இந்த வருடமே ஜனாதிபதித் தேர்தலை நடத்தி மக்களின் ஜனநாயக உரிமைகளை உறுதிப்படுத்தத் தேர்தல் ஆணையுாளர் நடவடிக்கை எடுக்கவேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க நேற்றுத் தெரிவித்திருக்கிறார்.

மாத்தறை தெவி நுவரவிலிருந்து நேற்று ஆரம்பமான ஐ.தே.கவின் மக்கள் சக்திப் பேரணி, ஹிக்கடுவ நகரை வந்தடைந்தது. அங்கு கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் எதிர்க்கட்சித் தலைவர் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

இந்த வருட இறுதியில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டும். இது மக்களின் உரிமை, மக்களின் இந்த உரிமையை எவரும் சூறையாடுவதற்கு அனுமதிக்கக் கூடாதென்று நாம் தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை விடுக்கிறோம்.

தமது ஜனநாயக விழுமியங்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென்றே மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். தமது அரசைத் தீர்மானிக்கும் உரிமை மக்களுக்கு உண்டு. மக்களின் அந்த உரிமையைப் பெற்றுக்கொடுக்கத் தேர்தல் ஆணையாளர் உரிய நடவடிக்கை எடுப்பாரென நாம் எதிர்பார்க்கிறோம்.

ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்பட்டு இத்தனை மாதங்களாகியும் அரசு ஓர் ஆக்கபூர்வமான நடவடிக்கையினையும் எடுக்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வருமானால் மூன்று மாத காலத்தில் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் வீடுகளை அமைத்துக் கொடுப்போம். நூறு மீற்றர் எல்லை என்ற சட்டத்தை ஒரே நாளில் இல்லாமல் செய்வோம்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

(க-3)

# ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவுசெய்ய நாளைய சு.க.கூட்டத்தில் வலியுறுத்தப்படும்

## சிரேஷ்ட அமைச்சர்கள் சிலர் தயாராகின்றனர்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு நாளை கூடும்போது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவுசெய்ய வேண்டுமென்று கட்சித் தலைமையிடம் கோரிக்கையொன்றை விடுப்பதற்குக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களான அமைச்சர்கள் சிலர் தயாராகி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தலுக்குத் தயாராகி, தெற்கில் மக்களை ஒன்றுதிரட்டிவரும் ஐக்கிய தேசியக் கட்சி, ஜனாதிபதித் தேர்தலுக்கான தனது வேட்பாளரையும் தெரிவுசெய்துள்ள நிலையில், இது விடயத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தொடர்ந்தும் மௌனமாக இருப்பது கட்சிக்குப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துமென்று கருதப்படுகிறது. இதற்கொரு முடிவு காணத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அரசின் சிரேஷ்ட அமைச்சரொருவர் தெரிவித்தார்.

நாளை நடைபெறும் மத்திய குழுக் கூட்டத்தில் ஆராயப்படும் விடயங்கள் என்னவென்பது குறித்து கட்சிச் செயலாளரால் அறிவிக்கப்படாதபோதும் ஜனாதிபதி வேட்பாளர் விடயம் குறித்துத் தீர்க்கமான முடிவொன்றை எடுப்பதற்காகக் கட்சித்தலைமையை வலியுறுத்தத் தாங்கள் தீர்மானித்துள்ளனர் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

(க-3)

# பொதுக்கட்டமைப்பின் கையெழுத்திட்ட நகல் நாடாளுமன்றில் நேற்று பிரதமரால் சமர்ப்பிப்பு

கொழும்பு,ஜ"லை6

அரசும் - புலிகளும் கையெழுத்திட்ட பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தின் நகலைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பித்தார்.

இரு தரப்பும் ஒப்பமிட்ட பொதுக்கட்டமைப்பு நகலை நாடாளுமன்றில் சமர்ப்பிக்க வலியுறுத்தியிருந்தது' ஜே.வி.பி. அதற்கு அமையவே பிரதமர் நேற்று ஒப்பந்த நகலைச் சபையில் சமர்ப்பித்தார்.

பொதுக்கட்டமைப்பு விவகாரம் நாட்டில் பல கொந்தளிப்புகளையும், சர்ச்சைகளையும் ஏற்படுத்தியபோதும் பிரதமர் இவ்விடயத்தில் இருந்து பட்டும் படாமலும் ஒதுங்கியே இருந்தார். இதனால் இந்த விடயத்தில் அவரது நிலைப்பாடு என்ன என்பதை வெளிப்படுத்த வேண்டும் என்று ஜே.வி.பி. தரப்பிலிருந்து அழுத்தம் கொடுக்கப்பட்டு வந்தது.

இதன் பின்னர் முதன் முதலாக நேற்றுப் பொதுக்கட்டமைப்பு விவகாரத்தில் தன்னைத் தொடர்புபடுத்திக்கொண்டார் பிரதமர்.

நேற்றுக்காலை சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார தலைமையில் சபை கூடியது. அப்போது ஜே.வி.பி. பிரசார செயலாளர் விமல் வீரவன்ஸ அரசிடம் கேள்வி ஒன்றை எழுப்பினார்.

அரசும் புலிகளும் செய்துகொண்ட பொதுக் கட்டமைப்புத் தொடர்பான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நகலை அப்படியே சபையில் சமர்ப்பிக்கவேண்டும் எனக் கேட்டிருந்தோம். இன்று அந்த நகலை அரசு சபையில் சமர்ப்பிக்குமா? என்று கேட்டார் விமல் வீரவன்ஸ. இவ்விடயம் தொடர்பாக இரண்டு நாள்கள் விவாதம் ஒன்றை நடத்தவும் இடமளிக்க வேண்டும் எனவும் அவர் கோரினார்.

விமல் வீரவன்ஸவின் கேள்விக்குப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதில் அளித்தார்.

அரசும் புலிகளும் கையெழுத்திட்ட பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தின் நகலைச் சபையில் சமர்ப்பித்த பிரதமர், அதன் பிரதி ஒன்றையும் விமல் வீரவன்ஸவுக்கு வழங்கினார்.

இந்தச் சபையில் பொதுக்கட்டமைப்புக் குறித்து விவாதம் நடத்துவதைத் தன்னால் தீர்மானிக்க முடியாது என்று கூறிய பிரதமர், கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இதுபற்றித் தீர்மானிக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்புடன் தொடர்பான மற்றும் ஒரு கேள்வியை ஜாதிக ஹெல உறுமய உறுப்பினரான வண. அத்துரலியே ரத்ன தேரர் எழுப்பினார்.

பொதுக் கட்டமைப்பின் 7 ஆவது விதியின் படி அதன் நிதி அதிகாரங்கள் பிராந்திய சபைகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இது இலங்கை அரசமைப்பின் 148 ஆம், 149 ஆம் பிரிவுகளுக்கு விரோதமானதாகும். இவ்விடயம் தொடர்பான விளக்கங்களை அரசு தெளிவுபடுத்தவேண்டும் என வண. அத்துரலியே ரத்ன தேரர் பிரதமரிடம் கேட்டார்.

இவ்விடயம் தொடர்பாக இன்னும் இரண்டு வார காலங்களில் விளக்கமளிக்கப்படும். அது வரை அவகாசம் தேவை எனப் பிரதமர் பதில் அளித்தார். இதனைச் சபாநாயகரும் சபையில் அறிவித்தார்.

# சேது சமுத்திரத் திட்டம் குறித்து நாடாளுமன்றில் நாளை அறிக்கை

## இலங்கையின் நிலையை விளக்குவார் கதிர்காமர்

கொழும்பு,ஜ"லை6

சேது சமுத்திரத்தை ஆழப்படுத்தும் இந்தியாவின் நடவடிக்கை தொடர்பாக இலங்கை அரசின் நிலைப்பாடு குறித்து விளக்கமளிக்கும் நீண்ட அறிக்கை ஒன்றை இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நாளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போதைய நாடாளுமன்றத்தின் வெளிவிவகார ஆலோசனை உபகுழுவின் முதலாவது (அங்குரார்ப்பணக் கூட்டம்) நேற்று நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் நடைபெற்றது.


அக்கூட்டத்தில், சேது சமுத்திரத்தை ஆழமாக்கும் இந்தியாவின் நடவடிக்கை தொடர்பாக ஐ.தே.கட்சியின் எம்.பியான ரவி கருணாநாயக்க கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளித்தபோது உபகுழுவின் தலைவரான வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் மேற்கண்ட விடயத்தை வெளியிட்டார்.

சேது சமுத்திரத் திட்டம் தொடர்பாக இலங்கை - இந்தியத்தரப்புகளிடையே இடம்பெற்ற பேச்சுகளின் விவரங்கள், அப்போது இலங்கைத் தரப்புக்கு வழங்கப்பட்ட உறுதிமொழிகள் போன்றவற்றைக் கொண்டதான நீண்ட அறிக்கை ஒன்றை நாளை அமைச்சர் கதிர்காமர் சபையில் சமர்ப்பிப்பார்.

இதேசமயம், சேது சமுத்திரத் திட்டம் தொடர்பாக எழுந்துள்ள சூழலியல் பிரச்சினைகள் குறித்து இலங்கை - இந்திய அதிகாரிகள் இம்மாத நடுப்பகுதியில் ஒன்று கூடி ஆராயவிருக்கின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## புலமைப் பரிசில் பரீட்சையில் முதல்நிலை பெற்ற

# இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் ஜப்பானுக்குச் சுற்றுலாச் செல்கின்றார்



யாழ்ப்பாணம்,ஜ"லை6

கடந்த வருடம் நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியாகத் தமிழ் மொழி மூல மாணவர்களில் முதல்நிலை பெற்ற யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை மாணவன் இரத்தினசிங்கம் பிரணவன் ஜப்பானுக்குச் சுற்றுலாச் செல்கின்றார்.

அகில இலங்கை ரீதியில் முதன்மை பெற்ற வேறு 7 மாணவர்களும் இவருடன் செல்கின்றனர். இவர்கள் எதிர்வரும் 12 ஆம் திகதி ஜப்பான் பயணமாகின்றனர்.

இவர் பாடசாலையில் சிரேஷ்ட மாணவத் தலைவராக இருந்ததோடு, பாடசாலைக் கற்றல் செயற்பாடுகளோடும், தமிழ் மொழித் தினம், ஆங்கில தினம், விளையாட்டு போன்ற நிகழ்வுகளில் கோட்ட, வலய, மாவட்ட மட்ட நிலைகளில் முன்னணி வகித்தவர்.

அத்துடன், குறிப்பாகச் சகல துறைகளிலும் இயல்பான ஈடுபாடும் வாசிப்புப் பழக்கம், ஆக்கத்திறன்களை ஓய்வு நேரத்தில் பயனுடையதாகக் கழிக்கும் சுபாவம் கொண்டவராவார்.

(ஐ-3)

# அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் பொதுக்கட்டமைப்புக்கு எதிராகத் தாக்கல்

## ஹெல உறுமய, ஜே.வி.பி. சார்பில் உயர் நீதிமன்றில்

பொதுக்கட்டமைப்பிற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் நேற்று நான்கு அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

ஹெல உறுமய சார்பில் ஒரு மனுவும், ஜே.வி.பி.சார்பில் மூன்று மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

ஜாதிக ஹெல உறுமய சார்பில் வண. அம்பலாந்தோட்டை சந்திமதேரர், திருகோணமலை திரியாயைச் சேர்ந்த எச்.கே.டொன் பட்றிக் சுசந்த ஆகியோர் இந்த மனுவைத் தாக்கல் செய்திருக்கின்றனர்.

மனுவின் பிரதிவாதிகளாக பொதுக்கட்டமைப்பு ஆவணத்தில் ஒப்பமிட்ட நிவாரண, புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சின் செயலாளர் எம்.எஸ்.ஜயசிங்க, விடுதலைப் புலிகளின் அபிவிருத்தி திட்டமிடல் செயலகப் பணிப்பாளர் எஸ்.ரஞ்சன் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அரசமைப்பின்படி வழக்காளிக்கு உள்ள அடிப்படை உரிமை அரசின் நடவடிக்கையால் மீறப்பட்டுள்ளது எனவும், இந்த ஒப்பந்தம் அரசமைப்பின் ஷரத்துக்களை மீறுகின்றது எனவும், பொதுக்கட்டமைப்பு செல்லுபடியற்றது எனவும் உத்தரவிடுமாறு கோரியும்-

ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இடைக்காலத் தடை விதிக்கக் கோரியும் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதேசமயம், ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தலைமையில் 14 உறுப்பினர்களைக் கொண்ட குழுவும், லக்ஷ்மன் நிபுணாராச்சி எம்.பி.தலைமையிலான 11 பேர் கொண்ட குழுவும், ஜயந்த வீரசேகர எம்.பி. தலைமையிலான 14 பேர் கொண்ட குழுவும் தனித்தனியே மூன்று மனுக்களைத் தாக்கல் செய்துள்ளன.


இதன் பிரதிவாதிகளாகவும் நிவாரண, புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சின் செயலாளர் எம்.எஸ்.ஜயசிங்க, விடுதலைப் புலிகளின் அபிவிருத்தி செயலகப் பணிப்பாளர் எஸ்.ரஞ்சன், புனர்வாழ்வு அமைச்சர், சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பொதுக்கட்டமைப்பில் நியமிக்கப்பட்டுள்ள குழுக்கள் இயங்குவதைத் தடுப்பதற்கான தடையுத்தரவு கோரியும், அரச நிதியுதவி புலிகளுக்குச் செல்வதைத் தடுத்து நிறுத்தி, இந்த ஒப்பந்தத்தைச் சட்டவிரோதமான ஆவணமெனக் கட்டளையிடுமாறு கோரியும் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த ஒப்பந்தம் தமது அடிப்படை உரிமைகளை மீறியிருப்பதாகவும் மனுதாரர்கள் தமது மனுவில் மேலும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

(க-3)

# கரும்புலிகள் தின நிகழ்வுகளிலிருந்து....

## நெல்லியடியில்......



நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற கரும்புலிகள்தின நிகழ்வில் வடமராட்சி அரசியல்துறை மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் அன்பு பொதுச்சுடர் ஏற்றுவதையும், வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் இன்பன் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றுவதையும் போராளிகளும் மாணவர்களும் கொடிவணக்கம் செலுத்துவதையும் மேலுள்ள படங்களில் காணலாம்.





கரும்புலி கப்டன் மில்லரின் சிலைக்கு வடமராட்சி கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்பழகன் மலர்மாலை அணிவிப்பதையும் மில்லரின் நினைவுக்கல்லுக்கு ஆழிப்பேரலை புனர்வாழ்வுச் செயலகப் பொறுப்பாளர் பாலையா மலர்மாலை அணிவிப்பதையும் அன்பழகன் நினைவுரையாற்றுவதையும் கலந்துகொண்ட மாணவர்களில் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம். *(படங்கள்:சுந்தரலிங்கம்)*

## கிளிநொச்சியில்......



கிளிநொச்சி தமிழீழ அரசியல்துறை நடுவப் பணியகத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கரும்புலிகளின் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டிருப்பதையும் முதன்மைச் சுடரினை ஊடக ஒருங்கிணைப்புப் பிரிவுப் பொறுப்பாளர் நரேஸ் ஏற்றிவைப்பதையும் தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஏற்றுவதையும் போராளிகள் அகவணக்கம் செலுத்தப்படுவதையும் படங்களில் காணலாம்.



கிளிநொச்சிமாவட்ட கூட்டுறவாளர்களின் ஏற்பாட்டில் கிளிநொச்சி நகரில் பவனிவந்த கரும்புலி மாவீரர்களின் உருவப்படங்கள் தாங்கிய ஊர்தியை இங்குள்ள படங்களில் காணலாம். கப்பல் வடிவில் வடிவமைக்கப்பட்ட இந்த ஊர்தியில் கரும்புலி மாவீரர்கள் அனைவரினதும் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டிருந்தன. *(படங்கள்:- மு.கந்தசாமி, பரந்தன் செய்தியாளர்)*

## தமிழீழ மாணவர் பேரவையில்......




சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற கரும்புலிகள் தின நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. மாணவர் பேரவைப் பொறுப்பாளர் கண்ணன் கரும்புலிகளின் உ வப்படத்துக்கு மலர்மாலை அணிவிப்பதையும் மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி உரையாற்றுவதையும் கரும்புலிகள் தினக் கவிதைப் போட்டியில் முதலாம் இடத்தைப்பெற்ற தம்பிராசா பரமலிங்கம் என்பவருக்கு யாழ். மாவட்ட அரசியல்துறைத் துணைப் பொறுப் பாளர் கண்ணன் தங்கப்பதக்கம் அணிவித்துக் கௌரவிப்பதையும் படங்களில் காணலாம். *(படங்கள்: கவிதரன்)*

COMPUTER EXPRESS
Institute of Information Technology
இல. 15, சிறாம்பி.படி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
0777 222422, 0773151647

அனைத்துக் கணனிக் கற்கை நெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

80% OFF

31-07-2005க்கு முன் பதிவு செய்து கொள்ளவும்.

வகுப்புக்கள் ஆரம்பம்:-
Batch I :-09/07/2005 09.30-10.30
Batch II :-15/07/2005 - 02.30-04.30
Batch III :-17/07/2005 - 02.00-03.00
Batch IV :-31/07/2005 - 09.30-10.30


# பழவகைகளின் விலைகள் உயர்வு

தென்மராட்சி,ஜூலை6

சாவகச்சேரிச் சந்தையில் முக்கனிகளின் விலைகள் திடீரென அதிகரித்துள்ளன.

மாம்பழம், வாழைப்பழம், பலாப்பழம் ஆகியவற்றின் விலைகளே அதிகரித்துள்ளன.

கிலோ இருபது ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட கதலி வாழைப்பழம் நாற்பது ரூபாவாகவும் பத்து ரூபா வரை விற்பனை செய்யப்பட்ட மாம்பழம் 35 ரூபா வரையும், பத்து ரூபா தொடக்கம் 50 ரூபா வரை விற்பனை செய்யப்பட்ட பலாப்பழம் 100 ரூபா தொடக்கம் 200 ரூபா வரையும் விற்பனை செய்யப்படுகிறது.

மாம்பழம், பலாப்பழம் என்பவற்றின் சீஸன் முடிவடைவதாலும் அண்மையில் வீசிய காற்றினால் வாழை மரங்கள் முறிந்ததாலும் இந்தப் பழ வகைகளின் விலைகள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(த-117)


இசைப்பிரியர்களின் கவனத்திற்கு

யாழ்.மண்ணின் புகழ்பூத்த

சாரங்கா இசைக்குழுவின் "ராஜராகம்"

எம்மை அழைத்திட தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

இயக்குநர்
R.V.வாசன்
34/3,கலைமகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (37374)(42-16)


# மண்பரிசோதனை குறித்த கலந்துரையாடல்

பரந்தன்,ஜூலை6

கிளிநொச்சி பொருண்மிய மதியுரையகத்தின் ஏற்பாட்டில் மண்பரிசோதனை தொடர்பான கலந்துரையாடல் இன்று புதன் கிழமை காலை 9 மணிக்கு மதியுரையக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

அமெரிக்காவிலிருந்து வருகை தந்துள்ள மண்ணியல் ஆய்வாளர் பேராசிரியர் சித்தாந்தன் தலைமையில் நடைபெறும் இக்கலந்துரையாடலில் மதியுரையகத்தைச் சேர்ந்தவர்கள், மாவட்டப் பொறியியலாளர்கள் உட்படப் பலர் கலந்து கொள்வர்.

(த-352-202)


ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

திருமண அழைப்பு

அன்புடையீர் !

நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் ஆனி மாதம் 23 ஆம் நாள் நாளை (07.07.2005) வியாழக்கிழமை பிரதமை திதியும் புனர்பூச நட்சத்திரமும், அமிர்த யோகமும் கூடிய சுப யோக சுப தினத்தில் காலை 7.28 மணி முதல் 8.28 மணிவரையுள்ள சுப முகூர்த்த வேளையில்



மணமகன்
எமது
சிரேஷ்டபுதல்வன்
திருநிறைசெல்வன்
தர்மகுமார்
அவர்களுக்கும்

மணமகள்
எமது
ஏக புதல்வி
திருநிறைசெல்வி
றஜனி
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள இளங்கலைஞர் மண்டபத்தில் திருமணம் நடைபெற இருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை இனிதே நாடும்:

திருமதி.க. தனலட்சுமி
திரு.திருமதி பொ.விமலேந்திரன்
இந்திர சுசீலம்.
காளி கோயிலடி.
திருநெல்வேலி கிழக்கு. யாழ்ப்பா ணம்.

திரு. திருமதி த. அரியரத்தினம்
மாதாங்கோயிலடி.
அல்வாய் தெற்கு.
அல்வாய்.

இருவீட்டார் அழைப்பு

(37348)(51-19-15)



31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர் சுந்தரம் பாலசுப்பிரமணியம்
(மணியம்)

தோற்றம் 13-01-1923
மறைவு 06-06-2005

06.06.2005 அமரத்துவம் அடைந்த எமது குலவிளக்கின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (06.07.2005) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும். அதைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

22/1, இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி. (37378)(32-16-42)

தகவல்:
குடும்பத்தினர்.


# அரசாங்க கேள்வி அறிவித்தல்

நிவாரணம், புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சினால் யாழ்.மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும் அத்தியாவசிய உணவு வகைகள் வழங்கலுக்கான

## கோதுமை மா கேள்வி கோரல்

ஜூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் - 2005

1. யாழ்.மாவட்டத்தில் இலவச நிவாரணத்திற்கு கீழ்க் குறிப்பிட்ட அளவிலான மெற்றிக் தொன் கோதுமை மா விநியோகிக்கப்பதற்காக கேள்விகள் பிறிமா நிறுவனத்தின் யாழ்ப்பாண முகவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. மாவை பின்வரும் அடிப்படையில் விநியோகம் செய்தல் வேண்டும்.

| விநியோகிக்க வேண்டிய தொகை | அளவு |
|---|---|
| 2005 ஜூலை | 500Mt |
| 2005 ஓகஸ்ட் | 500Mt |
| 2005 செப்ரெம்பர் | 500Mt |

கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்பும் முகவர்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா.500.00 இனை யாழ்.மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி கேள்விப்படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் 2005.07.04ஆம் திகதி தொடக்கம் 2005.07.17 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அலுவலக நாள்களில் மு.ப.10 மணி தொடக்கம் பி.ப.3 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

2. கேள்வியைச் சமர்ப்பிப்பதற்கு பந்தி 01 இல் குறிப்பிட்டுள்ள ஆர்வம் உள்ளவர்கள் மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்பாக (விலை கேள்முறி - Bid Bond) மெற்றிக்தொன் ஒன்றிற்கு (01 Mt) ரூபா நானூறுப்படி (ரூபா.400.00) செலுத்துதல் வேண்டும். (விவரம் கேள்வி ஆவணத்திலுள்ளது)

3. பூரணப்படுத்திய இரு கேள்விப் படிவத்தினை *'தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)'* என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ தபால் மூலமோ யாழ்.செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலக (கணக்காளரது) அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2005.07.18 ஆம் திகதி பி.ப.2 மணிக்கு முன்பாகச் சேர்க்கவும். அன்றைய தினம் பி.ப.3.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்வி கோரியவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்கமுடியும்.

4. நீள தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கோதுமை மா வழங்கலுக்கான கேள்வி" என எழுதப்பட வேண்டும்.

5. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக (செயல்படுத்தல் முறிக்காக - PERFORMANCE BOND) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். (விவரம் கேள்வி ஆவணத்திலுள்ளது).

6. கேள்வி விண்ணப்ப இறுதித் திகதியிலிருந்து 30 நாள்கள் வலுவுடையதாக இருக்கும்.

**க.கணேஷ்,**
தலைவர்/அரச அதிபர்,
மாவட்ட கேள்விச் சபை/ மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.
04.07.2005. (C/43919)(42-16)


abe?
the best* british business qualification

*best (adjective) of the most excellent or desirable type or quality, most enjoyable, most appropriate, advantageous, or well advised. (adverb) to the highest degree.
Oxford Dictionary. 2005

- The Fastest Pathway to a BBA or MBA
- It offers a manageable syllabus, flexible class schedules and job oriented subject streams
- ABE accepts multiple entry options - O/levels, A/levels, any local university degree or CIM,CIMA,ACCA etc..

- Business Administration
- Travel, Tourism & Hospitality
- Business Information Systems

ABE Centres:
Academy of Business Studies (ABS) - 4510101,
London Business School (LBS) - 0712 297297,
Oxford College of Business - 4718711, Univentures Institute(Jaffna) - 021 2227666
Metropolitan Business School - 2505954, Zodiac Burch International - 2501716,
Regent International (Gampaha) - 0332224559, Academy of Career Training (ACT) - 2370400

abe

Association of Business Executives (SL)
308 - 310, R.A De Mel Mawatha, Colombo - 3. Hotline 0777 517 517
Email: info@abesrilanka.com www.abeuk.com

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் – 222 2030, 222 2083, 222 3837.

## பொதுக்கட்டமைப்பு விடயத்தில் பந்து சர்வதேச சமூகத்திடம்!

பொதுக்கட்டமைப்பு விடயம் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் சுட்டிக்காட்டியிருக்கும் ஓர் அம்சம் இப்போது ஊன்றிக் கவனிக்கப்படவேண்டிய விவகாரமாக உள்ளது.

பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டை விரைந்து செய்யுங்கள் என்று இலங்கை அரசையும் விடுதலைப் புலிகளையும் வற்புறுத்தி வந்த சர்வதேச சமூகத்தைப் பார்த்து, எங்கள் பங்கைச் சரியாகச் செய்துவிட்டோம். உங்களின் செயற்பாடு என்ன என்பதுபோல வினாத் தொடுத்திருக்கின்றனர் விடுதலைப் புலிகள்.

புலிகளின் இந்தக் கேள்வி அவர்களின் உத்தியோகபூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையின் ஆசிரிய தலையங்கத்தில் தெளிவாக வரையப்பட்டிருக்கின்றது.

ஆழிப்பேரலை அழிவு கண்டு திகைத்த உலக சமூகம் பாதிக்கப்பட்ட மக்கள் புதிய வாழ்வை அமைக்க நிதியுதவிகளை வாரிவழங்கியது. முன்புபோல சிங்கள அரசிடம் பெரு நிதியை முழுமையாகக் கையளிக்காமல் புலிகள் இயக்கத்தின் ஆளுகைக்கு ஊடாக அதை வழங்க சர்வதேச சமூகம் எடுத்த அரசியல் முடிவு ஈழத்தமிழர்களுக்கு பெரு மகிழ்ச்சியைக் கொடுத்தது.

ஆனால், அந்த முடிவை ஏற்க சிங்கள அரசு மறுத்தது. காலத்தைக் கடத்தியது. சர்வதேச சமூகத்தை மனமாற்றத்திற்கு உள்ளாக்க முயன்றது. அதில் தோற்றது.

நீதியானதும், ஜனநாயகத் தன்மை கொண்டதுமான தனது அந்த அரசியல் முடிவில் சர்வதேச சமூகம் உறுதியாக இருந்தது. யதார்த்தத்தை ஏற்று உடன்பாட்டில் ஒப்பமிட சிங்கள அரசிற்கு ஆலோசனை கூறியது. நிர்ப்பந்தங்களைக் கொடுத்தது. இறுதியில் சர்வதேச அழுத்தத்திற்குப் பணிந்து சந்திரிகா அரசு உடன்பாட்டில் ஒப்பமிட்டது. ஆனாலும், ஒப்பந்தத்தை முழுமனதாக ஏற்றுக்கொள்ளும் புறச்சூழல் சிங்கள தேசத்தில் எழவில்லை.

உடன்பாட்டுக்கு எதிராகச் சிங்களப் பேரினவாதிகள் கொதிப்படைந்துள்ளனர். பௌத்த மதப் பீடத்தலைவர்கள், பிக்குகள், பேரினவாதக் கட்சியினர் வீதிக்கு இறங்கியுள்ளனர். நீதிமன்றங்களில் பொதுக்கட்டமைப்புக்கு எதிராக வழக்குகள் தாக்கலாகியுள்ளன. மௌனம் பேணிய ஐ.தே. கட்சி கூட இந்தப் பொதுக்கட்டமைப்பில் பிழைகண்டு பிடிக்கிறது. கண்டன அறிக்கை விடுகின்றது.

இந்தப் பல தரப்பினரதும் கருத்துகளை ஆதரித்தும் பெரிதுபடுத்தியும் சிங்கள மக்களிடம் இனவெறி ஊட்டி நிற்கின்றன சிங்கள ஊடகங்கள்.

மொத்தத்தில் சிங்கள அரசியல் உலகம் முழுமையாகக் குழம்பியுள்ளது.

'உறுதியான அரசு' என்ற அரசியல் அம்சம் இப்போது கொழும்பில் இல்லை. குழப்ப அரசியலே நிலவுகின்றது. அதற்கு மத்தியில் இப்போதைக்கு பெருமாற்றங்கள் ஏற்பட வாய்ப்பில்லை. அப்படி எதிர்பார்க்கவும் முடியாது. எனவே, சந்திரிகா அரசு விரும்பினாலும், கைச்சாத்திடப்பட்ட கட்டமைப்பை நடைமுறைப்படுத்த அதனால் இயலுமா என்ற கேள்வி எழுகின்றது. - இப்படிச் சுட்டிக்காட்டியிருக்கின்றது விடுதலைப் புலிகள் அமைப்பு.

போர்நிறுத்தம் ஏற்பட்டு மூன்றரை ஆண்டுகள் ஓடிவிட்டன. ஆழிப்பேரலை தாக்கி ஆறு மாதங்கள் கடந்துவிட்டன.

இந்நிலையில் தமிழர்களைப் பொறுத்தவரை பந்து புலிகளிடமும் இல்லை; சிங்கள அரசிடமும் இல்லை. அது சர்வதேச சமூகத்திடம்தான் உள்ளது. சிங்களக் கடும்போக்கிற்கு எதிராகச் சர்வதேச சமூகம் செயற்படவேண்டும். அதைத்தான் தமிழர்கள் எதிர்பார்க்கின்றனர். இதையே புலிகள் தமது உத்தியோகபூர்வ ஏட்டில் ஆசிரிய தலையங்கம் ஊடாகத் தெட்டத் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

நாம் இப்பத்தியில் ஏற்கனவே குறிப்பிட்டுக் காட்டியமைபோன்று, இந்த உடன்பாட்டில் ஒப்பமிட்டமைக்காகப் புலிகளையும், சிங்களை அரசையும் சர்வதேச சமூகம் மெச்சியிருக்கின்றது. அதையும் புலிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

உடன்பாட்டுக்கு மகிழ்ச்சி தெரிவிப்பதும், வரவேற்பதும் மட்டும் பயன்தரா. உடன்பாட்டு ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்த சந்திரிகா அரசை வற்புறுத்தவும் வேண்டும் எனப் புலிகள் இயக்கம் சர்வதேச சமூகத்தைக் கோரியிருக்கின்றது.

வெறும் ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது அதுபோல பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டில் ஒப்பமிட்ட செயல்மாத்திரம் ஆழிப்பேரலையால் பாதிப்புற்ற மக்களின் அவலங்களைத் தீர்த்துவிடாது; அவர்களுக்குரிய நிவாரணங்களையோ, மீள்கட்டுமானங்களையோ வெறும் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொடுத்துவிடாது.

பாதிப்புற்ற மக்கள் பயனடைவதாயின் பொதுக்கட்டமைப்பில் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் வரிக்குவரி நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டுக்கு இணங்கி, ஒப்பமிடவே இவ்வளவு காலத்தை இழுத்தடித்த தென்னிலங்கைச் சிங்கள அரசு, விரைந்து செய்யப்படவேண்டிய இந்தப் பொதுக்கட்டமைப்பு ஏற்பாட்டை அப்படிச் செய்யும் என நம்புவதற்கு இடம் ஏதும் இல்லை. அதற்கான அரசியல் யதார்த்தக் களநிலைமையும் தென்னிலங்கையில் இல்லவே இல்லை.

எனவே, தாங்கள் இதுவரை அனுபவித்த அவலங்கள் பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டின்கீழ் நிச்சயம் நீங்கிவிடும் என வடக்கு - கிழக்குக் கரையோரத் தமிழ்பேசும் மக்கள் கருதினால் அது வெறும் கனவாய்த்தான் போய்முடியும்.

ஆகையினால், உடன்பாட்டு வாசகங்களை - ஏற்பாடுகளை - விரைந்து நடைமுறைப்படுத்த சர்வதேச சமூகம் சந்திரிகா அரசை வற்புறுத்தவேண்டும். அந்தச் சர்வதேச நிர்ப்பந்தங்களுக்கும், வற்புறுத்தல்களுக்கும் செவிசாய்க்க சிங்கள அரசு தவறினால், உடன்பாட்டின் பிரகாரம் வடக்கு - கிழக்கிற்கான உதவிநிதியை விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு வழங்கி தமிழ்மக்களின் துயர்துடைக்க சர்வதேச சமூகம் முன்வரவேண்டும் என்று புலிகள் இயக்கம் கூறுவதும் , கோருவதும் - நூற்றுக்குநூறு - முற்றிலும் - சரியான ஒரு விடயமே.

சர்வதேச சமூகத்தின் பதில் என்ன? அறிவதற்கு உரிமையோடு காத்திருக்கிறார்கள் தமிழ்மக்கள்.

# பலாலி - கோப்பாய் ஆசிரியர் கலாசாலைகளை ஒன்றாக இணைக்கும் திட்டம் கைவிடப்பட்டது

## தாரா டி மெல்-தமிழர் ஆசிரியர் சங்கச் சந்திப்பில் வெற்றி

காரைதீவு,ஜூலை6

"பாரம்பரியமான பலாலி ஆசிரியர் கலாசாலை தொடர்ந்தும் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலய கனிஷ்ட பிரிவில் இயங்கும். அது எந்தக் காரணம் கொண்டும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையுடன் இணைக்கப்படமாட்டாது."

இத்தீர்மானம் கல்வியமைச்சின் செயலாளர் டாக்டர் தாரா டி மெல்லுக்கும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக்குழுவிற்கும் இடையிலான சந்திப்பில் எடுக்கப்பட்டிருக்கிறது.

இச்சந்திப்பு கடந்த வெள்ளியன்று கல்வியமைச்சில் நடைபெற்றது.

கல்விச் செயலாளருடன் ஆசிரியர் கலாசாலை மற்றும் கல்விக் கல்லூரிகளுக்கான ஆணையாளரும் சமுகமளித்திருந்தார்.

தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் அங்கு கூறுகையில் - பலாலி ஆசிரியர் கலாசாலையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையுடன் இணைப்பது தொடர்பாக யாழ். கல்விப் பணிப்பாளர்களுடனோ வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விச் செயலாளருடனோ கல்விப் பணிப்பாளருடனோ அல்லது சிவில் சமூகத்துடனோ கலந்துரையாடாமல் கொழும்பு ஆசிரியர் கலாசாலைக் கிளை தன்னிச்சையாக முடிவெடுத்துள்ளது. இது தவறு. தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் இதுபற்றிக் கூறாமல் இப்படியான முடிவெடுத்திருப்பது கண்டனத்துக்குரியது. எக்காரணம் கொண்டும் இந்த இணைப்பை நாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம். - என்று காட்டமாகக் கூறினார்.

பதிலுக்கு செயலாளர் தாரா டி மெல் - "சரி இணைக்கும் யோசனையைக் கைவிடுவோம். அக்கலாசாலை தொடர்ந்து இயங்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்" - என்றார்.

ஆசிரியர் கலாசாலைக்கு 45 உடற்கல்வி ஆசிரியர்களை இவ்வருடத்தில் அனுமதிப்பதென்றும் எதிர்காலத்தில் கடல்வள உயிரியல்துறையை ஆரம்பிக்கவேண்டுமென்றும் கூறப்பட்டது.

கடல்வள உயிரியல் கற்பிப்பதற்கான தகுதியான விரிவுரையாளர்களைத் தேர்ந்தெடுப்பதோடு, பாடத்திட்டத்தைத் தயாரிக்கவேண்டுமெனவும் தாரா டி மெல் கேட்டுக்கொண்டார்.

பலாலி ஆசிரியர் கலாசாலையை வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மகாவித்தியாலயத்திற்கு மாற்றி அங்கு நிரந்தரமாக இயங்கச் செய்வதற்கும் அங்குள்ள பெண் விடுதியைப் பயன்படுத்துவது பற்றியும் கலந்துரையாடப்பட்டது. இதற்கு அப்பாடசாலை சமூகம் இணக்கம் தெரிவித்துள்ளது. இதற்கென கல்வியமைச்சு சார்பாகக் குழுவொன்று நியமிக்கப்பட்டு ஆய்வு நடைபெற்றுவருகிறது. (ஐ-84)

# தேசியப் பாடசாலைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்

வலி.தெற்கு ,ஜூலை6

நாட்டில் உள்ள தேசியப் பாடசாலைகள் மற்றும் நவோதய பாடசாலைகள் என்பனவற்றின் எண்ணிக்கையை அதிகரிக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இவ்வருட இறுதிக்குள் இதுபோன்ற பாடசாலைகள் 750 ஆக அதிகரிக்கப்படும். அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக, கல்வித் தரத்தில் முன்னணியில் விளங்கும் பிரபல பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாகவும் நவோதய பாடசாலைகளாகவும் கல்வி அமைச்சினால் பிரகடனம் செய்யப்படவுள்ளன.

இந்தப் பாடசாலைகள் அனைத்தும் சகல வசதிகளையும் கொண்ட நவீன பாடசாலைகளாக அபிவிருத்தி செய்யப்படும்.

இவற்றின் மூலம் பிரபலமான பாடசாலைகள் என்று தற்போது கருதப்பட்டு வரும் பாடசாலைகளில் மாணவர்களைப் புதிதாகச் சேர்த்துக்கொள்வதில் காணப்படும் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டுவிடும் எனக் கருதப்படுகிறது.

தேசியப் பாடசாலைகளில் தற்போது பிள்ளைகளை அனுமதிப்பதில் பெற்றோர்கள் பல்வேறு கஷ்டங்களையும் சிரமங்களையும் எதிர்நோக்கி வருகின்றனர். தேசிய பாடசாலைகளில் பிள்ளைகளை அனுமதிப்பதில் காணப்படும் நிபந்தனைகளால் ஒழுங்கீனங்கள், மோசடிகள், ஊழல்கள் போன்றன இடம்பெறுவதாகக் கண்டறியப்பட்டுள்ளதாகவும், அவற்றை மாற்றி அமைக்கும் வகையில் தேசிய பாடசாலைகளுக்கு சமனான விதத்தில் கிராமப்புற பாடசாலைகளை நவீன வசதிகளைக் கொண்டதும், பௌதீக மற்றும் ஆளணி வசதிகளைக் கொண்டவைகளாகவும் அபிவிருத்தி செய்வதற்கு கல்வி அமைச்சு திட்டமிட்டிருப்பதாகக் கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டி மெல் தெரிவித்துள்ளார். (ஐ-152)

# தேர்தல் ஆணையாளர் தீர்மானிக்கும் திகதியில்தான் ஜனாதிபதித் தேர்தல்!

## இப்போது தட்டைப் புரட்டிப் போடுகிறது ஜே.வி.பி.

கொழும்பு,ஜூலை6

ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதியை தேர்தல் ஆணையாளரே தீர்மானிக்க வேண்டும். வேறு எவரும் குறிப்பிட முடியாது. தேர்தல் ஆணையாளர் அறிவிக்கும் திகதியில் தேர்தலுக்கு முகம் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் - என ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்தார்.

அரசின் ஓர் அங்கமாக ஜே.வி.பி. இருக்கும்வரை ஜனாதிபதித் தேர்தல் 2006ஆம் ஆண்டிலேயே நடைபெறும். அதுவரை ஜனாதிபதியாக சந்திரிகா குமாரதுங்கவே இருப்பார். அதில் எந்தச் சந்தேகமும் இல்லை- என்று ஜனாதிபதிக்கு அது வக்காலத்து வாங்கிக் கொண்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும், முதன்முறையாக இப்பொழுதுதான் ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதியை சந்திரிகா குமாரதுங்கவால் தீர்மானிக்க முடியாது என்று ஜே.வி.பி. வெளிப்படையாகக் கூறியுள்ளது.

ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு அளித்த விசேட பேட்டி ஒன்றிலேயே ஜே.வி.பி தலைவர் சோமவன்ஸ இப்படிக் கூறியுள்ளார்.

நிறைவேற்று அதிகாரங்கள் கொண்ட ஜனாதிபதி முறையை ஜே.வி.பி. ஒருபோதும் வரவேற்கவில்லை.

ஆனால், ஒரு சில தினங்களாவது நான் ஜனாதிபதியாக இருந்து நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இல்லாதொழிக்கவேண்டும் என்பதே எனது நோக்கம் - என்றும் ஜே.வி.பி. தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுத்தேர்தல் ஒன்று ஏற்பட்டால் உங்களுடைய கட்சியின் நிலைப்பாடு என்ன என்று கேட்டபோது-

நாங்கள் எதற்கும் தயாராக இருக்கின்றோம். இந்த அரசு இவ்வருட இறுதிவரை நீடிக்குமா என்பதே சந்தேகம்தான். நவம்பர் மாதத்தில் வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பதோடு இவர்களின் ஆட்டம் காலியாகிவிடும். இவர்களால் வரவு- செலவு த் திட்டத்தை சபையில் நிறைவேற்ற முடியாது - என்று கூறினார் ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்க. (ஐ-க)

### உதயவாக்கு

எங்கெல்லாம் கட்டுப்பாடு அதிகமாகிறதோ அங்கெல்லாம் கள்ளத்தனம் தானாகக் குடியேறி விடுகின்றது. - ஓர் அறிஞர்

### நாளை

ஆனி 23
வியாழக்கிழமை
07.07.2005
திதி: பிரதமை
முன்னிரவு 7.41 வரை
நட்சத்திரம் : புனர்பூசம்
முன்னிரவு 07.33 வரை
சுபநேரம்: 07.28 - 08.58
ராகுகாலம்: 01.28 -02.58
(யாவும் பழைய நேரப்படி)

# சுற்றாடல் குழுக்களுக்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சி

வலி.தெற்கு ,ஜூலை6

கிராமிய மட்ட சுற்றாடல் குழுக்களுக்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சியொன்று வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

சுன்னாகம் பொது நூலக மண்டபத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் எஸ்.திருவாகரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் யாழ்ப்பாண உப பிராந்திய அலுவலக பொறுப்பதிகாரி திருமதி கு. வசந்தரூபா இந்த நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுவார்.

இப்பிரதேச செயலர் பிரிவில் மரம் நடுகைக்குரிய இடங்களை இனங்காணுதல், மரம்நடுகை செய்தல், மேற்பார்வை செய்தல், பராமரித்தல் போன்ற நடவடிக்கைகளை சுற்றாடல் குழுக்கள் ஊடாக ஒழுங்கு செய்வது தொடர்பாக இந்த நிகழ்வின் போது கலந்துரையாடப்படும்.

பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள் போன்றோரும் கலந்துகொள்வார்கள். (த-152)



# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு
14' சைனா தச்சுவேலை செய்யும் மெஷின் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: இ.பிறேமச்சந்திரன், கைதடி நுணாவில், கண்டிவீதி, சாவகச்சேரி. (36360)

### காணி விற்பனைக்கு
உடுவில் பாடசாலைக்கு முன்பாக ஞானப்பிரகாசம் வீதியில் முதலாவது காணி 5¼ பரப்பு, கிணற்றுடன் விற்பனைக்குண்டு. விவரங்களுக்கு: சே.கிருஷ்ணகுமார், விதானை வளவு, மானிப்பாய். T.P: 7802. (37247)

மீசாலை கிழக்கு, புதிய ஸ்ரேசனுக்கு அருகில் (குளத்தடி) 4 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P. : 0776245156 (நேரம் பிற்பகல் 6 மணியின் பின்).(37370)

### கதியால்கள் விற்பனைக்கு
முள்கிழுவை கதியால்கள் விற்பனைக் குண்டு. தொடர்பு: இ.மதிவர்ணன், அச்சுவேலி வீதி, நவற்கிரி சந்தி, புத்தூர். (37119)

### வீடு, காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையில் 5 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.P: 0777 570132, 0777 357675 (நண்பகல் 12 மணிக்குப் பின்னர்) தொடர்புகொள்ளவும். (37119)

### வீடு விற்பனைக்கு
ஆனைக்கோட்டை 3ஆம் மைல் கல் அருகில் சகல வசதிகளுடன் கூடிய 1¾ பரப்புக் காணியுடன் வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு: ந.பரந்தாமன் T.P.: 6765. (37349)

கோண்டாவில் மேற்கில் 2 பரப்பு 11 குழி காணியிலமைந்த வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 011 4613157 (நியாயமான விலைகோரும் முதல் நபருக்கே கொடுக்கப் படும். (37196)

### கடை வாடகைக்கு
கோண்டாவில், பலாலி வீதியில் புதிய கடை சகல வசதிகளுடனும் வாடகைக்குண்டு. தொடர்புகளுக்கு: திருமதி நடராசா 174, பலாலி வீதி, கோண்டாவில். (37345)

### வாடகைக்கு
நல்லூர், ஆனைப்பந்தி, கந்தர்மடம் பகுதியில் அமைதியான சூழலில் நான்கு அறைகள் கொண்ட வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: T.P.:077 6949842. (37346)

### வாடகைக்கு உண்டு
கோயில் வீதியில் ஏழு படுக்கை அறைகள், இரண்டு சமயலறைகள், 3 குளியல் அறைகள், வாகனத் தரிப்பிட வசதி (பல வாகனங்கள்), நன்னீர் கொண்டுள்ள சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு விடப்படும். நிறுவனங்களுக்கு உகந்தது. தொடர்பு: 0212222880, 0713055845. (37344)

### தவறிவிட்டது
நாராயண வீதி, கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த வீரகத்தி தங்கராசா என்பவருடைய N.I.C. 430700391V.வி.அ.அ., Jop I.C. என்பன ஸ்ரான்லி றோட்டில் 25.06.2005 அன்று தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ் உள்ள முகவரியில் ஒப்படைக்கவும். வி.தங்கராசா நாராயண வீதி, கோண்டாவில் கிழக்கு.(37339)

### அபூர்வ ஜோதிடம்
ஊழ்வினையில் தீராத வேகமாய் நிற்கும் நோய் குணப்படுத்தல். சனி-ஞாயிறு 8.30 - 2 மணிவரை. அதிர்ஷ்டபலன் சரியாக அறிவித்தல் தொடர்பு: விதானையார் வளவு, உயரப் புலப் பிள்ளையார் கோயில், ஆனைக்கோட்டை. (37245)

### இறைச்சிக் கோழி விற்பனை
Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) தொடர்பு: நல்லூர் வீடியோ சென்ரர் வளவு, 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (37166)

## திருக்கேதீஸ்வரத்தில் திருவாசக முற்றோதல்
திருக்கேதீஸ்வரர் ஆலயத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதி மாணிக்க வாசகரின் குருபூசையும் திருவாசக முற்றோதலும் இடம்பெறவுள்ளன.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள திருவாசக மடத்தில் திருவாசக முற்றோதல் இடம் பெறும். அருட்செல்வர் வை.செ.தேவராசாவால் திருவாசக முற்றோதல் நிகழ்த்தப்படும். (3-203)

## நல்லூர் பிரிவில் வாக்காளர் விவரம் பதிவு
நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் இந்த ஆண்டுக்கான புதிய வாக்காளர் விவரம் பதியப்பட்டு வருகின்றது.

இதற்கான விண்ணப்பங்கள் அப்பகுதிக் கிராம அலுவலர்களிடம் பெற்றுக் கொள்ளலாம் என பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.(த-139)

## ஜெய்ப்பூர் அவயவ பாவனையாளர்களுக்கான கலந்துரையாடல்
ஜெய்ப்பூர் அவயவ பாவனையாளர்களுக்கான கலந்துரையாடல் இன்று புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஜெய்ப்பூர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

அவயவ பாவனையாளர்கள் நாளாந்தம் எதிர்கொள்ளும் பிரச்சினை தொடர்பாக அரச, தனியார் அமைப்புகளுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கைளை மேற்கொள்வது குறித்து கலந்துரையாடலில் ஆராயப்படவிருக்கின்றது என்றும் - கொழும்பிலிருந்து வருகைதரும் அதிகாரியுடன் இவ்விடயம் கலந்துரையாடப்படவுள்ளதாகவும் ஜெய்ப்பூர் அமைப்பின் முகாமைத்துவக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (3-202)


## சிறுவர் அரங்கப் பயிற்சிப் பிரிவு ஆரம்பம்
### செயல்திறன் அரங்க இயக்கம்
Active theatre Movement

புதிதாக ஆரம்பிக்கவுள்ள சிறுவர் அரங்கப் பயிற்சியில் பங்குபற்ற விரும்புபவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- பயிற்சிக்காலம் - 04 மாதங்கள் (கிழமைநாள்களில் விரிவுரைகள் நடைபெறும்)
- பயிற்றுவிப்பாளர் - கலாநிதி குழந்தை.ம.சண்முகலிங்கம்
- பயிற்சி முடிவில் சிறப்பாகத் தேர்ச்சி பெறுவோர் தொழில் சார் ஆற்றுகையாளராக இணைத்துக் கொள்ளப்படுவர்.
- பாடவிதானம்
  - சிறுவர் நாடக எழுத்துருப்படைப்பாக்கம்
  - நடிகருக்கான அடிப்படைப்பயிற்சி
  - சிறுவர் நாடகத் தயாரிப்பு
- எதிர்பார்க்கப்படும் தகுதி
  - க.பொ.த. (உ.த) சித்தியடைந்திருத்தல் வேண்டும்
  - வயதெல்லை 18-35
  - நாடகமும் அரங்கியலும் பாடத்தில் சித்தி, அனுபவம் விஷேட தகுதிகளாகக் கருதப்படும்.

விண்ணப்ப முடிவுதிகதி 10-07-2005
விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி

**செயல்திறன் அரங்க இயக்கம்**
Active theatre Movement
'அருளகம்', ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

(C/43882)(42-11-19)



# கலாலயா
## பயிற்சியகம்
மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

### மகளிருக்கான துரித 3 மாதகாலப் பயிற்சிகள்
☆ கேக் ஐஸிங் - 22 வகையான கேக் அமைப்புகள், சகலவித ஐஸிங், மாச்சீனி மலர்கள் (SUGER CRAFTING) சிக்கனமான முறைகளில் செய்தல்.
☆ கூந்தல் அலங்காரம் - 20 வகையான கொண்டைகள் (HAIR STYLES) போடுதல்.
☆ உணவு தயாரித்தல் - மேலைத்தேச, கீழைத்தேச உணவுகள், சிற்றுண்டிகள் தயாரித்தல்
☆ FABRIC PAINTING - துணிகளில் வர்ணந்தீட்டல், SAND PAINTING AND POT PAINTING
☆ கைவேலை - கடதாசி அலங்காரம், கழிவுத் துணிகளில் வேலை, முத்துமாலை கோர்த்தல்.

### பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்
✦ இத்துடன் அடிப்படை FACIAL மணப்பெண் அலங்காரம் வித்தியாசமான முறைகளில் சேலை அணியும் வகுப்புகள் 2 நாள்கள் நடைபெறும்.
துரித 6 மாதகால தையல், மலர்கள் செய்தல் பயிற்சிகளும் ஆரம்பமாகின்றன.

**சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 10.07.2005**
**கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 11.07.2005**

மேலதிக விவரங்களை காலை 9 மணி முதல் பிற்பகல் 2.30 மணிவரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

-- இயக்குநர்.

(C/43834)(42-11-19)



## Jaffna College Institute of Technology
### Vaddukoddai
# Vacancy

A. Instructor / Lecturer needed to conduct lectures in Draughtmanship (Civil) Apply with bio-Data to

Director
Jaffna College Institute of Technology
Vaddukoddai
Tel.No. 060-2213139
Apply before 11th July 2005
short listed candidates will be called for an interview

B. Register for the following courses before 9th July 2005

*1. Certificate in AutoCAD & Engineering Drawing*
Duration: 3 Months
Course Fee: 3,000/=
Suitable for Draughtsman, A/L students to follow Engineering degrees (especially Civil and Mechanical Engineering)

*2. Civil Diploma*
Covers City & Guilds Construction Industry Technician Diploma Syllabus
Duration: 1 year
Course Fee: 7,000/=

(C/43888)(42-11-19)



மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு
வடக்கு - கிழக்கு மாகாண சபை
வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிக்கொட்)
ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது

# வெற்றிடங்கள்

திருகோணமலை வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்ட முகாமைத்துவக் காரியாலயத்திலும், மாவட்டக் காரியாலயங்களிலும் கீழ்காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பொது நிபந்தனைகள்**
நியமனங்கள் திருப்திகரமான சேவை அடிப்படையில் வருடாந்தம் புதுப்பிக்கப்படக்கூடிய ஒப்பந்த அடிப்படையிலானதாகும். அவ்வொப்பந்தம் திருப்தியடிப்படையில் மேலும் நீடிக்கப்படும்.

**வயதெல்லை**
நேர்முகப் பரீட்சையின்போது 55 வயதிற்குக் குறைந்த விண்ணப்பதாரிகள் இல்லாத சந்தர்ப்பங்களில் மட்டும் 55 வயதிற்கு மேற்பட்டவர்கள் கவனத்திற்கெடுத்துக் கொள்ளப்படுவர்.

**விண்ணப்பிக்கும் முறை**
விண்ணப்பதாரிகள் அவர்களது கல்வித்தகைமை, தொழில்சார் தகைமைகள், பிறந்த திகதி, முன்னைய தொழில் விவரங்கள், முன்னைய அனுபவம், இரண்டு சான்றுபகர்வோர்களின் பெயர்கள், முகவரிகள், சுயதரவுகள் மற்றும் சான்றிதழ்களின் பிரதிகள் உட்பட விண்ணப்பத்தினை அவர்களாகத் தயாரிக்கவேண்டும். விண்ணப்பம் பதிவுத்தபால் மூலம் 2005.07.20 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் 'திட்டப் பணிப்பாளர், வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (NECORD), 55, கந்தசாமி கோயில் வீதி, திருகோணமலை' என்ற முகவரியில் கிடைக்கவேண்டும். அரச திணைக்களம்/அரச கூட்டுத்தாபனங்கள் /சபைகள் என்பவற்றில் சேவையிலிருப்போர் அவர்களது நிறுவனத் தலைவரினூடாக விண்ணப்பிக்கவேண்டும்.

**தெரிவு செய்யப்படும் முறை**
தகைமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட குறுகிய அட்டவணையிலிருந்து நேர்முகப்பரீட்சையொன்றின் மூலம் தெரிவுசெய்யப்படுவர்.

**சம்பளம்**
அரச சேவையில் இப்பதவிக்குரித்தான சம்பளத்துடன் விண்ணப்பதாரியின் தகைமைகளுக்கும் அனுபவத்திற்கும் அமைவாக 2000.12.26ஆம் திகதிய இல 10 முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் பிரமாணம் 5இற்கு அமைவாக அப்பதவிக்கான சம்பளத்தின் 50% மேற்படாத படிஒன்று வழங்கப்படும்.

### கணக்காளர் பதவி II/I (1 பதவி வெற்றிடம் - திட்ட முகாமைத்துவ காரியாலயம்),
**கடமைகளும் பொறுப்புகளும்**
நிதி முகாமைத்துவத்தை ஸ்தாபிப்பதும் பராமரிப்பதும் உள்ளக நிதி கட்டுப்பாடு திட்டமிடுதல், வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்தல், கணக்குகளைச் சரியாக அறிக்கை செய்தலும் கணக்காய்வு செய்தலும் இவைகளைச் சரிவரச் செய்வதற்கேதுவாக தேவையான புத்தகங்களைத் தயாரிப்பதும் பராமரிப்பதும்.


**தேவையான தகைமையும் அனுபவமும்**
- 5 வருட அனுபவத்துடன் அரச கணக்காளர் சேவையில் உரிமத்தவர் அல்லது அரச கணக்காய்வு அத்தியட்சகர் சேவையில் உரிமத்தவராக இருத்தல் வேண்டும். அத்துடன்
- இலங்கை அல்லது ஐக்கிய இராச்சியப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் நடுநிலைப் பரீட்சை அல்லது உரிமத்தவர் பரீட்சை அல்லது
- ஐக்கிய இராச்சிய பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தின் பகுதி 1, பகுதி 2 இல் சித்தி அல்லது
- ஐக்கிய இராச்சியத்தினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் பகுதி 1, பகுதி 2 இல் சித்தி அல்லது
- இலங்கை உயர்தொழில்நுட்பக் கல்லூரியின் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமாவில் சித்தி அல்லது
- இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்லூரியின் உயர் தேசிய வர்த்தக டிப்ளோமாவில் சித்தி அல்லது
- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் கணக்கியல் அல்லது பொருளியல் பாடத்தில் பட்டதாரி அல்லது
- ஐக்கிய இராச்சிய செயலாளர்களினதும் நிர்வாகிகளினதும் பட்டய நிறுவனத்தின் இறுதிப் பரீட்சையில் சித்தி.

### பொறியியலாளர் (2 பதவிகள் - திருகோணமலை, அம்பாறைக் காரியாலயங்கள்)
**கடமைகளும் பொறுப்புகளும்**
- திட்டத்திற்கு தேவையான தொழில்நுட்பத் தகவல்களை வழங்குதலும் மாவட்ட பிரதித் திட்டப்பணிப்பாளருக்கு அறிவுரை கூறுதலும்.
- திட்ட முகாமைத்துவப் பிரிவிற்கு கிடைக்கப்பெறும் திட்ட அறிக்கைகளை பகுப்பாய்வு செய்வதற்கான தகுதி.
- திட்டங்களைத் திறமையாகச் செயற்படுத்துவதிலும் கண்காணித்தலிலும் உள்ள ஆற்றல்களும் வேலைகளையும், சேவைகளையும், வழங்கல்களையும் பெற்றுக்கொள்ளுவது சம்பந்தமான அடிப்படை அறிவு
- செயற்படுத்தலில் ஏற்படும் பிரச்சினைகளைப் பகுப்பாயும் திறமை.

**தேவையான தகைமை**
இலங்கை பொறியியலாளர் சேவை II/I

**த.லங்காநேசன்**
திட்டப் பணிப்பாளர்,
நிக்கொட் திட்டக் காரியாலயம்
55, கந்தசாமி கோயில் வீதி, திருகோணமலை. (C/43384)(42-19-34)

Be **ahead** of your **friends** who choose **similar** or other **Qualifications...**



**Invest** in ACCA

ACCA Part I
↓
ACCA Part II
↓
Obtain a

**BSc (Hons) in Applied Accounting degree from Oxford Brooks University-UK**

- An Internationally recognized accounting qualification now offered in Jaffna
- 320000 students & Members around the world has proven ACCA is the Best Option
- Once Qualified: Qualifiedfor Life

**Part I - Commencing On 9th July 2005**

UNIVENTURES
Institute of Business Management

**55 Martin Road, Jaffna**
E.mail: uibmj@sltnet.lk

**Contact us on :**
**021 2227666**



JTI

**2005 A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான தொழிற்பயிற்சி நெறிகள்**

**அனைத்துப் பயிற்சி நெறிகளுக்கும் 50 % கட்டணச் சலுகை**

25 வது ஆண்டு சிறப்புச் சலுகை

**தொழிற்பயிற்சி நெறிகள்**

வெளிநாடுகளில் இலகுவான முறையில் வேலைவாய்ப்பைப் பெறக்கூடியவாறு 100% தொழில்சார் தொழிற்பயிற்சி அளிக்கப்படும் பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

* **RADIO, T.V AND VIDEO DECK REPAIRING**
சகல இன றேடியோ,ரீ.வீ,டெக் மற்றும் எலக்ரோனிக் உபகரணங்கள், Computer Monitor, Ups, Printer, Scanner, என்பன திருத்தும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 10 மாதங்கள்)

* **MOTOR REWINDING AND ELECTRICAL WIRING**
சகல இன, (f) பான், ரான்ஸ்போமர்கள் றிவைண்டிங் செய்யும் முறை மற்றும் வீட்டு மின்னிணைப்பு Single Phase, Three Phase இணைப்பு முறை என்பன பயிற்சி அளிக்கப்படும். (காலம் 07 மாதங்கள்)

* **AIR CONDITIONING AND REFRIGERATION**
சகல இன குளிர்சாதனப் பெட்டி மற்றும் எயர் கொண்டிசன் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 07 மாதங்கள்)

* **MOTOR CYCLE MECHANISAM**
சகல இன மோட்டார் சைக்கிள், நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 06 மாதங்கள்)

* **HARDWARE & ELECTRONIC** (காலம் 03 மாதங்கள்)

**யாழ்மாவட்டத்தில் முதன்முறையாக City & Guilds International London U.K) நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற**

- Telecommunication Systems
- Electrical & Electronic Engineering
- Constructuion Industry

ஆகிய துறையில் Charted Engineer ஆவதற்கான வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன
GCE (O/L) அல்லது GCE (A/L) படித்த இருபாலரும் சேர்த்துக்கொள்ளப்படுவர்.
வகுப்புக்கள் யாவும் கொழும்பில் உள்ள apps நிறுவனத்தினால் நடாத்தப்படும்.

**COMPUTER COURSES**

*DIPLOMA COURSES*
- Diploma in Microsoft Office 2003
- Diploma in Desk Top Publishing
- Diploma in Internet & E-Mail
- Diploma in Video Mixing
- Diploma in Accounting Package
- Diploma in Hardware Engineering
- Diploma in Computer Programming
- Children Programming

*CERTIFICATE COURSES*
- MsWord 2003/XP
- MsExcel 2003/XP
- MsAccess 2003/XP
- CorelDraw 11
- Adobe PageMaker 7.0
- Adobe PhotoShop 7.0
- Adobe Premier
- Internet & E-mail
- Visual Basic 6.0
- Pascal
- HTML
- Java

GRAPHIC DESINING & DIGITAL CAMERA OPERATIONS

adobe photo shop
digital camera operations
photo scan & negative scan
greetings & calender designing
creative
templates
visiting cards
invitation
advertising layout
printing & publishing
black & white to colour

Adobe Photoshop 7.0

**ஆரம்பம்:- 09.07.2005**
**11.07.2005**

JAFFNA TECHNICAL INSTITUTE
இல. 07, பலாலி வீதி யாழ்ப்பாணம்.
Regd 15251 T.P:- 021-222 3335

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
19 - 07 - 1952

மறைவு
06 - 06 - 2005



## அமரர்
# முத்து கதிரமலை
## (செல்லக்கிளி)

(கிருபா கல்லுடைக்கும் ஆலை உரிமையாளர்)
(வல்லை சந்தி, அச்சுவேலி)

## திதி: அமாவாசை(06.07.2005)

வேராகி நின்றெம்மை
பார்போற்ற வைத்தீர்கள்
விருட்சத்தின் பலமாகி
விண்ணோக்கி விட்ட தலைவா!

வியர்வை சிந்தி வீடு கட்டி
விளக்கேற்றி வைத்தவன் நீ!
துயரத்தில் எமையாழ்த்தி தூர
தேசம் சென்று விட்டாய்!

பெற்றெடுத்த பிள்ளைகளின்
பெருமிதங்கள் காணமுன்னே - உன்
பெற்றோர் பெரிதென்று அவர் போன
இடம் தேடிச் சென்றீரே?

உன் புன்னகை ஒளி சிந்தும்
இன்முகத்தைக் காட்டாமல்
எங்களைக் காலமெல்லாம் கலங்க
விட்டுச் சென்றதேனோ?

காசு பணம் பெரிதென எண்ணாமல்
மனிதரை மதித்த மனித தெய்வமே !
உலகம் போற்றும் உத்தமரே அடைக சாந்தி
ஓம் சாந்தி! ஓம் சாந்தி !! ஓம்சாந்தி !!!

பாசமும் நேசமும் கொண்டு
பண்புடனே வாழ்ந்து - சொந்த
பந்தங்களின் சுகமதை நினைத்து
வாச மலராய்த் திகழ்ந்தாய்!

வெறுப்படைந்து நோயுடனே சென்ற
நீ கண்ணிமைக்கும் போதினிலே எமை
கைவிட்டுப் போனீரே
மறப்போமா உன் முகத்தை?

அவரின் இல்லத்தில் இன்று (06.07.2005) புதன்கிழமை நடைபெறும் அமரரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விளையாட்டரங்க வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

- குடும்பத்தினர்

# போரை மீண்டும் தொடங்குமாறு தலைவரிடம் கோரித் தீர்மானம்!

## கிளிநொச்சி எழுச்சிப் பேரவை மாநாட்டில்

கிளிநொச்சி,ஜூலை6

2005ஆம் ஆண்டை கிளிநொச்சி தேசிய எழுச்சிப் பேரவை போர் ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. தமிழ்மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து மீண்டும் போரைத் தொடங்குமாறு தலைவர் பிரபாகரனிடம் கோரும் தீர்மானம் ஒன்றும் எழுச்சிப்பேரவையால் நிறைவேற்றப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர் சங்கம நிகழ்வின்போதே இந்த ஆண்டு போர் ஆண்டாகப் பிரகடனம் செய்யப்பட்டது.

கிளிநொச்சி பண்பாட்டு மையத்தில் கடந்த முதலாம் திகதி கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சு.பசுபதிப்பிள்ளை தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

முற்பகல் 10 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகின. பொதுச்சுடரினை கிளிநொச்சி உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சொலமன் சூ.சிறில், திருமதி உஷா, கிளிநொச்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பத்மநாதன் ஆகியோர் ஏற்றினர்.

தமிழீழத் தேசியக் கொடியினைத் தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் உமைநேசன் ஏற்றினார்.

தொடர்ந்து கரும்புலிகளின் திருவுருவப் படங்களிற்கு ஈகச் சுடரேற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

சிறப்புரையினைத் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நிகழ்த்தினார்.

கருத்துரைகளை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான திருமதி பத்மினி சிதம்பரநாதன், சிவநேசன், யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சொலமன் சூ. சிறில், தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் உமைநேசன் ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து போராளிகளின் முன்மொழிவுகள், கருத்துரைகள் என்பன இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளரினால் பேரவைப் பிரகடனம் வாசிக்கப்பட்டது. அதில் 2005ஆம் ஆண்டு போர் ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்படுவதோடு தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் போரை ஆரம்பிக்க தமிழீழத் தேசியத் தலைவருக்கு வேண்டுகோள் விடுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பளைப் பிரதேச செயலாளர்கள், கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணர், மாவட்ட பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைப் பேராளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (த-204)

## பூநகரி கமநல நிலையத்துக்கு 'நிக்கொட்' நிறுவனம் உதவி

பூநகரி கமநலசேவை நிலையத்திற்கு ஓர் உழவு இயந்திரத்தை வழங்குவதற்கு 'நிக்கொட்' நிறுவனம் முன்வந்துள்ளது. அத்துடன் அங்கு ஒரு கிணற்றை அமைத்துக்கொடுக்கவும் அந்த நிறுவனம் சம்மதித்திருக்கிறது.

அண்மையில் பூநகரி கமநலசேவை நிலையக் கட்டடத் திறப்புவிழா நிகழ்வின்போது கலந்துகொண்டு உரையாற்றிய 'நிக்கொட்' நிறுவனப் பணிப்பாளர் இலங்காநேசன் இதனைத் தெரிவித்தார்.

இக்கமநலசேவை நிலைய கட்டடத்திற்கான நிதியுதவியினையும் 'நிக்கொட்' நிறுவனம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (த-403)

## கட்டாக்காலி கால்நடைகளால் அக்கராயனில் பயிர்கள் நாசம்

ஸ்கந்தபுரம்,ஜூலை6

அக்கராயன் கிழக்குப் பிரதேச வயல்களில் தற்போது நெல் கதிர்விடும் காலம் ஆயினும் இப்பகுதிகளில் கால்நடைகள் கட்டுப்பாடு இன்றி பயிர்களை நாசம் செய்து வருகின்றன. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கால்நடைகளைக் கட்டுப்படுத்துமாறு உரிய அமைப்புக்கள் அனைத்திற்கும் தெரியப்படுத்தப்பட்ட போதும் எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

சுமார் 180 ஏக்கர் வரையான காணிகளில் இப்பகுதியில் விவசாயம் செய்யப்பட்டு வருவதாகவும், இரவு பகல் முழுநேரமும் கட்டாக்காலி மாடுகள் பயிர்களை நாசம்செய்து வருவதாகவும் அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

இந்த விடயத்தை அசட்டை செய்யாது மிக விரைவில் கால்நடைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர உரிய அமைப்புகள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் விவசாயிகள் கேட்டுள்ளனர். (த-381)

## முல்லை. மாவட்டத்தில் பணியாற்ற மருத்துவர்கள் முன்வரவேண்டும்

### சுகாதாரப் பணிப்பாளர் அவசர வேண்டுகோள்

முல்லைத்தீவு,ஜூலை6

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் வைத்தியர்களுக்கு பெரும் பற்றாக்குறை நிலவுவதால் அவற்றை நிவர்த்தி செய்வதற்கு இந்த மாவட்டத்தைச் சேர்ந்த வைத்தியர்கள் முன்வரவேண்டும்.

- இவ்வாறு அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார் முல்லை. மாவட்டப் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கான புதிய கட்டடத்திறப்பு விழாவில் வைத்தே இந்த அவசர வேண்டுகோளை அவர் விடுத்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது மாவட்டத்திலுள்ள பல வைத்தியசாலைகள், பல நிரந்தர மற்றும் தற்காலிக வைத்தியர்கள் இல்லாமல் இயங்கிவருகின்றன. இதனால், எமது மாவட்டத்திலுள்ள மக்களுக்கு முழுமையான வைத்திய சேவையை வழங்க முடியாதுள்ளது.

எமது மாவட்டத்தைச் சேர்ந்த பலர் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடம் உட்பட பல்வேறு இடங்களில் மருத்துவத்துறையில் பட்டப்படிப்பை முடித்து வைத்திய நிபுணர்களாக வெளியேறியுள்ளனர். இவர்கள் தமது சொந்த இடங்களில் சேவையைச் செய்யாது வேறு மாவட்டங்களில் பணியாற்றி வருகின்றனர்.

எனவே, எமது மாவட்ட மக்களின் மருத்துவ நலனைக் கருத்திற்கொண்டு இந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்களோ அன்றி வேறு மாவட்டங்களைச் சேர்ந்த வைத்தியர்களோ இங்கு சேவையாற்ற முன்வரவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். (த-410-353)

## கொக்கிளாய் - கொக்குத்தொடுவாய் மக்களின் பிரச்சினை குறித்து ஆராய்வு

முல்லைத்தீவு,ஜூன்6

கொக்குத்தொடுவாய், கொக்கிளாய் ஆகிய பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கான முக்கிய சந்திப்பொன்று கடந்த வியாழக்கிழமை முள்ளியவளையில் இடம்பெற்றது.

கடந்தகால இராணுவ நடவடிக்கைகளின் போது இடம்பெயர்ந்த மேற்படி இடங்களைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான மக்கள் முள்ளியவளை உட்படப் பல பிரதேசங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

தமக்கு மீள்குடியமர்வுக் கொடுப்பனவு உட்பட ஏனைய இதர வசதிகள் எதனையும் அரசு செய்துகொடுக்கவில்லை என்று கூறி அவர்கள் அண்மையில் அடையாள மறியற் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து அப்பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்காகவே இச்சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பில் கரைதுரைப்பற்று உதவி அரச அதிபர் எஸ்.சோதிநாதன், முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ. முகுந்தன், முல்லை. மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் முரளி மற்றும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் ஆகியோர் கலந்துகொண்டு இந்த மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகக் கேட்டறிந்து கொண்டனர். (410-353)

கிளிநொச்சி வன்னிச் செய்திகள் முல்

## கோட்டமட்ட சமூகக்கல்விப் போட்டி

வட்டக்கச்சி,ஜூலை6

கிளிநொச்சி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான கோட்டமட்ட சமூகக்கல்வி எழுத்துப் போட்டி எதிர்வரும் 7ஆம் திகதி நடைபெறவுள்ளது. பூநகரிக் கோட்ட ஆக்கத்திறன் கண்காட்சி 8ஆம் திகதி பூநகரி மகா வித்தியாலயத்தில் நடைபெறும் என கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (த-405)

## கிளிநொச்சி வலயப் பாடசாலைகளில் பொருட்காட்சிகளை நடத்த ஏற்பாடு

வட்டக்கச்சி,ஜூலை6

கிளிநொச்சி வலயப் பாடசாலைகளில் பொருட்காட்சிகளை நடத்த வலயக் கல்விப் பணிமனை ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

பாடசாலைகளில் தரம் ஒன்று தொடக்கம் 13 வரையான வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்களின் ஆற்றல்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குவதற்காகப் பொருட்காட்சி ஒன்றினைப் பாடசாலைகளில் நடத்தவேண்டும் என கடந்த 15ஆம் திகதிய கல்வி அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக வலயக் கல்விப் பணிப்பாளர் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

இப்பொருட்காட்சிகளை ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலைகளில் நடத்துமாறும் இதில் அனைத்து மாணவர்களையும் பங்குபற்றக்கூடிய ஏற்பாடுகளைச் செய்யுமாறும் அவர் கேட்டுள்ளார்.

இப்பொருட்காட்சிகளில் ஒவ்வொரு பாடசாலை மட்டத்திலும் ஒவ்வொரு பாடத்திற்கும் வகுப்பு ரீதியாக ஐந்து ஆக்கங்கள் தெரிவுசெய்யப்பட்டு கோட்டமட்டப் பொருட்காட்சி நடத்தப்படும்.

கோட்டமட்டப் பொருட்காட்சிகளில் தெரிவு செய்யப்படும் ஆக்கங்கள் வலயமட்டப் பொருட்காட்சியில் வைக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-405)



முழங்காவில் கமநல கேந்திர நிலையத் திறப்புவிழா அண்மையில் நடைபெற்றது. அப்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் முழங்காவில் கிராமசேவையாளர் கு.நாகலிங்கம், முதுபெரும் விவசாயி பே.சந்தியாப்பிள்ளை ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்தில் காணலாம்.

கமநல கேந்திரநிலையத்தின் முகப்புத் தோற்றத்தையும் அதனைப் பொருண்மிய மேம்பாட்டுப் பொறுப்பாளர் சி.கரிகாலன் நாடாவெட்டித் திறந்துவைப்பதையும் அடுத்துள்ள படங்களில் காணலாம். (படங்கள்: ச.உதயசங்கர், வெள்ளாங்குளம் செய்தியாளர்)

# பலாலி ஆசிரியர் கலாசாலைக்கு புதிய அனுமதிகள் வெள்ளியன்று

யாழ்ப்பாணம்,ஜூலை6

பலாலி ஆசிரியர் கலாசாலையில் பல்வேறு பாடநெறிகளுக்கு விண்ணப்பித்தோருக்கான அனுமதிகள் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வழங்கப்படவுள்ளன என கலாசாலை அதிபர் தெரிவித்தார்.

உடற்கல்வி, கடல்வளம், விஞ்ஞானம், கணிதம், விவசாயம், வர்த்தகம் ஆகிய பாட நெறிகளுக்கே அனுமதிகள் வழங்கப்படவுள் ளன என்றும் -

மேற்படி பாடநெறிகளுக்கு விண்ணப்பித் தோர் தமது தாரதங்களை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளுடன் சமூக மளிக்குமாறும் - கலாசாலை அதிபர் கேட்டுள் ளார். (3-202)



தேசிய வாசிப்பு மாதத்தை ஒட்டி வரணி பொதுநூல் நிலையத்தினரால் நடத்தப்பட்ட பேச்சுப் போட்டி, வாசிப்புப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் நூல் நிலையத்தில் அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வின் பிரதம விருந்தினரான யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா மாலை அணிவித்து வரவேற்கப்படுவதைப் படத்தில் காணலாம். நூலக அபிவிருத்திச் சபைத் தலைவர் சி.அருணாசலமும் படத்தில் உள்ளார். (படம்: வரணிச் செய்தியாளர்)

# சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் தற்காலிக விடுதி அமைக்க நிதி

யாழ். அரச அதிபர் கணேஷ் உறுதியளிப்பு

தென்மராட்சி,ஜூலை6

சாவகச்சேரி ஆஸ்பத்திரி வார்ட்டுகளில் ஏற்பட்டுள்ள இடநெருக்கடியை நேரில் பார்வையிட்ட யாழ். அரச அதிபர் கே.கணேஷ் தற்காலிகமாக விடுதி அமைக்க நிதி ஒதுக்கீடு செய்வதாகத் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்த அரச அதிபர் அங்குள்ள நிலைமைகளை நேரில் பார்வையிட்டார்.

ஆஸ்பத்திரியில் போதிய விடுதி வசதிகள் இல்லாததால் ஏற்பட்டுள்ள இடநெருக்கடியைக் கருத்திற்கொண்டு தற்காலிக விடுதி அமைக்க நிதி வழங்குவதாகவும், அதற்கான மதிப்பீட்டினைத் தயாரித்து வழங்குமாறும் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியைக் கேட்டுள்ளார்.

யாழ். அரச அதிபரும் குழுவினரும் ஆஸ்பத்திரிக்கு வந்தபோது வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறவந்து நீண்டவரிசையில் மர நிழலில் நோயாளர் நின்றதுகண்டு கவலையடைந்ததாகவும் - வசதிகளற்ற நிலையிலும் சிறப்பாகச் சேவையாற்றி வரும் வைத்தியர்கள் மற்றும் ஊழியர்களைப் பாராட்டுவதாகவும் அவர் தெரிவித்தார். (த-117)

# உலக வங்கியின் வீடமைப்புத் திட்டம்; 448 பேருக்கு முதற்கட்டக் கொடுப்பனவு

## கட்டுமானப் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை6

உலக வங்கியின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் இதுவரை 448 குடும்பங்களுக்கு முதற் கட்டமாகக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு விட்டன என்று யாழ். மாவட்டத் திட்டப் பணிப்பாளர் எஸ்.சாம்பசிவம் தெரிவித்துள்ளார்.

உலக வங்கியின் நிதி உதவியுடன் ஆயிரம் வீடுகளை அமைப்பதற்கான திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின்கீழ் தற்போது 448 குடும்பங்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

மீதி 552 குடும்பங்களுக்கான கொடுப்பனவுகள் இவ்வாரத்திற்குள் வழங்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

நெடுந்தீவு, வேலணை, காரைநகர், ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம், நல்லூர், சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில், தெல்லிப்பழை, கோப்பாய், கரவெட்டி, பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த 448 குடும்பங்களுக்கே முதற்கட்டக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

முதற்கட்டமாகக் கொடுப்பனவு பெற்றவர்கள் கட்டுமானப் பணிகளை ஆரம்பித்துவிட்டனர் எனவும் அவர் மேலும் கூறினார். (3-203-204)

# ஸ்கந்தாவில் புதிய மாடிக்கட்டடம்

யாழ்ப்பாணம்,ஜூலை6

சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு 75 லட்சம் ரூபா செலவில் புதிய மாடிக்கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு வருவதாகக் கல்லூரியின் அதிபர் க.சிவாஜி தெரிவித்தார்.

'நிக்கொட்' நிறுவனத்தின் நிதி உதவியுடன் இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டு வருவதாகவும் இதற்குரிய ஆரம்பகட்ட வேலைகள் தற்போது நடைபெற்று வருவதாகவும்

இக்கட்டட வேலைகள் யாவும் இவ்வாண்டு இறுதிப்பகுதியில் பூர்த்தியடையும் என்றும் அவர் தெரிவித்தார்.

பன்னிரண்டு வகுப்பறைகளைக் கொண்ட கட்டடத் தொகுதியாக இது அமையும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-13)

# சரசாலை சுகாதாரப் பிரிவில் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி

தென்மராட்சி,ஜூலை6

சரசாலைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பின்வரும் இடங்களில் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய்த் தடுப்பு மருந்து வழங்கப்படவுள்ளது.

நாளைமறுதினம் காலை 9 மணிக்கு மீசாலை வடக்கு அறிவொளி முன்பள்ளி, முற்பகல் 11 மணிக்கு மீசாலை வடக்கு நளினி முன்பள்ளி ஆகியவற்றிலும் -

13ஆம் திகதி காலை 9 மணிக்கு மந்துவில் கிழக்கு இரத்தினம் சனசமூக நிலையம், முற்பகல் 11 மணிக்கு மந்துவில் ஆரம்ப சுகாதார நிலையம் ஆகியவற்றிலும் -

15ஆம் திகதி காலை 9 மணிக்கு மந்துவில் மேற்கு சூரியகுமாரன் சனசமூக நிலையம், முற்பகல் 11 மணிக்கு தாவளை இயற்றாலை சனசமூக நிலையம் ஆகியவற்றிலும் - தடுப்பு மருந்து போடப்படும்.

குறித்த இடங்களில் தங்களது வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பு மருந்து ஏற்றிக்கொள்ளுமாறு சரசாலைப் பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கா.சிவனேசகுமார் மக்களுக்கு அறிவித்துள்ளார். (த-117)

# தீவுப் பகுதிகளுக்கு பௌசர்கள் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்க ஏற்பாடு

மண்டைதீவு,ஜூலை6

தீவுப்பகுதியில் நிலவும் கடும் வரட்சி காரணமாக அந்தப் பகுதியிலுள்ள கிணறுகள் வற்றியுள்ளன. வரட்சியால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்குக் குடிதண்ணீர் விநியோகம் செய்வதற்கு வேலணைப் பிரதேச செயலகம் ஏற்பாடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


இதன் ஒருகட்டமாக மண்டைதீவுக் கிராமத்தில் உள்ளவர்களுக்கு இரண்டு நாள்களுக்கு ஒருமுறை பௌசர் மூலம் நீர் வழங்கப்பட்டு வருகிறது. பொதுமக்களின் நன்மைகருதி மண்டைதீவு கிழக்கு அம்மன் கோயில் பகுதி, தெற்கிலுள்ள விநாயகர் ஆலயம் மற்றும் 32 வீட்டுத்திட்டப் பகுதி ஆகிய இடங்களில் தற்காலிக நீர்த்தாங்கிகளும் அமைக்கப்பட்டு நீர் விநியோகம் செய்யப்படுகிறது. (த-88)

# நம்பிக்கை நிதியத்தில் ஓய்வூதியர் இணையலாம்

யாழ்ப்பாணம்,ஜூலை6

யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவில் ஓய்வூதியம் பெறுபவர்கள் "பகிரங்க சேவை ஓய்வூதிய பெறுநர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில்" அங்கத்தவர்களாக இணைந்து இந் நிதியத்தால் வழங்கப்படும் நன்மைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு செயலாளர் ம.ஞானசேவியர் கேட்டுள்ளார்.

இந்த நம்பிக்கை நிதியத்தில் இணைவதன் மூலம் நிதிய விதிகளுக்கமைய 10ஆயிரம் ரூபா கடனைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன், சந்தா செலுத்தியவரின் இறப்பிற்குப் பின்னர் செலுத்திய சந்தாவின் 10 மடங்கு தொகையும் வேறு நன்மைகளும் அவரது குடும்பத்தினருக்கு வழங்கப்படும்.




இந்த நிதியத்தில் இணைந்துகொள்ள விரும்புபவர்கள் அங்கத்துவ அட்டை பெறுவதற்கான விண்ணப்பங்களை நிரப்பி அனுப்புமாறு செயலாளர் ம.ஞானசேவியர் கேட்டுள்ளார். (த-204)

# மண்டைதீவில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு வீடமைக்கப் பொருள்கள்

மண்டைதீவு,ஜூலை6

மண்டைதீவுக் கிராமப் பகுதியில் மீளக் குடியமர்ந்தவர்களுக்கு நிரந்தரவீடுகள் மற்றும் அரைநிரந்தர வீடுகள் அமைப்பதற்கான சீமெந்து, கூரை சீற்றுகள், தீராந்திகள், சலாகைகள் என்பவற்றை அரசசார்பற்ற நிறுவனங்கள் வழங்கி வருகின்றன. தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கே இவை வழங்கப்பட்டுகின்றன.

உலக வங்கியின் நிதியுதவியுடன் தலா இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியான 68 நிரந்தர வீடுகளும் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்தால் தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான 80 அரை நிரந்தர வீடுகளும் அமைத்துக்கொடுக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கிராமத்தில் 300இற்கும் அதிகமான குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (த-88)

# மீளக்குடியமர்ந்து 10 வருடங்களாகியும் மின் இணைப்பு வழங்கப்படவில்லை

ஊர்காவற்றுறை,ஜூலை6

ஊர்காவற்றுறை, ஒழுவில் கிராமத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்து பத்து வருடங்களாகியும் இதுவரை மின் இணைப்பு வழங்கப்படவில்லை. எனவே, இப்பகுதிக்கு விரைவில் மின் இணைப்பு வழங்கக்கோரி இப்பகுதி மக்கள் கையொப்பமிட்ட மகஜர் ஒன்று இலங்கை மின்சாரசபையின் வட பிராந்திய மின் அத்தியட்சகருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஒழுவில் மக்கள் மீளக்குடியமர்ந்து பல வருடங்களாகின்றன. எனினும், இன்றுவரை மின் இணைப்பு வழங்கப்படவில்லை. இது தொடர்பில் பல கடிதங்கள் இலங்கை மின்சார சபைக்கு அனுப்பப்பட்ட போதும் இதுவரை உரிய பலன் ஏதும் கிடைக்கவில்லை.

ஊர்காவற்றுறையிலுள்ள மின் பிறப்பாக்கி மூலம் பலருக்கு மின் வழங்கக்கூடிய வாய்ப்பிருந்தும் மின் கம்பங்கள் இல்லை என்ற காரணத்தினால் இப்பகுதி தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருகிறது.

எனினும், இப்பகுதிக்கு மின் இணைப்பு வழங்குவதற்கென கடந்த வருடம் ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் ஐந்து லட்சம் ரூபா இலங்கை மின்சாரசபைக்கு வழங்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டது. அதன் பின்னரும்கூட மின் இணைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

பலர் வீட்டு மின்சுற்று வேலைகளைப் பூர்த்தியாக்கி மின்சாரசபைக்கு மின் இணைப்புக் கோரி விண்ணப்பித்தும் உரிய பலன் எதுவும் கிடைக்கவில்லை - இவ்வாறு அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-16)

# சுயதொழில் ஊக்குவிப்பிற்கு ஒரு கோடி ரூபா கடன்

## சமூக அபிவிருத்தி மன்றம் வழங்கியுள்ளது

யாழ்ப்பாணம்,ஜூலை6

சுயதொழிலை ஊக்குவிக்குமுகமாக சமூக அபிவிருத்தி மன்றம் ஒருகோடி ரூபாவை கடன் உதவியாக வழங்கியுள்ளது. தேசிய நம்பிக்கை நிதியத்தின் நிதி உதவி மூலம் இந்த உதவியை வழங்கிவருவதாக மன்றத் தலைவி திருமதி ந.ஜெகதீசன் தெரிவித்துள்ளார்.

மேற்படி கழக அங்கத்தவர்களுக்கு இதுவரை ஒரு கோடி ரூபா கடன் வழங்கப்பட்டுள்ளதாகவும்.

இந்தக் கடன் மூலம் பயனாளிகள் விவசாயம், மரக்காலை, கணனி வகுப்பு நடத்தல், நடைபாதை வியாபாரம் செய்தல், முந்திரிகை நடுகை போன்ற சுயதொழில்களை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் மன்றத் தலைவி தெரிவித்தார்.

இக்கடன் அடிப்படையில் கடந்த 30ஆம் திகதி 95 பயனாளிகளுக்குக் கடன் வழங்கப்பட்டது. 6 வீத வட்டி அடிப்படையிலேயே இக்கடன் வழங்கப்பட்டுவருகின்றது.

இந்தக் கடன்களை எடுப்பவர்கள் மேற்படி கழகத்தில் சேமிப்பை மேற்கொள்ளவேண்டும். சேமிப்பை ஊக்குவிக்குமுகமாகவும் மக்களின் அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்குடனும் இந்தக் கடன் வழங்கப்பட்டு வருகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - தேசிய நம்பிக்கை நிதியத்தினர் கடன்பெற்று சுயதொழில் செய்பவர்களை நேரடியாகச் சென்று பார்வையிட்டும் வருகின்றது. (3-203-202)

# இந்திய - அமெ.பாதுகாப்பு உடன்பாடு; கம்யூனிஸ்ட் கட்சிகள் கடும் எதிர்ப்பு

புதுடில்லி,ஜுலை6

இந்தியாவும் அமெரிக்காவும் செய்துகொண்டிருககும் பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாட்டுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

அந்த உடன்பாட்டைக் கண்டித்து எதிர் வரும் 8ஆம் திகதி நாடு முழுவதும் எதிர்ப்புப் பேரணிகளும் கண்டன ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்படும் என்று அக்கட்சிகள் நேற்றுமுன்தினம் அறிவித்தன.

ஏற்கனவே, பெற்றோல், டீசல் ஆகியவற்றின் விலைகளை மத்திய அரசு உயர்த்தியதாலும், லாபம் ஈட்டும் அரசுத்துறை நிறுவனமான பாரத மிகுமின் (பெல்) நிறுவனத்தின் பங்குகளைத் தனியாருக்கு விற்க அரசு முடிவு செய்ததாலும் கம்யூனிஸ்ட் கட்சிகள் அதிருப்தி அடைந்துள்ளன.

இந்நிலையில், இந்திய - அமெரிக்க பாதுகாப்பு உடன்பாடு செய்து கொள்ளப்பட்டுள்ளதை அடுத்து அக்கட்சிகள் மிகுந்த ஆத்திரமடைந்துள்ளன.

இரு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் கூட்டம் டில்லியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலர் பிரகாஷ் காரத், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியச் செயலாளர் டி.ராஜா, ஏ.பி.பரதன் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

பெல் நிறுவனப் பங்குகளைத் தனியாருக்கு விற்கும் பிரச்சினை தொடர்பாக, கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுடன் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவரான சோனியா காந்தி 2 நாள்களுக்குமுன் பேச்சு நடத்தினார். அதன் விவரங்களை பரதனிடம் ராஜாவும், பிரகாஷ் காரத்தும் எடுத்துக் கூறினர். இந்திய - அமெரிக்கப் பாதுகாப்பு உடன்பாடு குறித்தும் அவர்கள் விவாதித்தனர்.

"இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைக்கு எதிரானதாகும் அந்த உடன்பாடு இந்தியாவின் இராணுவ மற்றும் பாதுகாப்பு நலன்களுக்குப் பாதகமான விளைவை ஏற்படுத்தும்.

இந்தப் பிராந்தியத்தில் ஆயுதப் போட்டியையும் அந்த உடன்பாடு ஏற்படுத்தும். அமெரிக்க மற்றும் ஐரோப்பிய இராணுவ நலன்களுக்குத் துணைபுரிவதே அதன் நோக்கம். அமெரிக்காவின் இராணுவ நண்பர்களான ஜப்பான், தென்கொரியா, பிலிப்பைன்ஸ் ஆகியவற்றின் வரிசையில் இந்தியாவையும் அந்த உடன்பாடு சேர்த்துவிடும்.

எனவே, நாட்டின் இறையாண்மையைக் காக்கும் பிரச்சினையில் எந்தவித சமரசத்துக்கும் இடமில்லை. அதைக் கண்டித்தும் 8ஆம் திகதி நாடு முழுவதும் எதிர்ப்புப் பேரணியும் ஆர்ப்பாட்டமும் நடத்தப்படும் - என்று அக்கட்சித் தலைவர்கள் கூறினர்.

# பொது இடங்களில் முத்தமிட இந்தோனேசியாவில் தடை!

ஜகார்த்தா,ஜுலை6

இந்தோனேசியாவில் பொது இடங்களில் முத்தமிடக்கூடாது என்று அந்த நாட்டு அரசாங்கம் தடைவிதித்திருக்கிறது. இது தொடர்பான சட்டம் ஒன்று அங்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இதன்படி பூங்கா, கடற்கரை, பஸ் நிலையம், ரயில நிலையம் போன்ற பொது இடங்களில் முத்தம் கொடுக்கக்கூடாது. அவர்கள் திருமணமான ஜோடியாக இருந்தாலும் சரி, காதல் ஜோடியாக இருந்தாலும் சரி இந்தத் தடை பொருந்தும்.

அதுமட்டுமல்ல அங்கு திருமணம் ஆகாமல் ஆணும், பெண்ணும் சேர்ந்து வாழக் கூடாது. ஓரினச் சேர்க்கைக்கும் தடைவரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடைகளை மீறுபவர்களுக்கு கடும் தண்டனை

உலக அரங்கில்

வழங்கவும் புதிய சட்டம் வகைசெய்யும்.

இந்தோனேசியாவில் குடும்ப தின நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அதிபர் அறோயா பேசும்போது, "மேலைநாட்டு மோகம் வேண்டாம். நமது கலாசாரத்தைக் காப்பாற்றுங் கள். டெலிவிஷன்கள் அரைகுறை ஆடையுடன் பெண்கள் தோன்றும் காட்சிகள் ஒளிபரப்புவதை நிறுத்திக்கொள்ள வேண்டும்" என்று கூறி இருக்கிறார். (த)

# பின்லேடன் கைது செய்யப்பட்டால் அவரது விடுதலைக்கான செலவை நானே ஏற்பேன்

## அவரது சகோதரன் தெரிவிப்பு


வாஷிங்ரன்,ஜுலை6

அல் - குவைதா தீவிரவாத அமைப்பின் தலைவர் ஒஸாமா பின்லேடன் கைது செய்யப்பட்டால், அவரது விடுதலைக்கான வழக்குச் செலவு முழுவதையும் தாமே ஏற்பார்- என்று அவரது தம்பி எஸ்லாம் பின்லேடன் கூறியிருக்கிறார்.

எஸ்லாம், தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

ஒருவர் மீது குற்றம் சுமத்தப்படும்போது அதை மறுத்து வாதாட அனைவருக்கும் உரிமை உண்டு. ஒஸாமா பிடிபட்டால், அவர் மீது வழக்குத் தொடரப்படும். வழக்கு விசாரணையின்போது அவருக்காக நான் வழக்கை நடத்துவேன். அதற்கான செலவை நான் ஏற்பேன் - என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஒஸாமாவின் தந்தை முகமது பின்லேடனுக்கு 22 மனைவிகள். இவர்கள் மூலம் 54 மகன்களும் மகள்களும் உண்டு. இந்த 54 பேர்களில் ஒருவர் எஸ்லாம் ஒஸாமாவின் மாற்றாந்தாய் மகன் என்பது குறிப்பிடத்தக்கது.



குஜராத்தில் பெய்துவரும் கன மழையால் பல கிராமங்களில் வெள்ளம் புகுந்துள்ளது. இதில் ஆமதாபாத் அருகில் உள்ள வதோதராவில் வீடுகளில் தண்ணீர் புகுந்ததால் கிராமத்தினர் தங்கள் குழந்தைகள் மற்றும் குடும்பத்தினருடன் வீட்டுக் கூரைகளில் தஞ்சம் அடைந்துள்ளனர். 7 ஆயிரத்து 200 கிராமங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. ஒரு லட்சத்து 76 ஆயிரம் பேர் வீடுகளை இழந்துள்ளனர். இதுவரை 135 பேர் இறந்துள்ளனர்

# உடல் பருமனைக் குறைக்க தீக்குச்சி அளவில் புதிய கருவி!

## இங்கிலாந்து மருத்துவர்கள் கண்டுபிடிப்பு

இங்கிலாந்து டாக்டர்கள் பருமனான உடம்பைக் குறைக்க புதிய கருவி ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்தக் கருவி மூலம் உடற்பயிற்சி எதுவும் செய்யத் தேவை இல்லை.

பொதுவாக வாயைக் கட்டினாலே உடல் பருமன் குறையும். வயிறு முட்ட சாப்பிடுவதை குறைத்துக்கொள்ளவேண்டும்.

லண்டன் டாக்டர்கள் உருவாக்கி உள்ள இந்த புதிய கருவியும் இந்த வேலையைத்தான செய்கிறது.

இந்தக்கருவி ஒரு தீக்குச்சி அளவில் தான் இருக்கிறது. இதை வயிற்றின் அடிப்பாகத்தில் பொருத்தி விடுகிறார்கள். இந்தக் கருவியை பொருத்திக் கொண்டால் வயிறு முட்ட சாப்பிட முடியாது. ஒருவாய் சாப்பிட்டாலே வயிறு முட்ட சாப்பிட்டது போன்ற உணர்வு ஏற்படும்.

நரம்பு இந்த உணர்வைக் கொண்டு செல்லும். வேறு பக்க விளைவுகள் எதையும் ஏற்படுத்தாது.

நிரந்தரமாக இந்த கருவியை வயிற்றில் கட்டிக் கொண்டால் பசியே எடுக்காது.

இவ்வாறு இந்தப்புதிய கருவி குறித்து இங்கிலாந்து டாக்டர்கள் விளக்கமளித்திருக்கின்றனர். (த)


மூன்றாவது ஆண்டு வெற்றிகரப் பூர்த்தி



TNT
20%
விசேடகழிவு வழங்குகின்றது

எமது சேவைகள்
- சர்வதேச கூரியர் சேவை
- உள்நாட்டுக் கூரியர் சேவை
- சர்வதேச தபால் சேவை

TNT கூரியர் சேவை
56/15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(பழைய தபாற்கந்தோர் ஒழுங்கை)
021 222 3771, 0777 270452, 0777 915824.
E-mail:- aitkenspencejf@sltnet.lk

நாங்கள் உங்களது அன்பளிப்புப் பொருள்களை மட்டுமல்ல அவற்றோடு சேர்த்து உங்கள் அன்பினையும் எடுத்துச் சென்று அங்கு சேர்க்கின்றோம் என்பதை மட்டும் மறந்துவிடாதீர்கள்!

இவ்விசேட சலுகை 2005-07-31 வரை மட்டுமே



உங்கள் விமானப் பயணத்திற்கு!
Aero Lanka
In Domestic Operation



New way of flying

Head office
No.500,Galle Road, Wellawatte, Colombo-06
Tel:2505632-3 Fax:2500626

Jaffna office
No.86,PointPedro Road, Jaffna. Tel:021-2226242 Fax:021-2225600

Branch
No:14,New Market Building Chavakachcheri
Tel:021-2227979 Fax: 021-2227979

Trinco Office
No.47,Kandy Road, Trincomalee.
Tel:026-2221519 Fax:026-2221519

யாழ்⇆கொழும்பு | யாழ்⇆திருகோணமலை⇆கொழும்பு


# ஆபிரிக்க நாடுகளின் வறுமையை தடுக்க செல்வந்த நாடுகள் முன்வருமா?

## இன்று தெரியும் என்கின்றனர் ஆபிரிக்க ஒன்றியத் தலைவர்கள்

லண்டன்,ஜுலை6

ஆபிரிக்காவில் உள்ள ஏழைநாடுகளில் வறுமையால் தினமும் 30 ஆயிரம் சிறுவர்கள் இறக்கிறார்கள். இதைத் தடுத்துநிறுத்த பணக்கார நாடுகள் முன்வருமா என்ற எதிர்பார்ப்புக்கு இன்று ஸ்கொட்லாந்தில் நடக்கும் பணக்கார நாடுகளின் மாநாடு விடையளிக்கும் என்று ஆபிரிக்க ஒன்றியத் தலைவர்கள் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் லிபியாவில் ஆரம்பமான ஆபிரிக்க ஒன்றிய மாநாட்டிலேயே தலைவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

ஆபிரிக்காவில் உள்ள ஏழை நாடுகளில் வறுமை கோரத் தாண்டவம் ஆடுகிறது. வறுமைக்கு தினமும் 30 ஆயிரம் சிறுவர்கள், குழந்தைகள் பலியாகிறார்கள். இதைத் தடுத்து நிறுத்த பணக்கார நாடுகள் முன்வரவேண்டும் என்று ஆபிரிக்க ஒன்றியத் தலைவர்கள் வலியுறுத்தினர்.

ஏழைநாடுகளுக்கு கொடுக்கப்பட்ட அனைத்துக் கடன்களையும் நிபந்தனையின்றி ரத்துச் செய்யவேண்டும் என்றும்-

பணக்கார நாடுகளின் சந்தைக்கு ஏழை நாடுகள் உற்பத்திப் பொருள்களை அனுப்புவதற்கிருக்கும் வர்த்தகத் தடைகள் களையப்படவேண்டும் என்றும்- ஆபிரிக்க நாடுகள் இநத மாநாட்டின் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளன.

எங்களுக்கு நிதி உதவி தேவை இல்லை. எங்கள் உற்பத்திப் பொருள்களை விற்பதற்கு வசதி வேண்டும் என்றும் இந்த மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது.

மேலும், செல்வந்த நாடுகளிடம் பிச்சை கேட்கக் கூடாது. கடன்கள் தொடர்பில் ஜி.8 நாடுகளிடம் கெஞ்சி மன்றாடுவது ஆபிரிக்காவுக்கு நல்லதோர் எதிர்காலத்தை தராது என லிபிய ஜனாதிபதி அவரது ஆரம்ப உரையில் தெரிவித்தார்.

அத்துடன் பல நிபந்தனைகளுடன் கூடிய உதவி தங்களுக்குத் தேவையில்லை, ஒத்துழைப்பே தேவை என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த மாநாட்டின்போது ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கொபி அனான் உரையாற்றினார்.

இனப்படுகொலை, போர்க்குற்றங்கள் மற்றும் இ ச் சுத்திகரிப்பு ஆகியவற்றில் இருந்து மக்களைப் பாதுகாக்க அவர்களது அரசுகள் தவறினால், மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு ஏனைய நாடுகளுக்கு உண்டு என்று அவர் கூறினார். உலக பணக்கார நாடுகள் பங்குகொள்ளும் ஜி-8 மாநாடு இன்று ஸ்கொட்லாந்தில் ஆரம்பமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.(க)

# மூத்த அரசியல்வாதி உட்பட 3 பேரை நேபாள அரசு விடுதலை செய்தது

நேபாள அரசால் கைதுசெய்து வைக்கப்பட்டிருந்த மூத்த அரசியல்வாதியான நர்ஹாரி ஆசார்யா, மனித உரிமைகள் நடவடிக்கை ஆர்வலர் மற்றும் மாணவர் தலைவர் ஆகியோர் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த பெப்ரவரி மாதம் மன்னர் ஜியானேந்திரா ஆட்சிப் பொறுப்பை ஏற்று நெருக்கடி நிலையை பிரகடனப்படுத்திய சந்தர்ப்பத்தில் கைது செய்யப்பட்டவர்களே நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இவர்களை விடுதலை செய்வதற்கான காரணம் எதையும் நேபாள அரசு இதுவரையில் கூறவில்லையென நதிமன்ற மற்றும் பொலீஸ் அதிகாரிகள் தெரிவித்தனர். நாட்டின் நிலையில் எதுவித முன்னேற்றமும் இல்லை. எந்த நேரமும் நாம் மீண்டும் கைது செய்யப்படலாம் என மனித உரிமை ஆர்வலரான பாஹாடி தெரிவித்தார்.




Study In India
B.Sc. (Nursing) தாதியியல்
காலம்: 4 வருடங்கள்
தகுதி: க.பொ.த (உ/த) சித்தி
உயிரியல், பௌதிகம், இரசாயன
கல்லூரி: V.M. தாதியியல் கல்லூரி சே
பாண்டிச்சேரி, காரைக்கால்.
NN CONSULT
Telephone: 5558833 Fax: 55588
NO: 60, (first Floor), peterson lane
(C-43842)(11-13-38) Colombo -06
e.mail: nnconsult @ sltnet.1k

# புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இல. 15 - விடைகள்

நேற்றைய உதயனில் வெளியான ஐந்தாம் தரத்துக்குரிய புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இல. 15 இற்கான விடைகள் வருமாறு

## வினாத்தாள் I

(01) 1 (02) 1 (03) 3 (04) 1 (05) 2 (06) 2
(07) 1 (08) 3 (09) 3 (10) 3 (11) 1 (12) 3
(13) 1 (14) 3 (15) 2 (16) 3 (17) 1 (18) 3

(19)  (20)  (21)  (22) 

(23) 2 (24) 3 (25) பங்குனி (26) சிங்கம் (27) குசினி (28) 2
(29) 3 (30) 1 (31) 3 (32) விமல் (33) நிமல்
(34) 1மணி 30 நிமிடம் (35) 1250ரூபா (36) 2 (37) 3
(38) 2 (39) 1 (40) 1

## வினாத்தாள் II

**1.** (1) கல்விச்சுற்றுலா (2) கண்டியை (3) கொழும்பு இந்துக் கல்லூரியிலிருந்து
(4) தலதாமாளிகை (5) பேராதனையில் (6) ஒருவர் (7) மாணவன்
(8) உண்டு (9) பின்பு (10) பிரயாணம் (11) ஆறு

**2.** (1) 4 (2) 3 (3) 5 (4) 1 (5) 6 (6) 2

**3.** (1) சிங்களவரை (2) தமிழரை (3) முஸ்லிம்களை (4) நிமிர்ந்து நிற்றல்
(5) காட்டுக்கோழி (6) நாகமரம் (7) நீலோற்பலம் (8) கரபந்தாட்டம்
(9) 6 பேர் (10) பனிக்கட்டி

**4.** (1) 130 (2) 290 Kg (3) 750 g (4) 30 ml (5) 3800 ml
(6) 67 ரூபா 50.சதம் (7) 18 ரூபா 25 சதம் (8) 30 ரூபா (9) 2475 ml (10) 32 kg

**5.** (1) பண்பாட்டலுவல்கள் திணைக்களம் (2) இரண்டாயிரத்து ஐந்து
(3) தி/சென்.மேரிஸ் கல்லூரி, திருகோணமலை (4) விழாக்குழுவினர் (5) மூன்று
(6) **Ten** (7) **Twenty** (8) **Thirty** (9) நாடகம், பாட்டு, கவிதை, நடனம்
(10) கிழக்கு மாகாணத்தில் (11) இயற்கைத் துறைமுகம்

**6. 1.** (1) 9646 (2) 720 (3) 11536 (4) 10936 (5) 525
(2) **6/8** அல்லது **3/4** (3) (சரியாக குறித்தல்)
(4) **11 375 ml** (5) 102 (6) 294
(7) **Kg g**
**21 095**
(8) **Kg g**
**4 775**
(9) 1) 15 2) 19
(10) 8.00 (11) 70 ரூபா 75 சதம் (12) 74 ரூபா 25 சதம்
(13) 294 ரூபா 75 சதம் (14) 125 ரூபா 75 சதம்

**7.** (1) பரிமளா நாமதேவன் (2) அரசடி ஈஸ்வரன் கல்லூரி (3) தரம் 5
(4) திரு.மு.நாமதேவன் (5) வட்டாரக்கல்வி அதிகாரி (6) கோகிலா நாமதேவன்
(7) ஆசிரியை (8) 2 (9) 2

**8.** (1) வானவில் (2) நிலாக்காட்சி (3) வயற்காட்சி

**9.** (1) **Shop** (2) **Money** (3) **Girl** (4) **Kite**

**10.** (1) நாடு (2) சந்தை (3) பிள்ளை (4) சாரதி

**11.** (1) அஸ (2) சுதுபாட்ட (3) ஸ்துதிய் (4) நங்கி (5) கபுடா

**12.** பொருத்தமான வசனங்கள்

### புள்ளித்திட்டம்

**வினாத்தாள் I**

40 x 2½ = 100 புள்ளிகள்

**வினாத்தாள் II**

(01) 11 புள்ளிகள் (02) 6 புள்ளிகள் (03) 10 புள்ளிகள்
(04) 10 புள்ளிகள் (05) 11 புள்ளிகள் (06) 15 புள்ளிகள்
(07) 9 புள்ளிகள் (08) 3 புள்ளிகள் (09) 4 புள்ளிகள்
(10) 4 புள்ளிகள் (11) 5 புள்ளிகள் (12) 12 புள்ளிகள்

100 புள்ளிகள்

Direct Start

1 Diploma in Microsoft Office DMO 4 months
2 Diploma in Computer Programming DCP 4 months
3 Diploma in Desktop Publishing DTP 3 months
4 Diploma in Web Design DWD 4 months
5 Diploma in Computerised Accounting DCA 3 months

A/L பரீட்சைகளின் பின்
Your Next Step @ Asian



Registered with Ministry of Vocational Education
மாணவரின் முதன்மை தெரிவு ஏசியன் !
▶ 13 ஆண்டுகள் கணினிக் கல்விச் சேவை
▶ அனுபவமிக்க பயிற்சியாளர்கள்
▶ ஒவ்வொரு மாணவரிலும் தனிப்பட்ட கவனம்
▶ இலவச பாடப் புத்தகங்கள்
▶ Transfer Facility
▶ தவணை முறைக் கட்டணங்கள்
Free Study Packs
ICM ENGLAND Recognised Certification
புதிய பிரிவுகள் ஒவ்வொரு வாரமும் ஆரம்பம்

ASIAN COMPUTER SYSTEMS

| யாழ்ப்பாணம் | சுன்னாகம் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| 2 G, ஸ்ரான்லி வீதி, Tel : 021-222 5677 | 108,K.K.S.வீதி, (Jet Motors) சுன்னாகம். Tel : 071-2501589 | கொடிகாமம் வீதி, நெல்லியடி. Tel : 077-3122198 | கண்டி வீதி, சாவகச்சேரி. Tel : 077-3039587 | கனிஷ்டியல் கல்லூரி யாழ்சாலை, கிளிநொச்சி. |


ஸ்ரீ துர்க்கா ஜோதிட நிலையம்



இந்தியாவிலிருந்து வந்துள்ள
ஸ்ரீ பாலகங்காதர சாஸ்திரிகள்
கல்வி, வியாபாரம், திருமணப் பொருத்தம், கணவன்-மனைவி உறவு, அரசியல் பிரச்சினைகள், வீடு - கடை வாஸ்து, வெளிநாட்டுப் பிரயாணம், பிள்ளைகள் பாக்கியம், ஆயுள்ரேகை, எண்கணிதம், கைரேகை மூலம் அறிந்துகொள்ள நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியது
அறை எண் 01, ரி.கே.ஏூறிஸ்ற் இன்,
இல.200, பலாலி றோட், கந்தர்மடம் சந்தி (அரசடி வீதி).
யாழ்ப்பாணம். T.P.: 021 2225680, 0776627373.(37273)(21-11-34)

COMPUTER EXPRESS
Institute of Information Technology
இல. 15, சிறாம்பியடி வீதி.யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
0777 222422, 077 3151647

Diploma In Computerized Accounting
கம்பனிக்கணக்குகளுடன்
Computerized Accounting.....!
AccPac + Quick Books Pro + MYOB
ஆகிய சர்வதேச முன்னணி Accounting Software களில் கற்பிக்கப்படும்

Course Module
- Fundamentals of IT
- Manual Accounting
- Financial Accounting
- Cost Accounting
- Taxation (Including VAT)
- Stock Control
- Bank Reconciliation
- Budgeting
- Fore Casting
- Business Planing

A\L 2005
வர்த்தகப்பிரிவு மாணவர்களிற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

80% OFF

வகுப்புக்கள் ஆரம்பம்
09/07/2005,10/07/2005
03.00-04.30 P.M

(சி-43916)

## இரங்கல் திருப்பலி

மண்ணில் 28 - 05 - 1921



விண்ணில் 16 - 06 - 2005

திருமதி
**அந்தோனிப்பிள்ளை றோசறிமரியம்மா**
**(றோசலீன்)**

16.06.2005 இந்தியாவில் இறைபதமடைந்த எங்கள் தாயார் திருமதி அந்தோனிப்பிள்ளை றோசறிமரியம்மா (றோசலீன்) அவர்களின் ஆன்ம இரங்கல் திருப்பலி 07.07.2005 மாலை 5 மணிக்கு யாழ். புனித அடைக்கல மாதா ஆலயத்தில் நடைபெற இருப்பதால், அதில் பங்குபற்றி அவர் ஆன்ம இளைப்பாற்றிக்காக ஜெபிக்கும்படியும் பின்பு வீட்டில் நடைபெறும் உபசரணையில் கலந்துகொள்ளும்படியும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

215, ஆஸ்பத்திரி வீதி, - **பிள்ளைகள்.**
யாழ்ப்பாணம்.

தகவல்: வண. **A.F.**லொசிங்ரன் **OMI** (37366)(21-11-34)

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னம்மா நமசிவாயம்



'இந்திரகிரி', வதிரி, இரும்பு மதவடியைச் சேர்ந்த திருமதி சின்னம்மா நமசிவாயம் அவர்கள் 03.07.2005 ஞாயிற்றுக்கிழமை இரவு 11 மணியளவில் தனது 99ஆவது வயதில் இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை நமசிவாயம் (மலாயன் - ஓய்வூதியர்) அவர்களின் அன்பு மனைவியும் S.N.பாலசிங்கம் (கரவெட்டி), இராஜேந்திரா (ஓய்வுபெற்ற பிரதம தபாலதிபர்-கனடா), காலஞ்சென்றவர்களான நடராஜா (நில அளவையாளர்), மகாதேவா மற்றும் தையல்நாயகி (கரவெட்டி), காலஞ்சென்ற ஜோதீஸ்வரா மற்றும் செல்வஜோதி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற பார்வதி மற்றும் விஜயலட்சுமி (பத்மாசினி - கனடா), காலஞ்சென்ற குலசிங்கம் கந்தையா (ஆசிரியர்) மற்றும் யூடி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் சீராளன், ஸ்ரீதரன், சித்ரா, ராதிகா, பிரதீபா, கீதா, கௌசிகா, ஸ்ரீபிரியா, இரவிசங்கர், நிவேதிகா, நந்திகா, ஜொனாதன், ஜெனிற்றா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் 15 பீட்டப் பிள்ளைகளின் பூட்டியும் A.V. நடராசா (அம்பாந்தோட்டை), கிருஷ்ணராசா, நாகராசா (நீதிவான்- அமெரிக்கா), நாகரெத்தினம், புவனேஸ்வரி, காலஞ்சென்ற சிவபாக்கியம் ஆகியோரின் மூத்த மாமியும் பரமேஸ்வரி சிவசுப்பிரமணியம் (ஆஸ்திரேலியா), சிவபாக்கியம் நடராசா (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் ஆகியோரின் சின்னமாமியும் பரராஜசிங்கம், சிவஞானசிங்கம், சிவராசா, இரத்தினசபா, சிவலிங்கம் ஆகியோரின் பெரிய தாயாரும் T.K.இராசலிங்கம், காலஞ்சென்ற தர்மலிங்கம் (தங்கராசா) மற்றும் T.K.ஐயாத்துரை ஆகியோரின் சிறியதாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.07.2005 திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நெல்லியடி வடக்கு, ஆலங்கட்டை மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
"இந்திரகிரி", (37453)(21-11-34-32) S.N. பாலசிங்கம் (மகன்)
இரும்பு மதவடி, திருமதி தையல்நாயகி கந்தையா (மகள்),
கரவெட்டி. நந்திகா (பேர்த்தி) (பிரதேச செயலகம், கரவெட்டி)

# காவியமான கரும்புலி மறவர்களுக்கு குடாநாடெங்கும் உணர்வு பூர்வ அஞ்சலி

யாழ்ப்பாணம்,ஜூலை6

விடுதலைப் போராட்டத்தில் தமது உயிரையும் உடலையும் ஆகுதியாக்கிய கரும்புலிகளின் நினைவுதினம் நேற்று குடாநாட்டில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்.குடாநாட்டில் வலிகாமம், தீவகம், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய பகுதிகளில் கரும்புலிகள் தினத்தையொட்டிய நிகழ்வுகள் நேற்றுக்காலை முதல் நடைபெற்றன.

குடாநாட்டின் பல முக்கிய வீதிகளின் சந்திகளில் நினைவுப் பந்தல்கள் அமைக்கப்பட்டு கரும்புலிகளின் உருவப்படங்கள் வைக்கப்பட்டிருந்தன. அவற்றுக்கு நேற்றுக் காலைமுதல் போராளிகளும் பொதுமக்களும் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்கள்.

சனசமூக நிலையங்கள், நூலகங்கள் என்பவற்றிலும் சிவப்பு மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டு கரும்புலிகளின் உருவப்படங்கள் வைக்கப்பட்டிருந்தன. கரும்புலிகள் தினத்தை நினைவு கூரும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்ததுடன் பதாகைகளும் கட்டப்பட்டிருந்தன. பல இடங்களில் சிரமதான நிகழ்வுகளும் அஞ்சலிக் கூட்டங்களும் நடைபெற்றன.

யாழ்.மத்திய பஸ் நிலையத்திற்கு முன்பாக நினைவுப் பந்தல் ஒன்று அமைக்கப்பட்டு அங்கு கரும்புலிகளின் உருவப்படங்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன. அத்துடன், கரும்புலிகளின் தியாகத்தை எடுத்துக் கூறும் தாயக எழுச்சிப் பாடல்களும் ஒலிக்க விடப்பட்டிருந்தன.

***மாணவர் பேரவையில்......***

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் கரும்புலிகள் தின நிகழ்வும் அதனையொட்டி நடத்தப்பட்ட கவிதைப் போட்டியின் பரிசளிப்பு வைபவமும் நேற்றுக்காலை 10 மணிக்கு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் தலைவர் என்.செல்வக்குமார் தலைமையில் மாணவர் பேரவை அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை யாழ்.மாவட்ட அரசியல்துறை மகளிர் பிரிவைச் சேர்ந்த பாமகள் ஏற்றிவைத்தார். ஈகச்சுடரை சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் பொறுப்பாளர் கண்ணன் ஏற்றிவைக்க மலர்மாலையை கரும்புலி தொண்டனின் சகோதரரான புவிராஜ் அணிவித்தார்.

இதனைத் தொடர்ந்து யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத் தலைவர் விஜயரூபன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன், யாழ். மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் கண்ணன், யாழ்.மாவட்டக் கல்விக் கழகப் பொறுப்பாளர் ஆர்வலன், தேசிய எழுச்சிப் பேரவையின் ஊடகப்பேச்சாளர் எஸ். கனகலிங்கன், யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இதன்பின்னர் கரும்புலிகள்தினத்தையொட்டி நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நடைபெற்றது.

யாழ்.பல்கலைக்கழகத்திலும் நேற்று கரும்புலிகள் தினத்தையொட்டிய நிகழ்வுகள் நடைபெற்றன.

**கோப்பாய் துயிலும் இல்லத்தில்...**

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் கரும்புலிகள் நினைவு நிகழ்வுகள் கோப்பாய்ப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.செம்பருத்தி தலைமையில் நடைபெற்றன.

தேசியக் கொடியை யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஏற்றிவைத்தார். பொதுச்சுடரை மாவீரர் கப்டன் கலைமதியின் தாயார் திருமதி பு.சிதம்பரம், கோப்பாய்ப் பிரதேச அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் கலையரசன் ஆகியோர் ஏற்றினர்.

ஈகச்சுடரை யாழ். மாவட்ட நிதர்சனப் பொறுப்பாளர் அப்பன் ஏற்றிவைத்தார். கரும்புலிகளின் உருவப்படங்களுக்கு வணபிதா செல்வராஜா அடிகள் மலர்மாலை அணிவித்தார். கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி முகிழ்நிலை ஆசிரிய மாணவன் பெர்னாண்டோ, யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஆகியோர் நினைவுரைகளை ஆற்றினார்கள்.

***நெல்லியடியில்...***

வடமராட்சியில் கரும்புலிகள் தின நிகழ்வு முதலாவது கரும்புலி கப்டன் மில்லர் காவியமான நெல்லியடி மத்திய மகாவித்தியாலய முன்றிலில் நேற்றுக்காலை 9 மணிக்கு நடைபெற்றது. பொதுச்சுடரை வடமராட்சி அரசியல்துறை மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் அன்புவும், தேசியக் கொடியை வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் இன்பனும் ஏற்றிவைத்தனர். கரும்புலி மில்லரின் உருவச்சிலைக்கான சுடரினை வடமராட்சி கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்பழகன் ஏற்றினார். அனர்த்த புனர்வாழ்வுச் செயலகத்தின் பணிப்பாளர் எஸ்.பாலையா மலரஞ்சலி செலுத்தினார். வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்திலும் கரும்புலிகள்தின நிகழ்வுகள் நடைபெற்றன. அங்கு பொதுச்சுடரை வடமராட்சி விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் பிரியனும் தேசியக் கொடியை வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளர் தமிழரசனும் ஏற்றிவைத்தனர். இதன் பின்னர் கரும்புலிகளின் உருவப் படங்களுக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

***தென்மராட்சியில்....***

தென்மராட்சியில் கரும்புலிகள் தின நிகழ்வு மீசாலை மாவடிப் பிள்ளையார் கோயில் முன்றிலில் காலை 9 மணிக்கு நடைபெற்றது. அங்கு கரும்புலிகளின் பொதுப்படம் வைத்து அஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர் மாலை நிகழ்வுகள் மாலை 4.30 மணிக்கு மாவடிப் பிள்ளையார் கோயில் முன்றிலில் அமைக்கப்பட்ட விசேட பந்தலில் நடைபெற்றன. முன்னதாக மீசாலைச் சந்தியிலிருந்து மாவடிப்பிள்ளையார் கோயில் நோக்கி பாண்ட் வாத்திய அணி வகுப்புடன் கரும்புலிகளின் பொதுப்படம் எடுத்துவரப்பட்டு அங்கு நினைவு நிகழ்வுகள் நடைபெற்றன. இதில் சிறப்புரைகள், கலை நிகழ்வுகளைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் மகளிர் இசைக்குழுவின் இன்னிசைகானங்கள் நிகழ்வும் இடம் பெற்றது.

தீவகத்தில் பல்வேறு இடங்களில் கரும்புலிகள் தின நிகழ்வுகள் எழுச்சியுடன் நடைபெற்றன. இந்த நிகழ்வுகளில் பெரும் எண்ணிக்கையான போராளிகள், பொதுமக்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (த-8-7-13-86-70-173)

# கரும்புலி வீரர்களின் கனவுகளை நனவாக்க தலைவரின் கரங்களைப் பலப்படுத்துவோம்!

## *கரும்புலிகள் தின நிகழ்வில் கலைவிழி உரை*

யாழ்ப்பாணம்,ஜூலை6

கரும்புலி வீரர்களின் கனவுகளை நனவாக்குவதற்காக அனைத்து தமிழ்மக்களும் எமது தேசியத் தலைவரின் கரங்களைப் பலப்படுத்த வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் யோ. கலைவிழி சர்வதேச மாணவர் பேரவையினால் நேற்று அதன் அலுவலகத்தில் நடத்தப்பட்ட கரும்புலிகள் தினநிகழ்விலும் பரிசளிப்பு விழாவிலும் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையிலே தெரிவித்ததாவது: எமது தேசிய விடுதலைப் போரில் ஆகுதியான மாவீரர்களில் தமது உடம்பினை உயிராயுதமாகக் கொண்டு கரும்புலிகள் படைத்த சாதனைகள் அளப்பரியன.

அந்த அழகு மாணிக்கங்களின் தியாகத்தினாலேதான் நாம் ஓர் எழுச்சிபெற்ற இனமாக இன்று தோற்றம் பெற்றுள்ளோம்.

இந்த எழுச்சியின் மூலமே எமது பலம் சர்வதேசத்திற்கு பறைசாற்றப்பட்டதுடன் தலைவரின் கரங்கள் மென்மேலும் பலப்படுத்தப்பட்டன.

இதன்மூலமே நாம் நெஞ்சை நிமிர்த்தி எமது உரிமைகளை கேட்கும் நிலைக்கு வளர்ந்துள்ளோம்.

இந்த நிலையில் தான் எமது தேசியத் தலைவர் அரசியல் நகர்வுகளை , மக்களின் இயல்பு வாழ்க்கையினை மேம்படுத்தும் ஒரு திட்டத்துடன் நுண்ணிப்பாக - அவதானமாக நகர்த்தி வருகின்றார்.

சிங்களப் பேரினவாதிகள் எமது மக்களை நிம்மதியாக வாழ விடுவதாக இல்லை. எந்தக் கட்டத்தில் எங்கு சறுக்கிவிடலாம் என்று கங்கணம் கட்டி நிற்கின்றனர்.

இந்த நேரத்தில்தான் எமது விடுதலைப் போராட்டம் இறுதிக் கட்டத்தை நெருங்கி விட்டது.

எமக்கென ஒரு புனிதப்பாதையினை அமைத்துத்தந்த புனிதர்களான கரும்புலிகளின் கனவு நிறைவேற வேண்டுமெனில் எமது தேசியத் தலைவரின் கரங்களை நாம் மென்மேலும் பலப்படுத்த வேண்டும் - என்றார் கலைவிழி.

நிகழ்வில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் தெரிவித்ததாவது:

1987 ஆம் ஆண்டு வான்படை, தரைப்படை சூழ்ந்து கொண்டு நெல்லியடியில் தமிழினத்தை நசுக்க முற்பட்ட வேளை தனியொரு மனிதனாக உயிராயுதமாய் மாறி வெடித்தார் கப்டன் மில்லர்.

அன்றுதான் சிங்களப் படைகள் புலிகளின் பலத்தினை அறிந்த நாள். அந்த நாள்தான் எமது எழுச்சிக்கு திறவு கோலிட்ட நாள்.

இந்தக் கரும் புலிகளின் அளப்பறிய தியாகத்தினாலே நாம் இன்று எழுச்சிபெற்ற இனமாக உருவெடுத்துள்ளோம்.

சிங்களப் பேரினவாதிகளின் இனவாதக் கொள்கைகள் இன்றும் தணிந்தபாடில்லை. திருகோணமலை புத்தர் சிலை விவகாரத்தை அதற்கு எடுத்துக் காட்டாகக் குறிப்பிடமுடியும்.

உண்மையிலே பௌத்த பிக்குகள் தமது மதத்தின் மீது கொண்ட பற்றினால் திருகோணமலையில் சிலை நிறுவவில்லை என்பது எமக்குத் தெட்டத்தெளிவாகத் தெரியும். ஏனெனில் சிலை நிறுவப்பட்ட இடம் மீன் சந்தை அமைந்துள்ள பகுதி. வேண்டுமென்றே இனவாதக் குழப்பங்களை சிங்கள அரசும் பேரினவாதிகளும் செய்து வருகின்றனர்.



இன்று பொதுக்கட்டமைப்பு விடயத்தில் ஜனாதிபதி கையொப்பமிட்டிருப்பதற்கு சர்வதேசத்தின் நெருக்குவாரங்களே காரணம். உண்மையில் முழுமனதுடன் அந்தக் கையொப்பம் இடப்படவில்லை என்பது எமக்கு நன்கு தெரியும்.

ஆனால், அவ்வாறு கையொப்பமிட்டதன் பின்னர் ஒன்றுமட்டும் தெளிவாகிறது. இங்கு இரண்டு நிர்வாகம் இருக்கிறது. சிங்கள மக்களுக்கு ஒரு நிர்வாகம், தமிழ் மக்களுக்கு ஒரு நிர்வாகம். அதற்கு எடுத்துக்காட்டாக அரசு இதுவரை இரண்டு ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டிருக்கிறது.

இரண்டு ஒப்பந்தங்களையும் புலிகளோடுதான் அரசு செய்துள்ளது.

இன்று மக்கள் சாத்வீகப் போராட்டத்தில் குதித்துள்ளனர். அவர்களுடைய உரிமைகள் மறுக்கப்படும் சந்தர்ப்பத்தில் அவர்கள் தமக்குரிய பாதையினை அமைத்துக் கொள்வார்கள். அதைத்தவிர வேறு வழியில்லை. என்றார் அவர்.

இந்த நிகழ்வில் பல்கலைக்கழக சமூகவியல்துறைத் தலைவர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் என்.விஜயகுமார், பொது அமைப்புகள் ஒன்றியத்தின் ஊடகப் பேச்சாளர் ப.கனகலிங்கம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர் (த-13)


NSB

உச்சத்திற்கு

தேசிய சேமிப்பு வங்கியின்
கவர்ச்சிகரமான புதிய வட்டி வீதம்

*தேசிய சேமிப்பு வங்கி இரண்டு வருட நிலையான வைப்புகளுக்கு கவர்ச்சிகரமான 9.4% உயர் வட்டி வழங்குகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.*

புதிய வட்டி வீதம் வருமாறு

| வைப்புக்காலம் | புதிய வட்டி வீதம் |
|---|---|
| 24 மாதம் முதிர்வு கால வட்டி | 9.4% (2வருடம்) |
| 12 மாதம் முதிர்வு காலீ வட்டி | 9% (1வருடம்) |
| 12 மாதம் மாதாந்த வட்டி | 8.7% |
| 6 மாதம் | 8.8% |
| 3 மாதம் | 8.7% |


# தென்மராட்சியில் நிதியம் ஆரம்பம்

தென்மராட்சி,ஜூலை6

வறுமை மற்றும் ஆழிப்பேரலை அனர்த்தத்தின்போது பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கென நிதியமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி கத்தோலிக்க பங்கு மக்களால் இந்நிதியம் சாவகச்சேரி கச்சாய் வீதி புனித லியோனியார் தேவாலயத்தில் ஆரம்பிக்கப்பட்டது. தேவாலய பங்குத்தந்தை அருட்திரு.ரவிச்சந்திரன் அடிகள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அருட்திரு. டேவிட் அடிகள் உட்பட பங்குமக்கள் பலர் கலந்துகொண்டனர். (3-117)

## சன்மானம் வழங்கப்படும்

பனசோனிக் கமரா மொடல் கையடக்கத் தொலைபேசி மாலுசந்திக்கும் நெல்லியடி பொலீஸ் நிலையத்துக்கும் இடையில் தவற விடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். அல்லது சிம் காட்டையாவது தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

**சதாபொன்ஸ்,**
அல்வாய் கிழக்கு, அல்வாய். (சி/43895)(11-13)

## ஸ்ரீ மலையாள பகவதி ஜோதிடாலயம்

பண்டிதர் **நரசிம்ம நாயுடு**

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வருகைதந்துள்ளார் சர்வதேச ஜோதிடர். இவர் கைரேகை மூலமாக - நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், கல்வி, கணவன் - மனைவி ஒன்று சேர்தல், வெளிநாட்டுப் பயணம் பற்றியும் மற்றும் எதிர்காலப் பலன்களையும் அறிந்துகொள்ள நாடுங்கள்: (37324)

**பிள்ளையார் இன்** அறை எண் 9, (26-11-34)
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 077 9122836.


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி ந.முகிலினி
அவர்களின் அன்புத் தந்தை

### த.கணேசலிங்கம்

*அவர்களின் மரணச் செய்திகேட்டு நாம் ஆறாத்துயர் அடைகின்றோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

**யா/ திருக்குடும்ப கன்னியர் மடம்,**
**அதிபர், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள்.**
தொடர்பு: 024 2220444 (37382)(24-13)

## மரண அறிவித்தல்

### இளையதம்பி குணரத்தினம்

முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும் நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி குணரத்தினம் (வாசு) 04-07-2005 திங்கட்கிழமை நெல்லியடியில் அகால மரணமானார்.

அன்னார் முள்ளியவளையைச் சேர்ந்த திரு. திருமதி இளையதம்பியின் அன்பு மகனும் கரணவாயைச் சேர்ந்த அமரர் தங்கவேல் மற்றும் திருமதி தங்கவேல் ஆகியோரின் அன்பு மருமகனும் புஸ்பமலரின் அன்புக் கணவரும் நிவேதன், விதுயா ஆகியோரின் பாசமிகு தந்தையும் புஸ்பவதி, ஜெயலட்சுமி, காலஞ்சென்ற டாக்டர் பராசக்தி குணதாசன் (பொறியியலாளர் R.D.A, Colombo), ஜெயலலிதா (பொறியியலாளர் U.A.E) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06-07-2005) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் முள்ளியவளையில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

*முள்ளியவளை,*
*முல்லைத்தீவு.* (37383)(24-13-11)

தகவல்:
**இ.குணதாசன் (ரவி)**
(சகோதரன்).

## லக்ஸ்பிறேயின் விலை அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை6

400 கிராம் லக்ஸ்பிறே பால்மாவின் விலை 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த விலை அதிகரிப்புக்கான அனுமதியை பாவனையாளர் விவகார அதிகார சபை வழங்கியுள்ளது.

இதேவேளை -

ஒரு கிலோ கிராம் லக்ஸ்பிறே பால்மாவின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

உலகச் சந்தையில் பால்மாவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து இவ் விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (202)

## சிறுவனைக் காணவில்லை: ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஜூலை6

பாடசாலை மாணவன் ஒருவரை கடந்த 27 ஆம் திகதி முதல் காணவில்லை என மனித உரிமைகள் ஆணைக்குழுவில் கடந்த புதன்கிழமை முறையிடப்பட்டுள்ளது.

திருஞானசம்பந்தர் வீதி, சங்கரத்தை, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சுரேந்திரன் ரதிமோகன் (வயது -9) என்ற சிறுவனையே காணவில்லை என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (204-203)

## திருநாள் ஆராதனை

குருநகர்,ஜூலை6

புல்லாவெளி, புனித செபஸ்தியார் ஆலய வருடாந்த திருநாள் ஆராதனைகள் இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றன.

நாளை வியாழக்கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணை வழிபாடும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் திருச்சொருபப் பவனியும் ஆலயப் பங்குக் குரவர் அருட்திரு அன்ரனிதாஸ் அடிகளார் தலைமையில் நடைபெறவுள்ளன. (த-51)


**P4 கணனிகள் கொழும்பை ஒத்த விலைக்கே. பிரமிக்கத்தக்க சலுகைகளுடன்**
**UNIT**


## இன்றைய ஆட்டம்

யாழ்.மாவட்ட விளையாட்டுத் துறையின் அனுசரணையுடன் தென்மராட்சி விளையாட்டுப் பேரவை கைதடி மேற்கு விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் நடத்திவரும் வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

* மாலை 6.30 மணிக்கு - வேம்பிராய் பாரதி வி.க. எதிர் குமரநகர் வி.க.
* இரவு 7.30 மணி - அருள் வி.க. எதிர் முடியப்பு வி.க. (3-203)

## விபத்தில் காயம்

பருத்தித்துறை, யாழ்ப்பாணம் வீதி, கோப்பாய் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் —சைக்கிள் விபத்தில்ஒருவர் படுகாயமடைந்தார்.

சைக்கிளை ஓட்டிச் சென்றவரான கோப்பாய் மத்தியைச் சேர்ந்த எஸ். திருச்செல்வம் (வயது 56) என்பவரே படுகாய மடைந்தவராவார். (3-15)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராயப்பு மரியமுத்து

ஒட்டகபுலத்தைப் பிறப்பிடமாகவும் கைத்தொழிற் பேட்டை வீதி, அச்சுவேலியைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராயப்பு மரியமுத்து 05.07.2005 செவ்வாய்க்கிழமை கால மாகிவிட்டார்.

இவர் காலஞ் சென்ற சுவாம்பிள்ளை இராயப்புவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அமிர்தநாயகி, நீக்கிலாப்பிள்ளை, திரேசம்மா ஆகியோரின் சகோதரியும் அன்ரனி மரியதாஸ், செபமாலை நாயகம் (பிரான்ஸ்), றோஸ்மலர், அல்பேட் ஜெயராஜா (லண்டன்) காலஞ்சென்ற புனிதமலர் ஆகியோரின் பாசமிகு தாயாரும் தங்கராணி, ஜெயந்தினி (பிரான்ஸ்), பாலேந்திரா, றோஸ்மலர் (லண்டன்) ஆகியோரின் மாமியும் அற்புதமலரின் சிறியதாயாரும் காலஞ்சென்றவர்களான வஸ்தியாம்பிள்ளை, இரத்தினம், பேரின்பநாயகம் மற்றும் எலிசம்மா அமிர்தநாயகம், பிலோமினா ஆகியோரின் மைத்துனியும் பிரான்சிஸ் (APBH யாழ்), சைலஜா, பவான் சுயாதா (பிரான்ஸ்), ரஜீவ் (NIIT மாணவன்), உதயன், சிபாணி (பிரான்ஸ்), டனிசியஸ், தர்ஷன், டண்ஸ்ரன், சாரா (பிரான்ஸ்), சபின், எவ்லின், கெவின் (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும் ஜனு, செபோன், செறோணி (பிரான்ஸ்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

இவரது நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கைத்தொழிற்பேட்டை வீதி,*
*அச்சுவேலி.* (37377)(11-13)

தகவல்:
**பிள்ளைகள்**

### திருமதி பழனியப்பா வரதலட்சுமி



(வேவி அக்கா)

புளியங்கூடல் ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பழனியப்பா வரதலட்சுமி அவர்கள் (01-07-2005) வெள்ளிக்கிழமை ஜேர்மனியில் இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற இராசையா - இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் பழனியப்பா (பரமநாதன் - இளைப்பாறிய கூட்டுறவு பரிசோதகர்) அவர்களின் அன்பு மனைவியும் சுமதி (Germany), Dr. சுரேஷ் (களுபோவில வைத்தியாசலை), கணேஷ் (பொறியியலாளர் - Australia), வதனி (கொழும்பு), ரமேஷ் (பொறியியலாளர் - CEB) ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்வநாயகம் (Germany), அகிலா (கொழும்பு), மதுரா (M.Sc. Australia), சுதர்ஷன் (பொறியியலாளர் - RDA, கொழும்பு), Dr.யசோதா (பாணாந்துறை வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும் சபாநாயகம், செல்வநாயகம், இராமசந்திரன், புவனேஸ்வரி, புஷ்பவதி, வரதராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் கமலாணி, லீலாவதி (Canada), புஸ்பராணி, அருட்செல்வம் (NSPS, Pettah), பத்மினி, திருமதி பத்மநாதன் (Canada), திருமதி பொன்னுத்துரை (Holland), திருமதி தனபாலசிங்கம் (Canada), திருமதி மாணிக்கம் (Canada), திருமதி பாலசிங்கம் (Canada) ஆகியோரின் மைத்துனியும் கோபிகா, கோகுலன், கௌசிகா, சங்கவி, ரிஷி, ராம், வத்ஸன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07-07-2005) வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் 51-1/1, கொலிங்வூட் பிளேஸ், வெள்ளவத்தையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். பின்னர் பூதவுடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு கனத்தை இந்துமயானத்தில் தனகஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

51-1/1, Collingwood place,
Wellawatta.
T.P.: 011 - 2361124, 0714 - 815313.

தகவல்:
**Dr.சுரேஸ்**
**(மகன்)**

### திருமதி சத்தியவதி சேனாதிராஜா

யாழ்ப்பாணம், கந்தர்மடத்தைச் சேர்ந்த திருமதி சத்தியவதி சேனாதிராஜா லண்டனில் காலமானார்.

அன்னார் Dr.சண்முகம் சேனாதிராஜாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான Dr.நாகலிங்கம் கோபாலப்பிள்ளை- சரஸ்வதி கோபாலபிள்ளை ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி சண்முகம் - மனோன்மணி சண்முகம் ஆகியோரின் மூத்த மருமகளும் தேவதாசன் (HARROW), Dr.சங்கரநாராயணன் (GAMPAHA), சிவஞானம் (ஞானி- மலேசியா IPOM) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சித்ரா, மீரா ஆகியோரின் அன்புத் தாயாரும் பாலேந்திரன் (ஹரி) அவர்களின் அன்புப் பெரியம்மாவும் பேரின்பநாதன், Dr.கதிர்காமநாதன், கல்பனா ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி றோஸ் தேவதாசன், திருமதி மல்லிகா சங்கரநாராயணன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் சிவபாக்கியம் சுவாமிநாதன், காலஞ்சென்றவர்களான கனகலிங்கம், அமிர்தலிங்கம் மற்றும் கமலாம்பிகை தவனேஸ் (New Jersey U.S.A.), காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் சற்குணநாதன் (Colombo), சிவயோகேஸ்வரி நித்தியானந்தன் (Jaffna), பற்குணநாதன் (Sydney), பத்மாவதி ஸ்ரீகாந்தா (Sydney), வாமதேவன் (Sydney) ஆகியோரின் அன்பு அண்ணியும் வர்மன், பவன், சேயோன் சாயகி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் HENDON CREMATORIUM HOLDERS HILL ROAD, MILL HILL MW-7 INB மயானத்திலுள்ள SOUTH CHAPEL மண்டபத்தில் 07-07-2005 வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணி தொடக்கம் 3 மணிவரையில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 3.15 மணிக்கு HENDON மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*45, ELM DRIVE,*
*NORTH HARROW,*
*MIDDX HA2 7 By*
*U.K.* (C/43022)(24-11-13)

தகவல்:
Dr.**சண்முகம் சேனாதிராஜா (கணவர்),**
**சு.பேரின்பநாதன் (மருமகன்).**
Tel. No.: 02084249724 LONDON
Dr. **தி.கதிர்காமநாதன் (மருமகன்).**
Tel. No.: 02084271022 LONDON

## Jayoda ஜயோதா ජයෝදා

### உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6133991 முதல் 6147183 வரை சீட்டிழுப்பு இல. 147 திகதி 04-7-2005

வெற்றி எண்கள் **9 4 9 8 2 3** சுப்பர் எண் **17**

சுப்பர் ஜக்பொட் பரிசு 2,98,45,200/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 2,98,45,200/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 12 | 50,000/- | 6,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 119 | 5,000/- | 5,95,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,164 | 500/- | 5,82,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 11,710 | 50/- | 5,85,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 115,983 | 10/- | 11,59,830/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 15 | 5,000/- | 75,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 115 | 1,000/- | 1,15,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,171 | 100/- | 1,17,100/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 11,593 | 20/- | 2,31,860/- |
| | | மொத்தம் | 56,63,890/- |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/- | 6,02,890/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 62,66,492/- |

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. **3,01,70,625/-**

தொடர் இல. 708525 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 ஜூலை 07 ஆம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

**அபிவிருத்தி லொத்தர் சபை**
இல. 33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ரூபா 75,325/- பெறுமதியான லட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| நுவரெலியா | 6134382-7-35 |
| கொழும்பு | 6146425-3-87 |
| இரத்தினபுரி | 6143504-5-27 |
| மட்டக்களப்பு | 6137514-4-93 |
| மாத்தறை | 6134780-1-82 |
| மாத்தளை | 6141803-8-20 |
| பொலன்னறுவை | 6139215-3-65 |
| குருநாகல் | 6142776-2-83 |

# ஜேர்மன், பிரான்ஸ், சுவிஸ் நாடுகளைச் சேர்ந்த தாயக உதைபந்தாட்ட அணிகள் மாத இறுதியில் வன்னி வருகின்றன

கிளிநொச்சி,ஜூலை6

தமிழர் தாயகப் பகுதியில் இடம்பெறவிருக்கும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகளில் பங்குபற்றுவதற்காக ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ் ஆகிய நாடுகளில் இருந்து தாயக அணிகள் இம்மாத இறுதியில் வரவிருக்கின்றன.

தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் இ.பாப்பா இதனைத் தெரிவித்தார்.

புலம்பெயர்ந்து அந்த நாடுகளில் வாழும் தமிழர்கள் அங்கம் பெறும் தாயக அணிகள் பல்வேறு ஆட்டங்களில் பங்குபற்றுவதற்காக வருகின்றன.

விக்ரர் நினைவாக நடத்தப்படவிருக்கும் உதைபந்தாட்டச் சுற்று போட்டியிலும் இந்த அணிகள் பங்குபற்றும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த அணிகள் கிளிநொச்சி, யாழ்ப்பாணப் மாவட்டங்களில் உள்ள பல கழகங்களுடன் சிநேகபூர்வ ஆட்டங்களிலும் பங்குபற்றவிருக்கின்றன.

கடந்த வருடமும் தாயக அணிகள் கிளிநொச்சி, யாழ்ப்பாணத்தில் பல ஆட்டங்களில் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (3)

## உடற்கல்வி டிப்ளோமாதாரர்களுக்கு

யாழ்ப்பாணம்,ஜூலை6

உடற்கல்வி டிப்ளோமா பட்டதாரிகளுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நீராவியடி பிறைற்மன் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் வடமேல் மாகாண நியமனம் தொடர்பாகக் கலந்துரையாடப்படவுள்ளதால் உடற்கல்வி டிப்ளோமா பட்டதாரிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு உடற்கல்வி டிப்ளோமாப் பட்டதாரிகள் சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (3-203)

விளையாட்டு

## விக்னேஸ்வராவை வென்றது வல்வெட்டி ஒற்றுமை அணி

யாழ்ப்பாணம்,ஜூலை6

தமிழீழ விளையாட்டுத்துறையின் வடமராட்சிப் பிரிவின் ஆதரவுடன் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வல்வெட்டி ஒற்றுமை வி.கவும் விக்னேஸ்வர வி.கவும் மோதிய ஆட்டத்தில் வல்வெட்டி ஒற்றுமை வி.க வெற்றிபெற்றது.

ஆரம்பம் முதல் மிக விறுவிறுப்பாக நடந்த இந்த ஆட்டத்தில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோல்களைப் போட்டதால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

சமநிலை உடைப்பு உதை வழங்கப்பட்டதில் ஒற்றுமை அணி ஒருகோலைப் போட்டதால் 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ஒற்றுமை அணி வீரர் எம்.சிவகுமார் வெற்றிக்கான கோலைப் போட்டார். (3)

## சென்.ஜோன்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், ஜுலை6

சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற 17 வயதுப் பிரிவு ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து விக்ரோறியாக் கல்லூரி அணி மோதியதில் சென்.ஜோன்ஸ்வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோனஸ் கல்லூரி அணி சகலவிக்கெட்டினையும் இழந்து 137 ஓட்டங்களைப் பெற்றது. நேசவர்மன் 76 ஓட்டங்களையும் ரகுலன் 16 ஓட்டங்களைப் பெற்றனர்.

சுதர்சன் 5 விக்கெட்டினையும் சிவதாஸ் 2 விக்கெட்டினையும் கோவர்த்தனன் 2விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய விக்ரோறியாக்கல்லூரி அணி சகல விக்கெட்டினையும் இழந்து 121 ஓட்டங்களைப் பெற்றது.

கஜேந்திரன் 55 ஓட்டங்களையும், பிரணவன் 29 ஓட்டங்களையும் கரன் 16 ஓட்டங்களையும் பெற்றனர்.

அக்சேயன் 6 விக்கெட்டினையும், தினேஸ்குமார், கிருஸ்சன் ஆகியோர் தலா 2 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இரண்டாவது இனிங்ஸில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 3 விக்கெட்டினை இழந்து 101 ஓட்டங்களைப் பெற்றது.

நேசவர்மன் 16 ஓட்டங்களையும், பார்த்தீபன் 19 ஓட்டங்களையும், கௌதமன் ஆட்டம் இழக்காமல் 37 ஓட்டங்களையும் பெற்றனர்.

சிவதாஸ் 2 விக்கெட்டினையும், சுதர்சன் ஒருவிக்கெட்டினையும் வீழ்த்தினர். (3-190)

## சென்.பற்றிக்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம்,ஜூலை6

யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற 17 வயதுப் பிரிவு ஆட்டத்தில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதியதில் சென்.பற்றிக்ஸ் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி சகல விக்கெட்டினையும் இழந்து 141 ஓட்டங்களைப் பெற்றது. ஜெயந்திரன் 31 ஓட்டங்களையும் ஜீனத்ராஜ் 30 ஓட்டங்களையும் மரிக்குமார் 27 ஓட்டங்களை யும் லுட்சன் 24 ஓட்டங்களையும் தமது அணிக் காகப் பெற்றுக் கொடுத்தனர்.

சிந்துஷன் 5 விக்கெட்டினையும், கௌசிகன் 3 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக் கல்லூரி அணியினர் சகல விக்கெட்டினையும் இழந்து 90 ஓட்டங்களைப் பெற்றனர்.

நவயூகன் 57 ஓட்டங்களை தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தார்.

விதுபாலா 4 விக்கெட்டினையும், கொலின் 3 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இரண்டாவது இனிங்சில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 7 விக்கெட்டினை இழந்து 128 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தினை இடைநிறுத்திக்கொண்டது.

ஜெயந்திரன் ஆட்டம் இழக்காமல் 56 ஓட்டங்களையும், லுட்சன் 30 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர். அமேஸ்கான் 3 விக்கெட்டினையும், யாதவன் 2 விக்கெட்டினையும் வீழ்த்தினர். யாழ்.இந்துக் கல்லூரி அணியினர் தமது இரண்டாவது இனிங்சில் 4 விக்கெட்டினை இழந்து 66 ஓட்டங்களைப் பெற்றனர்.

மயூரப்பிரியன் 22 ஓட்டங்களையும், நவயூகன் ஆட்டம் இழக்காமல் 19 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர். லுட்சன் 14 ஓட்டங்களைப் கொடுத்து 3 விக்கெட்டினை வீழ்த்தினார். (190)



## இங்கிலாந்திற்கு எதிரான ஒருநாள் தொடரில் பதிலடி கொடுப்போம் என்கிறார் பொன்ரிங்

இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். இதில் நாட் வெஸ்ட் முத்தரப்புத் தொடரில் அந்த அணி யிடம் பெற்ற தோல்விகளுக்குப் பதிலடி கொடுப்போம் - என ஆஸ்திரேலிய அணித் தலைவர் ரிக்கி பொன்ரிங் கூறியுள்ளார்.

இங்கிலாந்து வந்துள்ள ஆஸ்திரேலிய அணி முத்தரப்பு மற்றும் மூன்று ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. இத்தொடர் முடிந்ததும் 5 ஆட்டங்களைக் கொண்ட ஆஷஸ் தொடரில் விளையாடுகிறது.

முத்தரப்புத் தொடரின் இறுதியாட்டம் சம நிலையில் முடிந்தது. இதனால் சம்பியன் கிண்ணம் இரு அணிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது. இந்த முடிவு ஆஸ்திரேலியாவுக்கு கடும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு, அடுத்ததாக நடக்கவுள்ள ஒருநாள் தொடரில் பதிலடி தருவோம் என ஆஸ்திரேலிய அணித் தலைவர் பொன்ரிங் கூறியுள்ளார். இது குறித்து அவர் கருத்து தெரிவிக்கையில்-

லோர்ட்ஸ் மைதானத்தில் 196 ஓட்ட இலக்கு என்பது கடினமானது. தொடக்கத்தில் இங்கிலாந்து அணி 5 விக்கெட்டுக்களை இழந்ததும் வெற்றி கிடைத்துவிடும் என எதிர்பார்த்தேன். ஆனால், ஜோன்ஸ், கொலிங்வுட் ஆகிய இரு வரும் இணைந்து ஆட்டத்தின் முடிவையே மாற்றிவிடடனர்.

இதில் வெற்றிபெறாதது ஏமாற்றமளிக்கிறது. ஆனாலும் கிரிக்கெட் வரலாற்றில் இது ஒரு மகத்தான ஆட்டம். சுவாரஸ்யமான ஆட்டங்களில் இந்த ஆட்டமும் ஒன்று. அடுத்ததாக நடக்கவுள்ள ஒருநாள் தொடரை ஆவலுடன் எதிர்பார்த்துள்ளேன். முத்தரப்புத் தொடரில் இங்கிலாந்திடம் பெற்ற தோல்விகளுக்கு பதிலடி கொடுக்க காத்திருக்கிறோம். - என்றார்.

ஒருநாள் தொடரின் ஆட்ட அட்டவணை விவரம் வருமாறு:-

| நாள் | அணிகள் | மைதானம் |
|---|---|---|
| ஜூலை 7 | இங்கிலாந்து - | ஆஸிஹெடிங்லி |
| ஜூலை 10 | இங்கிலாந்து- | ஆஸி.லோர்ட்ஸ் |
| ஜூலை12 | இங்கிலாந்து - | ஆஸி.ஓவல் |

(க-3)

## யாழ்.மாவட்ட மெய்வன்மை போட்டி முடிவுகள்

வலிகாமம் தெற்கு, ஜூலை6

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற மெய்வன்மைப் போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

இந்த முடிவுகளின்படி 11,13,15 வயதுக்குட்பட்டோர் பிரிவுகளில் வெற்றிபெற்றோர் விவரம் வருமாறு-

### 11வயதுப் பிரிவு

#### ஆண்கள்

***75 மீற்றர்*** - வி.மதியுகன் - கோப்பாய் சரவணபவ மகாவித்தியாலயம் , எஸ்.கஸ்ரன் - புலோலி கிழக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, ர.விதுசன் - சென்.ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.

***100 மீற்றர்*** - எஸ்.கஸ்ரன் - புலோலி கிழக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, வி.மதியுகன் - கோப்பாய் சரவணபவ மகா வித்தியாலயம், ர.விதுசன் - சென்.ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.

***உயரம்பாய்தல்*** - ஜெ.மயூரன் - உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் - க.ஜசிந்தன் - மிருசுவில் அரசினர் தமிழக்கலவன் பாடசாலை, ஜெ.ஜனந்தன் - மகாஜனக் கல்லூரி, க.சுதர்சன் - பெரியபுலம் மகாவித்தியாலயம்.

***நீளம்பாய்தல்*** - அ.ஜெயப்பிரியன் , தொண்டைமானாறு வி.எம்.வித்தியாலயம், ம.கௌரங்கன் - சென்.ஜோன்ஸ் பொஸ்கோ, ஜெ.ஜெனந்தன் - மகாஜனக்கல்லூரி.

#### பெண்கள்

***75 மீற்றர்*** - யோ.டிலக்சனா - சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை, த.தர்சிகா - சாவகச்சேரி மகளிர் கல்லூரி, பு.சுதர்சனா - மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம்.

***100 மீற்றர்*** - யோ.டிலக்சனா - சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை, வி.சங்கீர்த்தனா - சாவகச்சேரி இந்து ஆரம்பப்பாடசாலை, வெ.துர்க்கா - நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்.

***உயரம்பாய்தல்*** - அ.மேரிஜனனி - அல்வாய் வடக்கு றோமன் கத்தோலிக்க பாடசாலை - ஆர் .ஆர்.பிரியந்தா ராஜப்பிரியா - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, வே.யோகமைலினி - வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி .

***நீளம் பாய்தல்*** - பா.அபிராமி - வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி, வே.யோகமைலினி - வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி, அ.மேரி ஜனனி - அல்வாய் வடக்கு றோமன் கத்தோலிக்க பாடசாலை.

### 13 வயதுப் பிரிவு

#### ஆண்கள்

***100 மீற்றர்*** - செ.ஜெனகன் - பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி, அ.கபாஸ்கரன் - சென்.பற்றிக்ஸ் கல்லூரி, வ.சதுர்சன் - மீசாலை வீரசிங்கம் ம.வி.

***200 மீற்றர்*** - ஐ.டிலக்சன் - சென்.ஹென்றியரசர் கல்லூரி, எ.அரிகரன் நெல்லியடி ம.ம.வி., யு.சாயிராம் யூனியன் கல்லூரி.

***உயரம் பாய்தல்*** - வதுசனன் - யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி , இ.தர்சிகன் - உடுப்பிட்டி அ.மெ.மி.க., ரி.தனுசன் - வேலணை.

***நீளம்பாய்தல்*** - ர.நிருஜன் - அளவெட்டி அருணாசலம் வித்தி., அ.அரிகரன் - நெல்லியடி ம.ம.வி., வ.சதுர்சன் - மீசாலை வீரசிங்கம் ம.வி.

#### பெண்கள்

***100 மீற்றர்*** - த.மதுரா திருக்குடும்பக் கன்னியர் மடம், வி.கார்த்திகா - அத்தியார் இந்துக்கல்லூரி , சி.கோபிகா - கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தி.

***200 மீற்றர்*** - த.மதுரா - திருக்குடும்ப கன்னியர் மடம்,வி.கார்த்திகா - அத்தியார் இந்துக் கல்லூரி, உ.துஷ்யந்தினி - நவாலி மகாவித்தி.

***உயரம்பாய்தல்*** - ச.சத்தியபாமா - கச்சாய் அ.த.க.பா., ர.சகானா - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, சி.மிதுலா - உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை - ***நீளம்பாய்தல்*** - ந.யசோதா - மட்டுவில் சரஸ்வதி வித்தி., ம.மாதுளனி - வல்வை சிவகுரு வித்தி. , யோ.நிலுசா - பெரியபுலம் மகாவித்தி.

### 15 வயதுப் பிரிவு

#### ஆண்கள்

***100 மீற்றர்*** - க.பாலமுரளி - சென்.ஜோன்ஸ் கல்லூரி, பா.ஜோன்அனிஸ்ரன் - யூனியன் கல்லூரி, த.சசீலன் - வடமராட்சி ஞானாசாரியார் கல்லூரி.

***200 மீற்றர்*** - சி.கோமளதரன் - வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி , ரி.சசீலன் - வடமராட்சி ஞானாசாரியார் கல்லூரி, ஆர்.அருள்ராஜ் - வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகாவித்தி.

***400 மீற்றர்*** - சி.கோமளதரன் - வட்டு. யாழ்ப்பாணக்கல்லூரி, க.கஜமுகானந்தன் - உடுப்பிட்டி அ.மெ.மி.கல்லூரி, இ.அருள்ராஜ் - வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசாமி மதிய மகாவித்தி.

***உயரம்பாய்தல்*** - உ.ராகுல் - நல்லூர் ஸ்ரேசன் சி.சி.த.க. பாடசாலை, பூ.பாலசங்கர் - யாழ்.மத்திய கல்லூரி, ரி.மோகனராஜ் - மீசாலை விக்னேஸ்வரா வித்தி.

***நீளம்பாய்தல்*** - எம்.கஜன்ராஜ் - வடமராட்சி விக்னேஸ்வரா வித்தி., ரி.சசீலன் - வடமராட்சி ஞானாசாரியார் கல்லூரி, எஸ்.சிந்துஜன் - சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

***ஈட்டி எறிதல்*** - ஜெ.சிந்துஜன் - ஹாட்லிக்கல்லூரி, சி.செந்தூரன் - இணுவில் இந்துக்கல்லூரி, தே.நிரோஜன் - யாழ்.மத்திய கல்லூரி.

***குண்டெறிதல்*** - வ.ஹரிகரன் - ஹாட்லிக்கல்லூரி, ரி.மனோராஜ் - ஹாட்லிக்கல்லூரி,க.பிரகாஸ் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

***தட்டெறிதல்*** - வ.ஹரிகரன் - ஹாட்லிக் கல்லூரி, யோ.யஸ்ரின் டயோ - வசாவிளான் மத்திய மகாவித்தி., சி.நிரோஸ்குமார் - பொலிகண்டி அ.த.க. பாடசாலை .

***100 மீற்றர் தடைதாண்டல்*** - ப.நிரோசன் - கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, செ.ஜெனகன் - யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, கு.ஜெயக்குமார் - மூளாய் சைவப்பிரகாச வித்தி.

#### பெண்கள்

***100 மீற்றர்*** - ஜோ.பிறிஸ்கில்லா - கோப்பாய் நாவலர் வித்தி., சு.பகீரதி - மெதடிஸ்த மகளிர் கல்லூரி, எ.யஸ்மிலா - சென்.அன்ரனிஸ் பெண்கள் கல்லூரி.

***200 மீற்றர்*** - ஜோ.பிறிஸ்கில்லா - கோப்பாய் நாவலர் வித்தி, எ.யஸ்மிலா - சென்.அன்ரனிஸ் பெண்கள் கல்லூரி. பு.டோபிகா - கைதடி - நாவற்குளி அ.த.க.பாடசாலை.

***உயரம்பாய்தல்*** - உ.மருஷா - புங்குடுதீவு சுப்பிரமணியம் வித்தியாலயம், சுகன்யா - வல்வை சிதம்பராக் கல்லூரி , அ.மோறின்ரூபனா - யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மடம்.

***நீளம்பாய்தல்*** - ச.பானுஜா - யாழ்.இந்து மகளிர் கல்லூரி , யோ.தேமிகா - வட இந்து மகளிர் கல்லூரி , ச.நிர்திகா - யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி .

***குண்டெறிதல்*** - பா.அன்பினி - மகாஜனாக்கல்லூரி, த.தர்மினி - வல்வை சிதம்பராக்கல்லூரி, செ.மோகனா - வடமராட்சி விக்னேஸ்வராக் கல்லூரி,

***தட்டெறிதல்*** - ச.பகீரதி - வடமராட்சி வட இந்து மகளிர் கல்லூரி, தி.மேகலா - விக்டோரியாக் கல்லூரி, சி.பபிதா - நெல்லியடி மத்திய மகாவித்தி.

***ஈட்டிஎறிதல்***- ந.சுபாஜினி - மகாஜனக் கல்லூரி ச.யசோதா - வாதரவத்தை விக்கினேஸ்வரா கல்லூரி, சி.தமிழினி - வரணி மகாவித்தியாலயம்.

***100 மீற்றர் தடைதாண்டல்*** - உ.சோபினி - யாழ்.இந்து மகளிர் கல்லூரி, ஞா.ஜானகி வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி, அ.அனுசியா - பண்டத்தரிப்பு ஜசிந்தா கல்லூரி.

(வளரும்) (3-152)

## UDUVIL GIRLS' COLLEGE

Old Girls who are interested in following specialized Computer courses conducted in Collaboration with IDM computer studies are invited to a workshop on Thursday 7th of July 2005 at 8.30 A.M. in the College hall.

Principal,
Uduvil Girls' College.

(சி-43894)(26-19-34)

## மரண அறிவித்தல்

### ஜோன் சண்முகம் கிறிஸ்ததாஸ்

(ஓய்வுபெற்ற ஆசிரியர், J.P.)



அல்வாய் மேற்கு, மடத்துக்கடவையைப் பிறப்பிடமாகவும், தங்கமாலை வசிப்பிடமாகக் கொண்ட ஜோன் சண்முகம் கிறிஸ்ததாஸ் (இளைப்பாறிய ஆசிரியர், J.P.) அவர்கள் 04.07.2005 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோன் சண்முகம், தங்கச்சிப்பிள்ளையின் மகனும் காலஞ்சென்றவர்களான வ.தே.சின்னத்துரை, இளையதங்கத்தின் மருமகனும் காலஞ்சென்ற J.S. சத்தியநாதனின் சகோதரனும் நேசமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நேசராஜன், சுபாஜினி (இத்தாலி), சுகந்தினி (ஜேர்மனி), ராஜ்குமார் (ஜேர்மனி), சுதர்மினி, ரஞ்சித்குமார் (பிரான்ஸ்), லலிதா, ரமேஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வராஜா, பரமதாஸ், சுபாஜினி, சாள்ஸ் புனிதவளன் (பிரதேச செயலகம், பூநகரி) சனா ஆகியோரின் மாமனாரும் சத்தியராஜன், மயூதரன், மனோஷா, மாருதியின் பெரியதந்தையும் தேவகுமார், தேவமணியின் மைத்துனரும் மனோகரன், ஆனந்தியின் சகலனும் றொசான், நர்மதன், பரமசுதன், பியூலா, திசான், கிருசாளி, சாரோன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'தங்கமால்',
*அல்வாய் தெற்கு, அல்வாய்.*

தகவல்:
**சாள்ஸ் புனிதவளன்** (மருமகன்)
T.P.:-226-3921

(37362)(32.34.19.26)

## பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் கலந்துரையாடல்

பேராதனைப் பல்கலைக்கழக 3ஆம் வருட பொறியியல் பீட மாணவர்களுக்கான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (3-202)

## மயான அபிவிருத்திச் சபை வாரஇறுதியில் அங்குரார்ப்பணம்

சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்துக்கு அபிவிருத்திச்சபை ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் கடந்த 3ஆம் திகதி அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் நகரசபை வட்டார ரீதியில் தலா ஒருவர் வீதம் 11 பேர் உட்பட 17 பேர் நிர்வாக உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். (து-117)

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

External Degree
2005, 2006 பிரிவுகளுக்கானது
(Jaffna University)

G.A.Q. | 1st in Com. | B.A. | B.Com

Minimum Requirement: G.C.E. A/L 3 Passes
ஆரம்பம்: 09-07-2005

CIMA
Foundation Level & Intermediate Level
Medium English
Minimum Requirement: G.C.E. O/L (3C) Passes
ஆரம்பம்: 17-07-2005

aat (SriLanka)
Foundation Level, Intermediate Level & Final
Medium: Tamil & English Exam: Jan. 2006
Minimum Requirement: G.C.E. O/L 5 Passes or G.C.E.A/L 2 Passes
ஆரம்பம்: 17-07-2005 Medium: English & Tamil

Further Details: **Director,**
**Jaffna College Undergraduate Dept.**
464, Hospital Road
(Near Commercial Bank), Jaffna.
(சி-43754)

## இன்னும் 4 நாட்களே உள்ளன! விரையுங்கள்!

**Mega**
கொம்ப்யூட்டர் உயர் கல்விக்கான
புலமைப்பரிசில் பரீட்சை
10-07-2005 ஞாயிறு
இலவச அனுமதிகளுக்கு
ASIAN COMPUTERS
• யாழ்ப்பாணம் • சுன்னாகம் • சாவகச்சேரி
• நெல்லியடி • கிளிநொச்சி

## வேலணை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

### கட்டட வேலை கேள்வி அறிவித்தல்

*மேற்படி சங்கத்தின் மூன்று வேலிகளும் கற்தூண்கள் செய்து முட்கம்பி இழுத்து வேலி அமைப்பதற்கும் முன்பக்கம் (ஒரு பக்கம்) 100 அடி கொண்ட மதில் அமைப்பதற்குமான வேலைகளின் கூலிகளுக்கான கேள்வி அறிவித்தல் கோரப்படுகின்றது.*

1. கேள்வி அறிவித்தலுக்கான விண்ணப்பப் பத்திரங்களை அலுவலகத்தில் 10/= செலுத்திப் பெற்றுக்கொள்ளவேண்டும்.
2. விண்ணப்ப முடிவு திகதி: 15-07-2005 பி.ப.4 மணி வரை.
3. வேலைகளுக்கான விவரங்களைச் சங்க அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

வேலணை மேற்கு - 06.

தலைவர்,
**வேலணை ப.தெ.வ.அ.கூ.சங்கம்.**

(37353)(26.19.34)

## 31 ஆம் நாள் நினைவுகளில்...



திருமதி
### கந்தையா செல்லாச்சி

மலர்வு: 11-02-1934 உதிர்வு: 06-06-2005

எமது சங்க உறுப்பினர் **க.ஜெபராசா (V.R.ரவி)** அவர்களின் தாயார் **திருமதி கந்தையா செல்லாச்சி** அவர்களின் மரணச் செய்தி அறிந்து துயரடைவதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**மீசாலைக் கைத்தொழில் வணிகர் மன்றம்.**

மீசாலை. (37361)(26-19-34)

## இன்னும் நீங்கள் தாமதிக்கின்றீர்களா!

A/L தகைமைகளுடன் மாத்திரம் வெளிநாட்டு உயர்கல்வியினைப் பெற முயற்சி செய்கின்ற மாணவர்களில் அனேகமானோர் பிரபலபல்கலைக்கழகங்களில் அனுமதிபெறுவதிலும் (Admission) உயர்கல்விக்கான Visaக்களைப் பெறுவதிலும் தவறிவிடுகின்றனர். சர்வதேச அங்கீகாரமுள்ள EDEXCEL, UK வழங்கும் BTEC HND தகைமை உலகின் பிரசித்தி பெற்ற பல பல்கலைக்கழகங்களில் B.Sc (Hons) பட்டப்படிப்பின் இறுதியாண்டிற்கான நேரடி அனுமதியைப் பெற்றுத்தருவதோடு உயர்கல்விக்கான Visaக்களையும் உறுதிசெய்கின்றது.



**சி. றமணன்**
**யாழ்ப்பாணம்.**

G.C.E உயர்தர பரீட்சையை முடித்ததும் அடுத்து என்ன செய்வதென்று அறியாது குழம்பிய நிலையில் இருந்த போது IIS நிறுவனம் Edexcel இன் HND கற்கைநெறியினை எமது சொந்த மண்ணிலேயே வழங்க முன்வந்திருந்தது இச் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி என்னையும் HND கற்கைநெறியில் இணைத்துக்கொண்டேன். சிறுபராயம் முதல் இருந்து வந்த கணனிக்கல்வி தொடர்பான எனது ஆவல் A/L கல்வியை முடித்த வேளையில் ஓர் பூரண கற்கைநெறியைத் தேர்ந்தெடுத்து கணணித்துறையில் ஓர் வல்லுனராக வர வேண்டும் என்ற நிலையில் வளர்ச்சி கண்டிருந்தது என் ஆவலையும் நான் கொண்டிருந்த இலக்கையும் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் Edexcel இன் HND கற்கை நெறி அமைந்திருந்தது இரண்டு வருடங்களிற்கு சமமான பல்கலைக்கழகக் கற்கைநெறியினை முடித்துத் தற்பொழுது மூன்றாம் வருடத்தினைத் தொடர்வதற்கு பிரித்தானியாவில் உள்ள Middlesex பல்கலைக் கழகத்தில் கல்வியினைத் தொடர்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த IIS நிறுவனத்திற்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.



**வை.தர்மிந்**
**சங்கானை**

2002ஆம் ஆண்டு A/L பரீட்சை எழுதிய எனக்குப் பல்கலைக்கழக அனுமதி கைநழுவிப்போன நிலையில் IIS நிறுவனத்தில் என் எதிர்காலத்தையிட்டு ஏங்கிய நிலையில், IIS நிறுவனத்தினால் நடாத்தப்படும் London Edexcel நிறுவனத்தின் HND கற்கை நெறியைப்பற்றி அறிந்தேன். இக்கற்கை நெறியானது குறுகிய காலத்தில் ஓர் கணனிப் பட்டதாரியாகக் கூடிய வாய்ப்பினை ஏற்படுத்தித் தருகின்றது. அத்துடன் வெளிநாட்டு உயர்கல்வி ஒன்றிற்கான வாய்ப்பினை அளிப்பது குடாநாட்டு மாணவர்களுக்கு ஓர் வரப்பிரசாதமாகும். அத்துடன் 3ஆம் வருடக்கல்வியை கொழும்பில் SLIIT நிறுவனத்தில் மேற்கொள்ளக் கூடியதாக இருப்பது இக்கற்கை நெறியின் ஓர் சிறப்பம்சமாகும். HND கற்கைநெறியை எமது சொந்தமண்ணிலேயே மேற்கொள்ள ஓர் வாய்ப்பு எமக்கு கிடைத்தது மிக மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

## BTEC HND

World Class Qualifications

*Delivered Locally....... Recognised Globally*

**B.Sc ( Hons ) / BEng ( Hons )**
1 year at leading Universities in UK, USA, Australia, Canada etc.

↑

**BTEC HND**
Computing / Software Engineering / Business Information Technology ( 1 ½ years )

↑

**GCE A/L**
with 2 Subjects

**IIS நிறுவனம் தற்போது மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது**

edexcel
INTERNATIONAL
Approved Training Centre

## IIS CITY CAMPUS

\# 181, Navalar Road, Jaffna.
TP No.: 021 222 8060 / 021 222 2201

## கண்ணீர் அஞ்சலி



### கந்தையா சிவபாலன்

எம்மரும் வங்கி இங்கு உயர்ந்திட வழிகள் செய்தாய்
இன்புறு சேவை செய்து இனிமையாய் பேசி நிற்பாய்
நின்னரும் சேவையாலே வங்கி நிலைத்திட வழிசமைத்தாய்!
புன்னகை ஈந்தெமக்கு புதியவர் பலரைத் தந்தாய்
இன்னமும் நாமுயர இருக்குது பணிகள் இங்கே
எங்கு நாம் தேடினாலும் கிடைத்திடா தூரம் சென்றீர்.

*இலங்கை வங்கி.*
*காங்கேசன்துறை.*
(37352)(26-19-34)

பிரிவால் துயரும்:
**முகாமையாளரும், ஊழியர்களும்**

## ஓராண்டு நினைவு தினம்

அன்னை மடியில் 07 - 07 - 1975



ஆண்டவன் அடியில் 17 - 06 - 2004

### கந்தையா சிவகுமார் (செல்வம்)

திதி: அமாவாசை

ஆண்டொன்று சென்றதையா
அன்புருவே உமைத் தொலைத்து
ஆறவில்லை எம் துயரம்
ஆதரவு யார் எமக்கு?
சிவகுமார் என்றும் எம் செல்வமே!
உனது ஆன்மா
சிவபதம் அடைந்திடவே
தெய்வத்தின் திருவடியை
தினமும் வேண்டுகின்றோம்.

வராகி அம்மன் கோயிலடி,
கொக்குவில் மேற்கு.
கொக்குவில். (37333)(26-19-34)

*நீங்காத நினைவில்:*
**- குடும்பத்தினர்.**

## நிருவாக சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான
திறந்த போட்டிப் பரீட்சை வகுப்புகள்

•பொதுவிவேகம்
•பொது அறிவு } த.தவசேகர் (B.Sc. P.G.D.E.)

•கட்டுரையும் சுருக்கமும்
பா.மகாலிங்கசிவம் B.A.(Hons)

| இடம் | நாள்களும் நேரமும் |
|---|---|
| D.M.I. யாழ்நகர் | பிரிவு I செவ்.,புத., வியா. 4.30 - 6.30 ஆரம்பம்: 07.07.2005 வியாழன் 4.30 |
| (37357) | பிரிவு II சனி 3-6 ஞாயிறு 8-11 ஆரம்பம்: 09.07.2005 சனி 3.00 |
| கிறிஸ்ரல் நெல்லியடி. | திங்கள், வெள்ளி, ஞாயிறு 4-6 ஆரம்பம்: 10.07.2005 ஞாயிறு 4 |

## D.C.C.A.
101/10, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
யாழ்/ பேராதனை வெளிவாரி விரிவுரை
1st in Com., G.A.Q.
2006 புதிய பிரிவு

கணக்கீடு - N.சதீஸ்
வர்த்தகம் - S.யசோ
பொருளியல் - E.G.வரன்
கணிதம் - T.தவசேகர்
தமிழ் - P.பாலமுரளி
இ.நா. - S.முகுந்தன்
அரசியல் - பொன்.சந்துரு
மெய்யியல் - K.T.மோகன்
புவியியல் - K.கிரிதரன்
நாடகம் - M.அருள்சந்திரன்
ஆங்கிலம் - P. மதன்

ஆரம்பம்: 10.07.2005
ஞாயிறு காலை 8.00
(C743909)


## புற்றுநோய் சிகிச்சை

புற்றுநோய் வைத்திய நிபுணர் டாக்டர் என். ஜெயக்குமாரன் கடந்த முதலாம் திகதி தொடக்கம் புற்றுநோய் சிகிச்சைகளை பல்வேறு இடங்களில் ஆரம்பித்துள்ளார்.

தெல்லிப்பழை மாவட்டவைத்தியசாலைப் புற்றுநேய் சிகிச்சைப் பிரிவில் வாராந்தம் திங்கள், வெள்ளிக்கிழமைகளிலும் - பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் மாதாந்தம் முதலாவது புதன்கிழமைகளிலும் - சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் மாதாநதம் இரண்டாவது புதன்கிழமைகளிலும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் மாதாந்தம் நான்காவது புதன்கிழமைகளிலும் புற்றுநோய்க்கான சிகிச்சைகளை டாக்டர் என். ஜெயக்குமாரன் வழங்குவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-203)


## Dialog டயலொக்

100/=, 400/=, 1000/= விலைகளில் கையடக்கத் தொலைபேசி அட்டைகளையும் Sim இணைப்புகளையும், மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள -

சகல விதமான தொலைபேசி அட்டைகளையும் இணைப்புகளையும் (Connection) மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும் சகல தபால் அலுவலக சேவைகள், துரித தபால் சேவைகள், உள்நாட்டு வெளிநாட்டுப் பொதிகள் (Parcel) சேவைகள்

kit எந்நேரமும் உன்னுடன்...

WESTERN UNION பணப் பரிமாற்றம்

உலகின் எப்பாகத்தில் இருந்தும் ஒரு சில நிமிடங்களில் பணத்தைப் பெற்றுக்கொள்ளவும். இன்னும் பல சேவைகளையும் ஒரு கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடுங்கள்:

**Sri Murugan**
Tele Communication & Agenc Post Office,
303, K.K.S. Road, Jaffna.
T.P.: 021 222 5392, Fax: 222 3214
(சி-43929) (29-14-12-45)


## கண்ணீர் அஞ்சலி

அமரர் **கந்தையா சிவபாலன் (CK)**

(முகாமையாளர், இலங்கை வங்கி, காங்கேசன்துறை)

இலங்கை வங்கியின் பல கிளைகளிலும் கடமையாற்றி அன்பாகவும் பண்பாகவும் கலகலப்பாகவும் எம்மோடு பழகி எல்லோரது நன்மதிப்பையும் பெற்ற அன்னாரது திடீர் மறைவு எம்மைத் தாங்கொணா துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

அன்னாரது மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினரிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இலங்கை வங்கி,
திருநெல்வேலி. (37400) (12-14-29-45)
முகாமையாளரும் ஊழியர்களும்.


## Internet Cafe for Sale

சர்வதேச தொலைபேசி இணைப்புடன் எவ்விடத்திலும் ஆரம்பிக்கக்கூடிய நிலையில் Internet Cafe விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0776 176476
(37399)


## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

யா/முத்துத்தம்பி மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத்தால் நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

முதலாம் பரிசில் 5367
இரண்டாம் பரிசில் 3825
மூன்றாம் பரிசில் 5152

ஆறுதல் பரிசில்களுக்குரிய இலக்கங்கள்
4262, 5967, 3764, 4668, 2509, 5003, 301ь, 4384, 5309, 4175, 5646, 7216, 3553, 4636, 4301, 4178, 6945, 3842, 5693, 7029

பழைய மாணவர் சங்கம் (37388)
யா/ முத்துத்தம்பி ம.வி., திருநெல்வேலி.

## கண்ணீர் அஞ்சலி



**கந்தையா சிவபாலன்**

(முகாமையாளர், இலங்கை வங்கி, காங்கேசன்துறை) அவர்கள் இலங்கை வங்கி, சுன்னாகம் கிளையில் கடமை புரிந்து இலங்கை வங்கி, காங்கேசன்துறைக் கிளைக்கு முகாமையாளராக மாற்றலாகி, 03.07.2005 அன்று அமரத்துவமடைந்த கநதையா சிவபாலன் (CK) அவர்களின் திடீர் மறைவையறிந்து மிகவுந் துயருறுவதுடன் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம். அவரின் ஆத்மா நற்சாந்தியுற வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முகாமையாளரும், ஊழியர்களும்
இலங்கை வங்கி - சுன்னாகம்.
(37376) (12-14-29-45)




## திருமணக் கார்

வாடகைக்கு (குளிரூட்டியது)

திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்) விசேட நிகழ்வுகள், சுற்றுலா போன்ற அனைத்துத் தேவைகளுக்கும் நவீன புத்தம்புதிய கார் வாடகைக்குக் கிடைக்கும்.
தொடர்பு: ஜெயரட்ணம் 'யாழ்வாச்'
55, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 0776 991805 (37381) (12-14-29-45)

## நாதன்ஸ் சினிமா

ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம். குளிரூட்டப்பட்டது.
சத்தியராஜ், சுனிதாவர்மா, வடிவேல் நடித்த
**6'.2''** (ரீல்ஸ்)
கா.நே.: 10.30,2.30,6.30,9.30. (பு.நே.)
வெகுவிரைவில் அர்ஜுன், சினேகா நடித்த **சின்னா**
(சி-43363)

## ராஜா யாழ்ப்பாணம்

ரஜனிகாந்த், பிரபு, ஜோதிகா, நயன்தாரா, வடிவேல் நடித்த
**சந்திரமுகி** (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 10.30,2.30, 6.30, 9.30 (பு.நே.)
அடுத்த வெளியீடு **பெப்ரவரி 14**
(C41381)(12-17)


## நாகம்ஸ் சினிமா சுன்னாகம்


சுனாமி போன்ற பல இயற்கைப் பேரழிவுகளை சித்திரிக்கும்
**DAY AFTER TOMORROW**
(தமிழ்) (நாளை மறுநாள்) (ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 3.00, 7.00 (பு.நே).
(C41380)(29-16)

## UNIT

முதன்முறையாக எமது தாயக மண்ணில் அதியுயர் திறன் கொண்ட பலநோக்கு

HOME THEATER SHOW





உலகத்தரம் மற்றும் உங்கள் கைவிருப்புக்கேற்ற விலைகளில்
மனதைக் கொள்ளை கொள்ளும் அளவுகள், அமைப்புக்கள் மற்றும் வண்ணங்கள்

இன்று ஆர்டர் செய்பவர்களுக்கு
DVD/VCD PLAYER FREE
347, K.K.S Road, Manohara Theatre Junction, Jaffna.


# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவகுரு நாகரத்தினம்

வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் அராலி மத்தியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவகுரு நாகரத்தினம் அவர்கள் நேற்று (05.07.2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த பவுண் பொன்னம்பலம் தம்பதியினரின் மகளும் அராலியைச் சேர்ந்த அ.சி.சோமசுந்தரம் - சிவகுருவின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.07.2005) புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அராலி மத்தி,*
*வட்டுக்கோட்டை.* (37396) (12-17-33)

தகவல்:
பிள்ளைகள்,
சண்முகநாதன் - கந்தராசா
(மருமகன்).

## தொம்மைப்பிள்ளை சூசைப்பிள்ளை



சென்.ஜேம்ஸ் வீதி, பண்டத்தரிப்பைச் சேர்ந்தவரான தொம்மைப்பிள்ளை சூசைப்பிள்ளை அவர்கள் 02.07.2005 சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் மேரிராணி (இராசாத்தி) அவர்களின் அன்புக் கணவரும் வசந்தி, யனசி, ஜெயா, சாந்தி, றுயினி ஆகியோரின் அன்புத் தந்தையும் குணம், ஜெயநாதன், அமலதாஸ், விமலன், ஜோகன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (07.07.2005) வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு பண்டத்தரிப்பு சென்.ஜேம்ஸ் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பண்டத்தரிப்பு.* (37393) (12-17-33)

தகவல்:
அமலதாஸ்
(மருமகன்).

## திருமதி கந்தையா நல்லம்மா

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் சில்லாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா நல்லம்மா அவர்கள் 04.07.2005 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் நந்தினி, மாலினி, நந்தகுமார், செந்தில்செல்வம், இந்திராணி, நவமலர், தவமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான பவளம், இராசதுரை, செவ்வந்தி மற்றும் பாய்க்கியம், கமலாம்பாள், லோகாம்பாள் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.07.2005) புதன்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, அவரது பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சேந்தான்குளம் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அம்மன் வீதி,*
*சில்லாலை,*
*பண்டத்தரிப்பு.* (37389)(29-14-12-45)

தகவல்:
இ.முகுந்தன்
(மருமகன்).

## காசியர் செல்வரட்ணம்



மானிப்பாய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காசியர் செல்வரட்ணம் 03.07.2005 ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற காசியர் - வள்ளியம்மையின் அன்பு மகனும் மனோன்மணியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற கதிர்காமு - பார்வதியின் மருமகனும் சிவகுமார், சந்திரன் (உரிமையாளர், ரேவதி ஸ்ரூடியோ, கொழும்பு -15) சித்திரா, பிரபாகரன் ஆகியோரின் அன்பு அப்பாவும் தசாந்தவதி, வனஜா, பரமேஸ்வரன், சுபாஜினி ஆகியோரின் மாமனும் காலஞ்சென்ற கந்தையா, சரசம்மா, அன்னம்மா ஆகியோரின் சகோதரனும் நிவேத், நிசானா, கயானா, துசானா, செபிசா, கரீஸ், கோஸிகா, சங்கீதா, துளசி ஆகியோரின் பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.07.2005) வியாழக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மானிப்பாய் கிழக்கு,*
*மானிப்பாய்.*
T.P.: 0777 710958 (37391)(29-14-12-45)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



தோற்றம் 26-03-1924
மறைவு 06-06-2005

திருமதி
**கந்தையா செல்லம்மா**
(பூமணி)

கடந்த 06.06.2005 அன்று காலமான திருமதி கந்தையா செல்லம்மா (பூமணி) அவர்களின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றியோர், தந்தி, தொலைநகல் மூலம் அஞ்சலி செலுத்தியோர் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, அன்னாரது தற்காலிக இல்லத்தில் இன்று (06.07.2005) புதன்கிழமை நடைபெறும ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.255, மாடாசாமி கோயில் வீதி,
வவுனியா. (37393)(29-14-12-45)

தகவல்:
திருமதி சச்சிதானந்தம் (மருமகள்).
பிள்ளைகள். பேரப்பிள்ளைகள். பூட்டப்பிள்ளைகள்.

# கரும் புலிகளின் பலத்திலேயே வெற்றியை நோக்கி செல்கிறோம்

## நெல்லியடி நிகழ்வில் இளம்பரிதி



கரவெட்டி,ஜூலை6

கரும்புலிகள் என்ற உயிராயிதங்களின் பலத்திலே தமிழ் தேசியம் தனது வெற்றியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது. என்று விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி தெரிவித்தார்.

நெல்லியடியில் நேற்றிரவு நடந்த கரும்புலிகள் நினைவு எழுச்சிக் கூட்டத்தில் பேசுகையில் இதைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நாட்டிலே சிங்களவர் தங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்குத் தீர்வுகாண வேண்டுமானால், எங்களைப் புறக்கணிக்க முடியாது. எங்கள் தேவையும் நிறைவு செய்யப்படும்போது தான் அதற்கான வழிகள் திறக்கப்படும்.

எங்களை அழித்துவிட்டு இலங்கைத் தீவை, சிங்கள - பௌத்த பூமியாக்க அவர்கள் முனைந்தால், அது சாத்தியப்படாது. அவர்கள் இலங்கைத்தீவில் இன்னொரு பகுதியிலே, சிங்கள பௌத்த மக்களாக இருக்கவேண்டுமானால் எங்கள் தாயகத்தில் நாங்கள் தமிழ்த் தேசிய மக்களாக இருப்பதற்கான சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும். இது உருவாக்கப்படாவிட்டால் அது இல்லை.

ஏனெனில் எங்களுக்கென நிலம் வைத்திருக்கின்றோம். எமக்கென பலத்தை வைத்திருக்கின்றோம். எமக்கென சரியான தலைமைத்துவம் இருக்கின்றது. 24மணி நேரம் எங்களுக்காக தொடர்ச்சியாக எங்கள் எதிர்காலம் குறித்து சிந்தித்துக் கொண்டிருக்கின்ற தலைமை எங்களுக்கு இருக்கின்றது.

ஆனால், சிங்களவர்களுக்கு அப்படியான தலைமை இல்லை. உருவாகப் போவதுமில்லை. எனவே எங்கள் தலைமையைப் பெற்றதற்காக பெருமைப்படுவோம். அவருடைய காலத்திலேயே விடுதலைப் போராட்டத்தை விரிவுபடுத்தி வெற்றிபெறுவோம். அந்த உறுதியை நாங்கள் எடுக்கவேண்டும். அவ்வாறான ஒருகட்டத்திலேயே இருக்கின்றோம்.

கரும்புலிகள் என்ற உயிராயிதங்களின் பலத்திலே தமிழ்த் தேசியம் தனது வெற்றியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது.

கடந்த 3 ஆண்டுகளாக நாம் பொறுத்திருந்து கொண்டிருக்கிறோம். கபடம் நிறைகின்ற சிங்கள பௌத்த பேரினவாதத்தின் உண்மையை - யதார்த்தத்தை - புரிந்துகொள்ளும் என எதிர்பார்க்கின்றோம். ஆனால் அதற்கு எதிர் மாறாக அவர்களின் போக்குகள் இருக்கின்றன.

இராணுவ நெருக்குவாரங்கள் அகற்றப்பட்டனவா? படுகொலைகள் நிறுத்தப்பட்டனவா? சிண்டங்கள் குறைந்துகொண்டிருக்கின்றனவா? இல்லை இல்லை.

யுத்த நிறுத்த உடன்படிக்கையை இருதரப்பும் ஏற்றுக்கொண்டபடி, நாங்கள் கடைப்பிடிக்கின்றோம். ஆனால், திட்டமிட்ட நாசகார நோக்கில் அவர்கள் நடவடிக்கைகள் அமைகின்றன.

யுத்தமும் இல்லை, சமாதானமும் இல்லை, தீர்வும் இல்லை மாறாக இழப்புக்களே அதிகரிக்கின்றன. நெருக்கடிகளே கூடுகின்றன. இதனை நாங்கள் விரும்பவில்லை. எமது மக்களும் விரும்பவில்லை. சர்வதேசமும் விரும்பவில்லை. எமதுதலைமை விரும்பவில்லை.

இந்த நிலையில் சிங்கள அரசு எமது பிரச்சினைக்குத் தீர்வு தருமா? மதிப்பளிக்குமா? எல்லாம் கேள்வியாகவே இருக்கின்றது.

இந்த 14 நாள்களுக்குள் தீர்வை வைக்காவிட்டால். அடுத்த கட்டம் என்ன? அடுத்த நிலை என்ன? இதை நாம் தெளிவாகக் கூறியுள்ளோம். அதுஎன்னவென்றால் நாங்கள் மீண்டும் பழைய நிலைக்குச் செல்வோம். யுத்த நிறுத்தத்துக்கு முன் எவ்வாறு போக்குவரத்து இருந்தனவோ அவ்வாறான ஒழுங்குக்குள் போவது தவிர்க்கப்பட முடியாதது - என்றார் அவர். (3-70)

### புலிகளின் ஆதரவும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரவு எட்டு மணிமுதல் மூன்று மணி நேரம் நடைபெற்ற இந்தக் கூட்டத்தின்போது ஜனாதிபதி இவ்வாறு உறுதிப்படக் கூறினார்.

ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்ந்து ஆட்சியமைத்தமை மகா மடத்தனமென்றும், இதனால், நாட்டை அபிவிருத்தி செய்வதற்கிருந்த பல பொன்னான சந்தர்ப்பங்களை அரசு நழுவவிட்டுவிட்டதாகவும் ஜனாதிபதி இந்தக் கூட்டத்தின்போது கவலை வெளியிட்டார்.

இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி மேலும் கூறியிருப்பதாவது:-

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னம் 15 மாத காலம் இருக்கின்றது. என்றாலும் அதற்கு முன்னதாக உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்கள் நடைபெறும். எனவே, ஜனாதிபதித் தேர்தல் பற்றிச் சிந்தித்து நேரத்தை விரயமாக்காமல் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கவேண்டும்.

அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்காக அரசு போதியளவு நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளும்.

ஜே.வி.பியுடன் ஒன்றாக இருந்த காரணத்தினால் கடந்த காலங்களில் அபிவிருத்திச் செயற்பாடுகளைக் கிரமமாக மேற்கொள்ள முடியாமற்போயிற்று, இனியும் நாம் தாமதிக்கக்கூடாது.

அரசு கவிழும் என்ற பேச்சுக்கே இடமில்லை. அரசைக் கொண்டுநடத்துவற்குத் தேவையான முழுயான ஆதரவை வழங்குவதற்கு விடுதலைப் புலிகள் உறுதியளித்துள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இதற்கான ஒத்துழைப்பை வழங்குவர். எனவே, ஆட்சியைப் பற்றிக் கவலைப்படாமல் மக்களுககான சேவையை முன்னெடுங்கள்.

- இவ்வாறு ஜனாதிபதி அங்கு மேலும் தெரிவித்திருக்கின்றார் என அறியவந்தது. (க-3)

### கரும்புலி மில்லரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புடைசூழ பேரணியாக நெல்லியடி மத்திய மகாவித்தியாலய கரும்புலி மில்லரின் நினைவுத்தூபிச் சதுக்கத்தை வந்தடைந்தது.

அங்கு கப்டன் மில்லர் தாக்குதல் நடத்திய நேரமான இரவு 7.35 மணியளவில் யாழ்மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, கப்டன் மில்லரின் தாயார் திருமதி கமலாதேவி வல்லிபுரம் ஆகியோர் முறையே பொதுச சுடரையும், ஈகைச்சுடரையும் ஏற்றினார்கள். கப்டன் மில்லரின் உருவச்சிலைக்கு அவரது தாயார், கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான விநாயகம், மாவீரர் பணிமனை துணைப பொறுப்பாளர் இனியவன், இந்துமதகுரு பிரம்மஸ்ரீ ரவீந்திரசர்மா, சுனாமி செயலணி இணைப்பாளர் பாலையா, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் ஆகியோர் மலர்மாலை அணிவித்தனர்.

தொடர்ந்து மில்லரின் நினைவுக்கல்லுக்கு ஈகச்சுடரை உடுப்பிட்டிப் பொறுப்பாளர் ரமேஷ் ஏற்றினார். வடமராட்சி மாவீரர் பணிமனைப் பொறுப்ாளர் தமிழரசன் மலர்மாலை அணிவிததார். அடுத்து நினைவுத் தூபிச் சதுக்கத்தில் சிகர சோடனையுடன் அமைக்கப்பட்ட பந்தலில் வைக்கப்பட்டிருந்த கரும்புலிகளின் உருவப்படங்களுக்கு உறவினர்கள் சுடரேற்றி மலர்மாலை அணிவித்தனர்.

அதன் பின்னர் கரும்புலிகளின் நினைவுதின அரங்க நிகழ்வுகள் கரும்புலி மில்லர் நினைவுக்குழு உறுப்பினர் வி.செல்வராஜா தலைமையில் ஆரம்பமாகின. இந்நிகழ்வில் கரும்புலிகள் ஞாபகார்த்தமாக இரு ஒலிப்பேழைகள் வெளியிடப்பட்டன. கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான விநாயகம், யாழ்.மாவட்ட அரசியல்துறைப், பொறுப்பாளா சி.இளமபரிதி, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் ஆகியோர் உரையாற்றினர். (3-70-173)

### சிவராம் கொலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுத்தார். அதற்கு, மன்றில் ஆஜராகியிருந்த கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவின் உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் பாலித்த பெர்னாண்டோ எதிர்ப்புத் தெரிவித்தார்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேகநபரின் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதால் அவரை மற்றுமொரு சிறைச்சாலைக்கு மாற்றுமாறு அவர் சார்பிலான சட்டத்தரணி விடுத்த கோரிக்கைக்குப் பதிலளித்த நீதிவான் கொழும்பு பிரதம நீதிவானிடம் மனுவொன்றைச் சமர்ப்பித்து இதற்கான உத்தரவைப் பெற்றுக்கொள்ளுமாறு பணித்தார்.

சந்தேகநபரிடமிருந்து கைப்பற்றப்பட்ட துப்பாக்கி மற்றும் ரவைகளை அரச பகுப்பாய்வாளர் திணைக்களத்தில் சமர்ப்பித்து அறிகையொன்றைப் பெறுமாறும் நீதிவான் பொலீஸாருக்கு உத்தரவிட்டார். (க-3)

### உதவியாகக் கிடைத்த..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயன்படுத்தி கடற்றொழிலை மீள ஆரம்பிப்பதற்குப் பதிலாக அவற்றை விற்பனை செயது வருகின்றனர் என்றும் தகவல் கிடைத்துள்ளது. இந்த விடயத்தில் தரகர்கள் செயற்படுவதாகவும் கூறப்படுகின்றது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் முடங்கிப் போய்விட்ட கடற்றொழிலை மீண்டும் கட்டி எழுப்பவேண்டும் என்ற நோக்குடன் தொண்டு நிறுவனங்களின் உதவிகள் பெறப்பட்டுவருகின்றன. அந்நிறுவனங்கள் வழங்கும் உதவப் பொருள்களைப் பணம் சம்பாதிக்கும் நோக்கல் விற்பனை செய்வதால் அந்நிறுவனங்கள் தப்பபிப்பிராயம் கொள்ளலாம்.

இதன் காரணமாக உதவிகள் கிடைப்பதில் பெரும் பாதிப்பு ஏற்படும் சாத்தியம் உள்ளது.

எனவே, கிடைக்கும் உதவிப் பொருள்களை விற்பனை செய்யவேண்டாம் என அன்பாக வேண்டுகின்றேன்.

- இவ்வாறு அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

தொண்டு நிறுவனங்களால் வழங்கப்பட்ட வள்ளங்கள், படகுகள் போன்ற உபகரணங்களை வைத்திருப்போர் அவை தமக்குத் தேவையில்லை எனக் கருதும் பட்சத்தில் அவற்றை மீனவர் சங்கங்களிடம் கையளிக்குமாறும் அரச அதிபர் கேட்டுள்ளார். (ஐ-3)

### பாணந்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யஸ்தரான லெப்டினன்ட் கேணல் முத்தலிப்பின் கொலையுடன் தொடர்புடையவர்கள் என்று பொலீஸார் சந்தேகிக்கின்றனர் என ஒரு தகவல் தெரிவித்தது.

### பொலன்னறுவையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னறுவையில் சிகை அலங்கரிப்பு நிலையம் நடத்திவருகிறார் என்றும் - தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் நடந்த தினம் இரவு, வழமை போன்று கடையை மூடிவிட்டு பின்புறமாக இரவுச்சமையலில் அவர் ஈடுபட்டிருந்த போது மோட்டர் சைக்கிளில்வந்த இருவர் அவரைச் சுட்டுக்கொன்று விட்டுத் தப்பிச் சென்றுவிட்டனர் என்று பொலீஸார் தெரிவித்தனர். விசாரணைகள் தொடர்ந்து இடம் பெற்றுவருகின்றது. (க-3)

## மரண அறிவித்தல்கள்

### சந்தியாப்பிள்ளை லோறன்ஸ் இராஜநாயகம்

மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சந்தியாப்பிள்ளை, லோறன்ஸ் இராஜநாயகம் நேற்று (05.07.2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.07.2005) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மிருசுவில் புனித நிக்கிலார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு மிருசுவில் புனித நிக்கிலார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.:38,*
*மாட்டீன் ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.* (37403) (45-12-25-30)

தகவல்:
திரு. திருமதி ஜெயபதி நிலாந்தி.

### திருமதி நாகேசு புவனேஸ்வரி

புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கட்டப்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேசு புவனேஸ்வரி அவர்கள் நேற்று (05.07.2005) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கட்டப்பிராய்,*
*கோப்பாய் தெற்கு, கோப்பாய்.* (37402) (45-12-25-30)

தகவல்:
வினோதன்
(நித்தி - மருமகன்)

### வைத்திலிங்கம் குலசேகரம்பிள்ளை (விஜயன்)

சரவணையைப் பிறப்பிடமாகவும் நெடுந்தீவை வாழ்விடமாகவும் 268, ஸ்கந்தபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் குலசேகரம்பிள்ளை 03.07.2005 இல் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.07.2005) வியாழக்கிழமை பகல் 11 மணியளவில் ஸ்கந்தபுரத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*268, ஸ்கந்தபுரம்,*
*கிளிநொச்சி.* (37404) (45-12-25)

தகவல்:
மகன் - ஈசன்.

COLLEGE OF ENGLISH
பிறவுண் வீதி, யாழ்.
SPOKEN ENGLISH
GRAMMAR
bY:
T.THANENDRAN
புதிய பிரிவு 07.07.2005
Thu, Fri 4.30 p.m.
(37401)

கலையகம்
ஆவரங்கால்
SPOKEN ENGLISH
BY: BRITTO
ஆரம்பம்:-
08-07-2005
வெள்ளி 11.a.m.
(ப.நே.)
திங்கள், வெள்ளி
(37371)(11 a.m.)

MCS
ஐ. நா
அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனி மயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தினர் விசேட கணனிப் பயிற்சித் திட்டம் ஒன்றை முன் வைத்துள்ளார்கள்.
பதிவுகள் 08/07/2005 இற்கு முன் நேரில்
இலவசக்கணனிப்பயிற்சி
324, பலாலிவீதி, யாழ்ப்பாணம் (ஆலடிச்சந்தி அருகே, மேல்மாடியில்)
Supported By UNDP/JRRP Supported By UNDP/JRRP Supported By UNDP/JRRP

EXPOAIR your friend in the skies...
எக்ஸ்போ ஏயார் வானத்தில் உங்கள் நண்பன்...





தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.07.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.